Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 | கதிர் : 320 | ஞாயிற்றுக்கிழமை | புரட்டாதி 31ஆம் நாள் 17 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+16 | விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் பேசுவது பயங்கரவாதிகளுடன் பேசுவதற்கு ஒப்பானதாம்

### இலங்கை அரசு 'பல்டி'

கொழும்பு, ஒக்ரோபர் 17

புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் பேச்சு நடத்தப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்திருந்தாலும், இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களுடனோ அல்லது தனிநபர்களுடனோ பேச்சு நடத்தப்படமாட்டாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த அமைப்புக்களுடன் பேசுவது பயங்கரவாதிகளுடன் பேசுவதற்கு ஒப்பானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 15

## 23 பேர் சாவு!

கொழும்பு, ஒக். 17

இலங்கையில் கொரோனாத் தொற்றால் மேலும் 23 பேர் சாவடைந்துள்ளனர். அத் 15

## கோத்தாவின் அழைப்புக்காக காத்திருக்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்குரிய அழைப்பு ஜனாதிபதி கோத்தாபயவிடமிருந்து இன்னமும் வரவில்லை. அழைப்புக் கிடைத்தால் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். இந்த மாதம் 31ஆம் திகதி பிரிட்டனுக்குச் செல்லும் ஜனாதிபதி கோத்தாபய அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் தமிழ்த் 15

## பிரபாகரன் இப்போது இருந்திருந்தால் இந்தியா, சீனா கால்பதித்திருக்காது

### சிங்கள கடும்போக்கு அமைப்பின் தலைவர் டான் பிரசாட் தெரிவிப்பு




கொழும்பு, ஒக். 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால், நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்க மாட்டாது. அத்துடன் இந்தி 15

## கடதாசி அச்சிடும் இயந்திரமாக மத்திய வங்கி

கொழும்பு, ஒக். 17

இலங்கை மத்திய வங்கியானது கடதாசி அச்சிடும் இயந்திரமாக மாறி 15



## ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புக்கு வருகை

### இந்தியா தீவிர கவனம்

கொழும்பு, ஒக். 17

ரஷ்ய நாட்டு கடற்படைக்குச் சொந்தமான இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும், போர்க் கப்பல் ஒன்றும் கொழும்பு துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்துள்ளன.

கப்பல்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன் அந்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள் 15

## நாடாளுமன்றுக்கு விரைவில் வருவார் ஞானசார தேரர்?

கொழும்பு, ஒக். 17

எங்கள் மக்கள் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கலகொட அத்தே ஞானசார தேரரை நியமிக்க நடவடிக்கை யெடுக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்துரலிய ரதன தேரரை கட்சியில் 15



முச்சந்தி முரளி

"உப்பில்லாட்டிக்குத் தான் தெரியுமாம் உப்பின்ர அருமை, எண்டமாதிரி இப்பதான் உவைக்கு 'அவரின்ர' அருமை தெரியுது போல..."

## பாடசாலைத் திறப்புகளை பறித்தெடுக்க பொலிஸ் முயற்சி

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அதிபர்களிடமிருந்து பலவந்தமாக பாடசாலைத் திறப்புகளை பெறுவதற்கு அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸார் முயன்று வருகின்றனர். அமைச்சர் காமினி லொக்குகே உள்ளிட்ட சில அரசியல்வாதிகள் அதிபர்களுக்கு தொலைபேசியில் அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத் 15

## முல்லைத்தீவில் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை

### தாய், தாயின் மூன்றாவது கணவர், ஓய்வு பெற்ற 72 வயது ஆசிரியர் கைது

முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரண்டு இடங்களில் இருவேறு சம்பவங்களில் மூன்று சிறுமிகள் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக சிறுமிகளின் தாய் மற்றும் அவரது மூன்றாவது கணவர், 72 வயதான ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆகியோர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமிகள் 15

## சிறுவர் துர்நடத்தை வழக்குகள் 2 மாதங்களில் முடிவுக்கு வரும்

### சட்டத் திருத்தம் விரைவில் என்கிறார் அமைச்சர் வீரசேகர

கொழும்பு, ஒக். 17

பெண்கள் மற்றும் சிறுவர் துர்நடத்தை தொடர்பான வழக்குகள் அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்குள் விசாரணை முடிவடையும் வகையில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று பொதுமக்கள் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீதிப் போக்குவரத்து சுமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 17

மானிப்பாய்- காரைநகர் வீதியின் புனரமைப்பு காரணமாக 3 ஆம் கட்டைப்பாலம் அண்மையில் சேதமடைந்தமையால் மாற்றுவழி ஊடாக வாகனங்கள் பயணங்களை மேற்கொண்டிருந்தன. இந்த நிலையில் தற்போது பாலத்தின் ஒரு பகுதி மறுசீரமைக்கப்பட்டு மக்கள் போக்குவரத்துச் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, மானிப்பாய் நகர்ப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதனையடுத்து தற்காலிகத் தீர்வாக, அந்தப் பகுதிக்கு கல் நிரவப்பட்டு மக்கள் போக்குவரத்துச் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஒ-125)

## தென்னம்பிள்ளைகளை பிடுங்கிச் சென்ற விசமிகள்

கிளிநொச்சி, ஒக். 17

முகமாலை வடக்குப் பகுதியில் நடுகை செய்யப்பட்டிருந்த நூற்றுக்கும் அதிகமான தென்னம் பிள்ளைகள் கடந்த வியாழக்கிழமை இரவோடு இரவாக விசமிகளால் பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளன.

போரால் முகமாலையில் பெரும்பாலான தென்னை மரங்கள் அழிவடைந்திருந்தன. மீள்குடியமர்வைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்து 200 தென்னம்பிள்ளைகள் மீள் நடுகை செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 100 க்கும் அதிகமான தென்னம்பிள்ளைகளை விசமிகள் பிடுங்கிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் அண்மைய நாள்களில் கால்நடைகளும் களவாடப்பட்டுள்ளன. பாடசாலைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (ஒ-214)

## வவுனியாவில் கடை தீ வைத்து எரிப்பு

வவுனியா, ஒக். 17

வவுனியா வடக்கு பிரதேசசபைக்குச் சொந்தமான கடை அடித்து உடைக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

புளியங்குளத்தில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான காணியை சுவீகரிப்பு செய்யும் நோக்கோடு கடைக்கு தனியார் ஒருவர் தீ வைத்துள்ளதாகவும் குறித்த கூல்பார் கடையின் உள்ளே இருந்த தளபாடங்களை அடித்து உடைத்ததன் பின்னர் கடை எரிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

புளியங்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ-110)

## வீடு உடைத்து நகை, பணம் திருட்டு

வவுனியா, ஒக். 17

வவுனியா மன்னார் வீதி வேப்பங்குளத்தில் நேற்றுமுன்தினம் பகல் வேளையில் வீடு உடைத்து உட்புகுந்த திருடர்கள் பணம் மற்றும் நகை என்பனவற்றைத் திருடிச் சென்றுவிட்டதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளரான கட்டட ஒப்பந்ததாரர் தனது குடும்பத்தினருடன் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற இறுதிச் சடங்குக்குச் சென்றுள்ளார். மாலை 6 மணியளவில் வீடு திரும்பியுள்ளார். வீட்டின் முற்றத்தில் அலுமாரி பெட்டகத்தின் சில பகுதிகள் சிதறிக்காணப்பட்டன. வீட்டின் உள்ளேசென்று பார்த்தபோது பின்கதவு உடைக்கப்பட்டிருந்தது. அதன் வழியாக உட்புகுந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்ட நான்கு பவுண் பெறுமதியான நகைகள் மற்றும் 70 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றைத் திருடிச் சென்றமை தெரியவந்துள்ளது. (ஒ-110)




இலங்கை வங்கியின் சாவல்கட்டு கிளை
டிஜிற்றல் வங்கியியல் வசதிகளோடு
இன்று முதல் புதிய இடத்தில்

நவீன வங்கியியல் வசதிகளுடன் 24 மணிநேரமும் தொழிற்படும் பணக் கொடுக்கல் வாங்கல் இயந்திரத்துடன், முற்றிலும் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட இலங்கை வங்கியின் சாவல்கட்டு கிளையானது இன்று சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இணையற்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ள எமது கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

இல.02, சாவல்கட்டு வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை
தொலைபேசி: 021 225 5992 மின்னஞ்சல்: boc338@boc.lk

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அரசை விரட்டியடிக்க 69 லட்சம் பேர் தயார்!

### மனோ கணேசன் கொதிப்பு



**கொழும்பு, ஒக். 17**

**“ஆட்சிமாற்றத்துக்கு நாம் அவசரப்படவில்லை. ராஜபக்ச அரசை விரட்டியடிப்பதற்கு அவர்களுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களே இன்று தயாராகிவிட்டனர்” என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில், ‘தோட்டத் தொழிலாளர்கள், மீனவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் என் நாட்டு மக்களை இந்த அரசு நடு வீதிக்குக் கொண்டுவந்துள்ளது. பொருள்களின் தொடர்விலை உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டிலே இன்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இல்லை. அரசுகூட இல்லை என்றே கூறவேண்டும். தங்களுக்கு முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்துவிட்டனர். எனவே, முடியுமானவர்களிடம் நாட்டைக் கையளிக்கவும். ஆட்சிமாற்றத்துக்கு நாம் அவசரப்படவில்லை. ராஜபக்ச அரசை உருவாக்குவதற்கு வாக்களித்த 69 லட்சம் மக்களே இன்று அரசை விரட்டியடிக்க முன்னின்று செயற்படுகின்றனர். இன்று தலவாக்கலையில் நடைபெறும் போராட்டம் அடுத்துவரும் நாள்களில் நாடு முழுவதும் நடைபெறும் - என்றார். (ம-44)

## சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்


# % உங்கள் நிலையான வைப்புகளுக்கு அதிக வட்டி

| | | |
|---|---|---|
| 06 மாதங்களுக்கு | 4.25% | (AER - 4.30%) |
| 12 மாதங்களுக்கு | 5.25% | (AER - 5.25%) |
| 24 மாதங்களுக்கு | 6.00% | (AER - 5.83%) |
| 36 மாதங்களுக்கு | 6.25% | (AER - 5.90%) |
| 48 மாதங்களுக்கு | 6.50% | (AER - 5.95%) |
| 60 மாதங்களுக்கு | 6.75% | (AER - 5.99%) |

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings AA- (lka)

## softlogic LIFE DOLLAR SAVER

இலங்கையின் முதல் டொலர் சேவர் காப்பீட்டுத் தீர்வு மூலம் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு எங்கள் பாதுகாப்பை விரிவுபடுத்தியிருக்கின்றோம்



- 6.5% உத்தரவாதத்துடனான வருடாந்த டொலர் வருவாய்
- உங்கள் மொத்த உத்தரவாத வருமானத்திற்குச் சமமான ஆயுள் காப்பீடு (முதிர்வில் பிரதி லாபம்)
- குறைந்தபட்ச முதலீட்டு மதிப்பு 5,000 USD
- 100% டிஜிட்டல் ஒன் போர்டிங் செயல்முறை
- இச் சேவையானது இலங்கை அந்நிய செலாவணி விதிமுறைகளுக்கு உட்பட்டது
- ToaRe உலகளவில் புகழ்பெற்ற டோ ரீ மூலம் மீள் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்



## வைத்தீஸ்வரக்குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள்

இணுவில் தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு வைத்தீஸ்வரக் குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்கள் கடந்த (15.10.2021) வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தீஸ்வரக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜக்குருக்கள் ரங்கநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதமணி அவர்களின் அன்புக் கணவரும், அரவிந்தக் குருக்கள், அபிராமி, சிவகாமி, பிரசன்னாகுருக்கள், சுபநேமி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹேமமாலினி, விசாகசர்மா, துஸ்யந்த சர்மா, ஜெயவாணி, சிவகுமாரக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சமீசீனாம்பாள், சிவகலா, அமிர்தகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆராதனா, ஆரார்த்திகசர்மா, அபிஜிதசர்மா, சுபாங்கசர்மா, காலஞ்சென்ற சாரங்கன் சர்மா மற்றும் தேனுகா, மனசிகா, பிரத்யும்னசர்மா, சிவாத்மிகா, சிவானுஜா, சிவாத்மஜசர்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.10.2021 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 743 5015, 077 254 9709**
**(பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் வீதி, இணுவில் தெற்கு, இணுவில்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## கோபாலகிருஷ்ணன் தயாளரூபன்

யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர், பிரான்ஸ் Noisy Le Grand ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கோபாலகிருஷ்ணன் தயாளரூபன் அவர்கள் கடந்த (15.10.2021) வெள்ளிக்கிழமை பிரான்சில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசபை நாகம்மா தம்பதிகள், காலஞ்சென்றவர்களான சோமசேகரம்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணன் யோகாம்பிகை(கிளி) தம்பதிகளின் பாசமிகு மகனும், செல்வராசா த்வராணி(யாழ்ப்பாணம்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தாரகா அவர்களின் ஆசைக் கணவரும்,கேதுஷா, அனன்யா, ஆதிஷ் ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், கேதாரரூபன் (ரூபன்- ஜேர்மனி), இன்பரூபன் (இன்பம்- யாழ்ப்பாணம்), ஞானரூபன் (ஞானம்- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அகல்யா, சிறீதேவி, பவிதா ஆகியோரின் அன்பு மைத்துன்ரும், மதன் (ஜேர்மனி), பானுமதி (சுவிஸ்), யசோதரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மச்சானும்,சுஜிதா, றஞ்சிதகுமார், காலஞ்சென்ற சொரூபன் (மேனன்) ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற சீவரெத்தினம் - குணவதி (கனடா), கேதீஸ்வரன் - கண்ணகி (கிளிநொச்சி), சச்சிதானந்தன் - தர்சிகா (பிரான்ஸ்), இந்திராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம் - தையல்நாயகி, காலஞ்சென்ற வர்களான கந்தசாமி - இராசமணி, செல்வநாயகம் - காலஞ்சென்ற சற்குணதேவி, காலஞ் சென்றவர்களான குலசிங்கம் - சிவபூசணி, எதிர்வீரசிங்கம் - கஜலட்சுமிதேவி, மன்மதராசன் - புஸ்பறஞ்சனி, காலஞ்சென்ற நேசநாதன் - உலகேஸ்வரி, காலஞ்சென்ற அருணகிரிநாதன் - சுந்தராம்பாள் ஆகியோரின் பாசமிகு மருமகனும்,பவிசன், பௌசினி, சசின், கனுஷ், கம்ஷா, சுருதியன், சரணவி(மேநிலா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், அபிஷன், அஸ்விகா ஆகியோரின் பெரியப்பாவும், விஸ்வா, சாய்ரா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 22.10.2021 வெள்ளிக்கிழமை அன்று பிரான்சில் நடைபெறும். நேரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**29, கச்சேரி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.இல:077 912 9014**

**தகவல்:**
**வே.செல்வராசா**

# மரண அறிவித்தல்



"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (சங் - 116:15)

## மார்க்கண்டு பாலச்சந்திரன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14.03.1950 | 16.10.2021 |

திருகோணமலையை பிறப்பிடமாகவும் கீரிமலையை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (16.10.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும், பன்னீர்ச்செல்வன், சொலமன் ஜெபராஜ், ஜோசுதா ஜெபதர்சன், அனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**நகுலேஸ்வரம்,**
**கீரிமலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**




HNB CashXpress | ria Money Transfer | WESTERN UNION WU | MoneyGram. bringing you closer | Sigue

உங்கள் அன்பானவர்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தினை HNB Remittance ஊடாக பெற்றிடுங்கள். வாரந்தோறும் Gas cooker, Blender, Pressure cooker, Rice cooker, கேத்தல் மற்றும் Hot / Cold Flasks உட்பட பெறுமதியான 100 பரிசுகளை வென்றிடுங்கள்.

**ஒவ்வொரு மாதமும் பணப்பரிசாக ரூ.100,000/- வீதம் வெற்றியாளர்கள் இருவர்...**

அத்துடன் வெளிநாட்டிலிருந்து அனுப்பிடும் ஒவ்வொரு அ.டொலருக்கும் நாம் மேலதிகமாக 2/- ஐயும் வழங்குகிறோம்.

HNB | Remittance
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

0112 462 462

மேம்படுத்தல் அனுமதி பத்திர இல WP/GT/5549
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பிச் ரேட்டிங் AA-(lka) ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC - PQ 82

## காசுகளை அச்சடிப்பதா ஆட்சி?

ஆசியாவின் அதிசயமாக மாறும் என்று கூறப்பட்ட இலங்கை, இன்று அவசர சிகிச்சைப்பிரிவில் சேடமிழுத்தபடி, நொடித்து போய்க்கிடக்கின்றது. இலங்கை கடன் பெறாத நாடுகளை விரல்விட்டு எண்ணிவிட முடியும் என்ற நிலைமை. பெரும் சரிவடைந்திருக்கும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த, அரசாங்கத்திடம் சரியான திட்டங்கள் இல்லாததால் மீள முடியாத பெரும் பாதாளத்துக்குள் இலங்கை சென்று கொண்டிருக்கின்றது.

வாராந்தம் பில்லியன் கணக்கில் இலங்கை மத்திய வங்கியால் பணம் அச்சிடப்படுகின்றது. நேற்றுமுன்தினமும் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா அச்சிடப்பட்டிருக்கின்றது. 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கை மத்திய வங்கி ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 768 கோடி ரூபா அச்சிட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியால் அச்சிடப்படும் பணம் அரசின் செலவினங்களுக்கும், ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

பணத்தை அச்சிடுவதால் இலங்கை போன்ற நாட்டுக்கு இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. இவ்வாறு கட்டுப்பாடுகள் இன்றி வாராவாரம் பணத்தை அச்சிடும்போது, பணவீக்கம் அதிகரித்துப் பொருள்களின் விலைகள் உயரும் என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து. நாட்டின் இப்போதைய நிலைமையும் அதுவே. அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அவற்றைக் கட்டுப்படுத்தும் திறனும் ஆட்சியில் உள்ள அரசிடம் இல்லை. அரசின் நிர்வாகம் செயலிழந்துள்ள நிலைமையே காணப்படுகின்றது.

புதிய நாணயம் புழக்கத்துக்கு வந்த பின்னர், அதை ஈடு செய்யும் வகையில் பொருள்கள் ,சேவைகள் என்பனவும் உயரவேண்டும். அவ்வாறு நடக்காத பட்சத்தில் நெருக்கடி உருவாகும். இலங்கையில் வாராந்தம் பணம் பில்லியன் கணக்கில் அச்சிடப்படும்போதும், அதை ஈடுசெய்யும் வகையிலான செயற்பாடுகளைக் காணமுடியாதுள்ளது. அரசு தனக்குத் தேவையான நிதியைப்பெற்றுக் கொள்வதற்கும், தனது செலவினங்களை ஈடுசெய்துகொள்வதற்கும், வரிப்பணத்தைப்பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, பணத்தை அச்சிட்டு, தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் கைங்கரியத்தையே பின்பற்றுகின்றது.

1990 களில் சிம்பாப்வேயில் ஏற்பட்ட நிலைமையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ரொபேர்ட் முகாபேயின் ஆட்சியில் அளவுக்கதிகமாகப் பணம் அச்சிடப்பட்டது. அதன் விளைவாக சிம்பாப்வேயில் பணவீக்கம் மோசமான நிலையை எட்டியது. இப்போது இலங்கையும், அந்த நிலைமையை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைக்குக் கொரோனாத் தொற்று நிலைமை ஒரு காரணம் என்கின்றபோதும், பிரச்சினைகளை எதிர்கொள்ள அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை என்பதும் ஒரு பிரதான காரணமே.

2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கை மத்திய வங்கி அரசுக்காக ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 768 கோடி ரூபாவை அச்சிட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டு இலங்கை மத்தியவங்கி ஆரம்பிக்கப்பட்ட பின்னர், 2020 ஜனவரி முதலாம் திகதி வரையான 70 ஆண்டு காலத்தில் அச்சிடப்பட்ட பணத்தை விட இது 20 மடங்கு அதிகம் என்று ஊவா மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் வாழ்க்கைச் செலவுகள் ரொக்கெட் வேகத்தில் நாளாந்தம் உயர்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதற்கே இடர்பட ஆரம்பித்துள்ளனர். அரசும், அரசைச் சார்ந்தவர்களும் வார்த்தை ஜாலங்களையும், வறட்டு வாதங்களையும் கைவிட்டு, இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான தெளிவான கொள்கை முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். அவ்வாறு இல்லாது, பணத்தை அச்சிடுவதால் மட்டும் நெருக்கடியில் இருந்து தப்பிவிட முடியும் என்று நினைப்பார்களேயானால், இந்த நாடு மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்பது நிதர்சனம்.



# அனைத்து தரப்பாலும் கைவிடப்பட்டுள்ளோம்

## மன்னார் மீனவர்கள் குற்றச்சாட்டு

**மன்னார், ஒக். 17**

**பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலைச் செய்யும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை செய்வதற்கு அரசியல் கட்சிகளோ பொது அமைப்புகளோ எந்த ஒரு முன்னேற்பாடுகளும் செய்யவில்லை என்று மன்னார் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த புரேவி சூறாவளி, பேர்ள் கப்பல் எரிக்கப்பட்டு அதன் கழிவுகளால் உண்டான பாதிப்பு, அத்துமீறிய இந்திய மீனவர்களின் வருகை, கொரோனா காரணமாக தொழில் பாதிப்பு, கடற்படையினரின் நெருக்கடி, கடலில் பிடிபடும் சொற்ப மீன்களுக்கும் உரியவிலை இல்லாமை, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் இவ்வாறு பல வழிகளிலும் மீனவ சமுதாயம் பாதிப்படைந்து கொண்டிருக்கிறது.

நாடு முழுவதும் ஒவ்வொரு துறைசார்ந்து மேற்கொள்ளப்படும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உலக அளவில் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மீனவர்களின் பிரச்சினையை முன்னிலைப் படுத்தி பெரியதொரு ஆர்ப்பாட்டம் 17ஆம் மற்றும் 18ஆம் திகதி களில் (இன்றும் நாளையும்) நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் மன்னார் மாவட்டத்தில் இந்த ஆர்ப்பாட்டத்தை யார் முன்னெடுத்து செல்வது என்று எமக்கு தெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகளோ, பொது அமைப்புகளோ இது தொடர்பாக அக்கறை காட்டவில்லை. மன்னார் மாவட்ட மீனவர்கள் அனைத்து தரப்பினராலும் கைவிடப்பட்டு நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே எதிர்வரும் 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் மன்னார் மாவட்ட மீனவர்களின் பங்களிப்பையும் உறுதிப்படுத்த சார்ந்தவர்கள் நடடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ம-213)

# 2 டோஸ்கள் ஏற்றியோர் எண்ணிக்கை ஒரு கோடி




கொழும்பு, ஒக். 17

இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசிகளின் இரு டோஸ்களையும் பெற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி வேலைத்திட்டத்தின் கீழ் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மிக வேகமாக நடந்து கொண்டிருக்கின்றது என்று கொவிட் தடுப்பு செயலணி அறிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சினோபார்ம் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் வரை தடுப்பூசி ஏற்றியோரில் சினோபார்ம் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டியுள்ளது என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (எ-இ)

## வேலை வாய்ப்புக்கள்

வவுனியா நகரில் அமைந்துள்ள ஹோட்டல் ஓவியாவில் பணியாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த Restaurant waiters, Room boys உடன் தேவை .


077 366 0828

இல . 47 , மில் வீதி , வவுனியா.


## கண்ணீர் அஞ்சலி

### கலாநிதி முத்தையா குமாரசாமி

இளைப்பாறிய பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளர், இலங்கை அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம்



தோற்றம் 07.04.1931 மறைவு 11.10.2021

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அத்துயரில் உள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா, யாழ் அரியாலை கிழக்கு ஸ்ரீ முத்து விநாயகர் பெருமான் பாதங்களில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்து விநாயகர் கோவில்

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 06 . 1980



இறப்பு 12 . 10 . 2021

### திரு. மகாலிங்கம் கஜேந்திரன் (கஜன்)

செட்டிச்சோலை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கஜேந்திரன் அவர்கள் கடந்த (12.10.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகாலிங்கம் தர்மேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம் இராசமணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தனுசாவின் அன்புக் கணவரும், கிருந்தனா, சயந்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன், கஜானந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைவாணி, சுமன், பிரதீபன்-கிரிஜா, சசிக்குமார் - சுகன்ஜா, கரிகரன் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் சஞ்ஜிதன், கேசவி, டினுசிகன், கரிஷ்னி ஆகியோரின் பெரியப்பாவும், டிலக்ஷன், டிசாந் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி 1 மணியளவில் லண்டனில் அமைந்துள்ள 209 கெண்டன்சாலை கெண்டன், ஹாரோ HA3 OHD நடைபெற்று தகனக்கிரியைகள் கெண்டன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச் சோலை
அளவெட்டி வடக்கு
077 274 1622

தகவல்
குடும்பத்தினர்
சுரேந்திரன் (சகோதரன்)


இலங்கையின் பிரபல உணவு தயாரிப்பு நிறுவனமொன்றிற்கு

தோல் நீக்கப்பட்ட

## நிலக்கடலை

(பீனட்/Peanut)


மொத்த விநியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

- மாதாந்தம் வழங்கக் கூடிய தொகை
- மொத்த விலை
- போக்குவரத்து வசதி வழங்கல்

தொடர்பான விபரங்களுக்கு அழைக்கவும்

076 934 2241


## மரண அறிவித்தல்



### திரு. செல்லப்பா அழகரத்தினம்

மூர்த்தி வீதி, தையிட்டி கிழக்கு தையிட்டி காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அழகரத்தினம் நேற்று முன்தினம் 15.10.2021 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான செந்தில் ஆறுமுகம் மனோண்மணி தம்பதிகளின் மருமகனும், அஞ்சனா தேவியின் அன்புக் கணவரும், மயூரதன் (France), கஜரதன் (Kondavil), கஜனி (German), சுஜனி (France), பகீரதன் (Kopay), பிரபாகரன் (Kondavil - School staff Kokkuvil Namakal vidiyalayam) ஆகியோரின் அன்புத் தந்தையும், விபிர்ஷா, காந்திமதி, அருள்வண்ணன், குலசீலன், சஞ்சிகா தர்ஷனா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இராசம்மா, செல்லப்பா பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை சின்னம்மா, செல்லப்பா தியாகராசா மற்றும் சிவசம்பு அன்னம்மா, பொன்னுச் சாமி கண்மணி (கனடா), செல்லப்பா செல்வராசா (லண்டன்), செல்லப்பா இராசரத்தினம், கந்தசாமி மனோண்மணி ஆகியோரின் சகோதரனும், சரண்யா, சாருஜன், சதுர்ஜன், பவிசன், பிரியங்கன், வதுமிகா, யோகவேல், தர்ஷனா, வானதி, யோகநிதன், தளிர்தன், ரோகித், கபித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் கோண்டாவில் கட்டையாலயடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஷ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்
077 450 4620,
077 624 1573, 077 829 0033.

# யாழ்ப்பாணத்தில் இம்முறை 11,730 ஹெக்ரேயரில் நெற்செய்கை

## வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 17**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடம் 11 ஆயிரத்து 730 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை இடம்பெறுகிறது என்று - வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தெரிவித்துள்ளார்.**

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் நெற்செய்கையை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. 'சௌபாக்கியா' திட்டத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்காக 9 திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

நெல் பயிரிடும் கருவிமூலம் விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டு 90 ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் இயந்திரம் மூலம் நெல் நடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வியாபார நோக்கத்துக்காக சேதனப்பசளைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்காகத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் அவர்களுக்கு சேதனப்பசளை உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் தரம் பிரிக்கும் இயந்திரங்கள் என்பன வழங்கப்படவுள்ளன. அதுமட்டுமல்லாது மண்புழு பசளை தயாரிப்பு மற்றும் திரவம் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இரசாயனப் பசளைகளில் திரவங்கள் காணப்படுவதால் சேதனமுறையில் திரவத்தை உற்பத்தி செய்வதற்காக 40 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான பயிற்சிகள் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன- என்றார். (ம-ஐ,20)

45ஆம் நாள் நினைவு நிகழ்வு



பிறப்பு 23 02 1939

இறப்பு 04 09 2021

கடந்த 04.09.2021 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் சின்னப்பொடி இராசரத்தினம்

அவர்களின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வு நாளைய தினம் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.114, A9 வீதி,
துளசி புகைப்படகலையகம்
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஹெரொய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறப்பு பொலிஸ் படையணிக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2.5 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப் பட்டது.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த ஹெரோய்ன் போதைப்பொருள் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-125)



## இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களைத் தயாரிக்க அனுமதி

கொழும்பு, ஒக்.17

இணையத்தளப் பாதுகாப்புத் தொடர்பான இரு சட்டங்களை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தற்போது தத்தமது நிறுவன மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையத்தள பாதுகாப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை, முறையான வகையிலும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் இந்தச் சட்டவரைவுகள் தயாரிக்கப்படவுள்ளன. தேசிய பாதுகாப்புக்கு ஏற்புடைய விடயங்கள் தவிர்ந்த தேசிய தகவல்கள் மற்றும் இணையத்தள பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டமொன்றை தயாரித்தல், அந்தப் பணிகளுக்காக ஏனைய பங்காள நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான ஏற்பாடுகளை வகுத்தல், நாட்டில் தீர்மானம்மிக்க முக்கியமான தகவல்கள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அடையாளங்காணல் மற்றும் நாட்டில் முறையான இணையத்தள பாதுகாப்புச் சூழலை உருவாக்குதல் போன்ற நோக்கங்களை அடைவதற்காகவே புதிய சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## 27 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

சாவகச்சேரி ஒக். 17

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வாழ்வாதார உதவி கோரிய சமுர்த்திப் பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் (மீன்பிடி வலைகள்) வழங்கப்படவுள்ளன. தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகினரால் 27 பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சமுர்த்தி அலகினர் இந்த வருடம் 900 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளாக பல்வேறு பொருள்களை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி1-9)

## மேய்ச்சலுக்கு கட்டப்பட்ட இரு பசுமாடுகள் திருட்டு

சாவகச்சேரி, ஒக்.17

மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த இரண்டு மாடுகள் இனந்தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் வரணி, கறுக்காய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதால், கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து, வளவில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாடுகளே திருடிச் செல்லப்பட்டுள்ளன.

மாடுகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக அவற்றின் உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-4-9)

# குடியிருப்புக்களில் தேங்கும் மழை நீர்

மன்னார்,ஒக்.17

மன்னார் மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கடும் காற்றுடன் பெய்த மழை காரணமாக பல பகுதிகளில் வெள்ள நீர் வெளியேறமுடியாமல் தேங்கிக் காணப்படுகின்றது. மன்னார் நகர்ப் பகுதியில் சாந்திபுரம், ஜிம்ரோன் நகர், எமில்நகர் சவுத்பார் மற்றும் கோந்தைப்பிட்டி போன்ற இடங்களில் மழை நீர் வெளியேற முடியாமல் தேங்கிக் காணப்படுகின்றது.

குறித்த பகுதிகளில் குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து மழை காலங்களில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்குவதும் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருப்பதும் தொடர்கதையாக இருக்கின்றது.

இவ்வாறு மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் இந்தக் கிராம மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு இன்னும் எவராலும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

மழையின் ஆரம்ப நாள்களிலேயே நீர் வெளியேற முடியாமல் கிராமங்களுக்குள் தேங்கி நிற்கின்றது என்றால் இன்னும் கனத்த மழை காலங்களில் தமது நிலைமை எவ்வாறு இருக்குமோ என்று அச்சத்துடன் வாழ்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-213)







## அபிவிருத்தித்திட்டங்களை நிறைவு செய்யப் பணிப்பு!

கொழும்பு, ஒக். 17

அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் திருப்பி அனுப்பாது, இந்த ஆண்டுக்குள் அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் நிறைவு செய்யவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட நூறு நகர அபிவிருத்தித் திட்டங்கள் இதுவரை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவித்த வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அபிவிருத்தித் திட்டங்களில் பெரும்பாலானவை நிறைவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது எனக் கூறினார். (எ-இ)



## குருதிக் கொடை

சாவகச்சேரி, ஒக். 17

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக் கொடை நிகழ்வு நேற்று 16ஆம் திகதி அஞ்சலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் தென்மராட்சி பிரதேச அஞ்சலக அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ச-9)




DIMO தொழில்நுட்பத் திறன்கள் அக்கடமி (DATS) என்பது ஜேர்மனியிலுள்ள Daimlar AG நிறுவனத்தின் பங்காளித்துவத்துடன் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிநவீன மோட்டார் வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையமாகும். நாளைய வாகனத் தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள திறமையுள்ள இன்றைய இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென DIMO விரும்புகிறது.

மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் ஈடுபடும் ஆர்வமுள்ள, பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட, உற்சாகமான இளைஞர்களை எம்முடன் இணையுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். வாருங்கள், இலங்கையிலுள்ள எமது பயிற்சி நிலையங்களில் சேர்ந்து மோட்டார் வாகனத் தொழில்நுட்ப நிபுணர் என்ற முறையில் உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள். இது ஒரு முற்றிலும் இலவசமான பயிற்சிநெறி ஆகும்.

**பயிற்சிநெறிக் காலம்**

- இரண்டு ஆண்டுகள்.

**பிரவேசத் தகுதிகள்**

- வயது: 17 முதல் 24 வயது.
- க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் B சித்திகளுடன் குறைந்தபட்சம் 6 பாடங்களில் சித்தி.

**முதலீடு**

நீங்கள் மேற்குறிப்பிட்ட தகுதிகளையும் ஆர்வத்தையும் கொண்டிருந்தால், உங்கள் சுயவிபரக் கோவையை **DATS@dimolanka.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். **நீங்கள் விரும்புவது வெலிவேரிய பயிற்சி நிலையமா அல்லது யாழ்ப்பாணம்** பயிற்சி நிலையமா என்பதை விடயக் கட்டத்தில் குறிப்பிடுங்கள். அல்லது,

உங்கள் விண்ணப்பத்தை, "DATS ஆண்டுப் பயிற்சிநெறி" என்று தெளிவாக்க குறிப்பிட்டு, கடித உறையின் **இடதுபக்க மேல் மூலையில் வெலிவேரியா அல்லது யாழ்ப்பாணம் என்ற உங்கள் விருப்பத்தேர்வையும் குறிப்பிட்டு, பயிற்சி முகாமையாளர், டிமோ தொழில்நுட்பத் திறன்களுக்கான அக்கடமி, இல. 09, A9 வீதி, அரியாலை. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்புங்கள்.**

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: கணேஷ் 077 9750 437**

DIMO
THE PERFECT PARTNER
DIMO ACADEMY FOR TECHNICAL SKILLS (DATS)
No. 09, A9 Road, Ariyalai, Jaffna.
E-mail DATS@dimolanka.com Web: www.dimoacademy.lk
www.facebook.com/careersDIMO

## பிரான்பற்றில் 20 லீற்றர் கசிப்பு மீட்ட

யாழ்ப்பாணம், ஒக். 17

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரான்பற்றுப் பகுதியில் 20 லீற்றர் கசிப்பு இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இளவாலை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட பிரான்பற்றுப் பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த பகுதி பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. அந்தப் பகுதியைச் சோதனையிட்டதில் 20 லீற்றர் கசிப்பும், கோடாவும் மீட்கப்பட்டன கத்தின் அடிப்படையில் ைது செய்யப்பட்டுள்

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர்


**ச.கனகரத்தினம்**

( உரிமையாளர் கனகரத்தினம் ஸ்ரோர்ஸ் அஞ்சலக வீதி சாவகச்சேரி )

அவர்கள் 13.10.2021 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்திற்கு மன்றம் தனது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் செல்லத்துரை கணநாதன்**

திதி : புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்து விடாதிருக்க
வேரேன இருந்தீரே!!!
மாயப் புயல் வடிவில் காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தை தந்து விட்டு சொல்லாமல் சென்றதென்ன?
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.


நீங்கா நினைவுடன்

**குடும்பத்தினர்**

"தர்மகிரி" அம்மன் கோயிலடி, அராலி கிழக்கு, அராலி

## நன்றி நவிலல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 25 |
| 08 | 09 |
| 1929 | 2021 |



**திரு.வைத்திலிங்கம் சுந்தரராஜா**

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட, இளைப்பாறிய மாவட்ட தொலைத்தொடர்பு பரிசோதகர் (DIT) திரு.வைத்திலிங்கம் சுந்தரராஜா அவர்கள் 25.09.2021 அன்று, இறைவனடி சேர்ந்தார். அன்னார் அண்ணாமலை கமலாம்பிகையின் ஆருயிர் கணவரும், வைத்திலிங்கம் - செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த K.V. நவரத்தினம் (இளைப்பாறிய நீதிபதி) பரமேஸ்வரி. கந்தசாமி (நீராவியடி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அண்ணாமலை மார்க்கண்டர் (வட்டுக்கோட்டை) Dr.அண்ணாமலை செல்வராஜா (சித்தங்கேணி) ஆகியோரின் அருமை மைத்துனரும் Dr. தேவானந்தர் (Baylor College of Medicine, USA) நேசானந்தர் (C.F.I.A, Federal Government, Canada), Dr.சர்வானந்தர் (யாழ். போதனா வைத்தியசாலை), பிரம்மானந்தர், பவானி முகுந்தன் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.போலா தேவானந்தர், பாமினி நேசானந்தர், சுப்பிரமணியம் முகுந்தன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சான்றோன், சேந்தன், அஞ்சலி, சாயலன், நீலன், வியாபினி ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 27.09.2021 அன்று சிவாச்சாரியாரால் நடத்தப்பெற்று அன்னாரின் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்களினூடாகவும் பத்திரிகை ஊடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதலளித்தோருக்கும் அன்னாரின் இறுதி நேரத்தில் உதவிய யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும். இறுதிக்கிரியை நிகழ்த்திய சிவாச்சாரியாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் – குடும்பத்தினர்

## வேலைக்கு ஆள்கள் தேவை

பருத்தித்துறையிலுள்ள TULIP GUEST INN இற்கு Room Boy ஒருவர் தேவை. எமது Guest இல் தங்கி நின்று வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பகுதி நேர வேலைக்கும் ஆள்கள் தேவை.

தொடர்பு: **077 163 2330**

---

TOKYO SUPERMIX
Concreting Confidence

TOKYO CEMENT COMPANY (LANKA) PLC

Readymix Concrete Plant -Jaffna,
Tel: (0212271244 / 0773466262 / 0777944130
E mail :supermix.Jaffna@tokyocement.lk

**உடனடி வேலைவாய்ப்பு**

- நிறுவனம் - Tokyo Supermix (Pvt) Ltd
  எழுதுமட்டுவாழ் தெற்கு, மிருசுவில்.
- வெற்றிடம் - கனரகவாகன சாரதி , உதவியாளர்
  ஆய்வு கூட உதவியாளர்
- தகைமை - வயதெல்லை - 20-40

குறிப்பு :- மேலே குறிப்பிடப்பட்ட வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் (17.10.2021 - 28.10.2021) காலப்பகுதியில் கிழமை நாட்களில் நேரில் சமுகம் தரவும்.

## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி கிளை இல.18 பழைய வீதி கோப்பாய் தெற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான கூறுவிலை கோரல்

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் அமைந்துள்ள கிளை இல.18 கிளைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. இதற்குரிய விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் மீளளிக்கப்படாத வைப்பு பணமாக ரூபா. 500/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விபரத்தினை விண்ணப்பபடிவத்துடன் மீளளிப்பு வைப்பு பணமாக ரூபா.10000.00 செலுத்தி 05.11.2021ஆம் திகதிக்கு முன் **"பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ.சங்கம், நீர்வேலி"** என்ற முகவரிக்கு

**நீர்வேலி,**
**2021.10.16**

**பொது முகாமையாளர்**
**0212054814**

## 31ம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்**
**02.06.1944**

**மறைவு**
**15.09.2021**

**Dr.ஸ்ரீரங்கநாதன் கனகசபை**

(இகல்ஷத்தென்ன, வட்டகொட பெருந்தோட்டங்களின் இளைப்பாறிய தலைமை மருத்துவர்)

சுன்னாகம் மயிலணியில் வந்துதித்த மாணிக்கமே
ராசாப்பரியாரியார் குடும்பம் வளர்த்தெடுத்த செல்வப்புத்திரரே
மலையகத்து மக்களுக்கு மாமருந்தாய் வாழ்ந்த மருத்துவரே
மூத்த சகோதரத்தின் பிள்ளைகளை தந்தை போல்
ஆதரித்தவரே
சகலரையும் சமமாக மதித்து அரவணைத்த உத்தமரே
வற்றாத வாஞ்சையுடன் செல்லத் தாத்தாவாய் மிளிர்ந்தவரே
நீர் எம்முடன் வாழ்ந்த காலம் மின்னலென மறைந்தாலும்
எம்மிதயமதில் என்றென்றும் அன்புத் தெய்வமாய் வாழ்வீரே.

**தகவல்: குடும்பத்தினர்**

# மைத்திரி தனிவழி!

## ஒப்புதல் வழங்கியது சு.க. செயற்குழு!!

கொழும்பு, ஒக்.17

மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்பட்சத்தில் அந்தச் சவாலை ஏற்று தனித்துக் களமிறங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யின் மத்திய செயற்குழுக்கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் மாகாண சபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப் பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுப்பதற்கு தீர்மானிக் கப்பட் டுள்ளது என்று சுதந்திரக்கட்சி யின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அதேவேளை, புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கும், மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராவதற்கும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. சில வேளை தனித்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டால் அந்தச் சவாலை ஏற்று தேர்தலில் போட்டியிட மத்திய செயற்குழு பச்சைக்கொடி காட்டியுள்ளது. (எ-44)

## சாரதி அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 17

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்கான திகதியைப் பெற்றவர்கள் தங்களுடைய அனுமதி அட்டைகளை நாளை திங்கட் கிழமை மாவட்டச் செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பித்து, மீள் திகதியிடப்பட்ட அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வை.பரந்தாமன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-5)

## நாகபாம்புடன் சிகிச்சைக்கு சென்ற சிறுவன்

தனக்கு கடித்த நாகபாம்பை போத்தலில் அடைத்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு வந்தான் 15 வயது சிறுவன். நுணாவில் பகுதியைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு செய்துள்ளான். நெல்வயலை நண்பர்களுடன் பார்வையிடச் சென்றபோது வரம்பிலிருந்த பாம்பு சிறுவனைக் கடித்துள்ளது.

நண்பர்கள் கொண்டு வந்த தடிகளின் உதவியுடன் பாம்பைப் பிடித்து போத்தலில் அடைத்து கொண்டு சிறுவன் மருத்துவமனைக்கு வந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. சிறுவன் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றான். (ஒ-9)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கலாபூஷணம், நாதஸ்வர மாமேதை,
கலைமாமணி

## அமரர் S.S .சிதம்பரநாதன்

மண்ணில் உதித்தது
16.05.1944.

விண்ணில் மறைந்தது
03.09.2021

நாதமே ஒலியாய் போனதே விதியாய்
நாற்பத்து ஐந்து நாட்களும் ஓடி
நாம் இங்கு தனியாய் தவிக்கிறோம் கதியாய்
வானமே முழங்க வையகம் தனில் தாங்கள் உறங்க
"எப்பவோ முடிந்த காரியம் தான்" ஆனால் நீங்கள்
எங்கள் அன்பு "அப்பா" அல்லவா .

துக்கம் அறிந்து துயர் பகிர்ந்து கண்ணீரும் கம்பலை யுமாய் அஞ்சலிகள் குவித்து அமுத தொலைபேசிகள் மின்னஞ்சல் ஆறுதல்கள் வண்ண மலர் பதாகைகள் முகநூலில் கவிதைகள் எம் பேரிழப்பை ஈடு செய்ய தோள் கொடுத்து இறுதிச் சடங்கிலிருந்து இன்று மட்டும் ஆதரவளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றித் துளிகள் .

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்



## சாந்தினி சிவானந்தன்

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவப் புளியங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இந்தியா டில்லியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினி சிவானந்தன் கடந்த (12.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், நடராசா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெனிக்கா (பிரித்தானியா), தட்சனா (பிரான்ஸ்), சனார்த்தனன் (கனடா). லவப்பிரியா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும், விஜயகாந்தன் (பிரித்தானியா), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), எழிழரசி (வவுனியா), தர்சன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஆர்த்திக், பைரவி, ஆரா, ஆனந்த் வேலன், ஆருத், கௌதம், கௌரவ், நந்தனா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், இராஜேஸ்வரி (ஜேர்மனி), இரஞ்சிதமலர் (கனடா), தயாநிதி, இராஜேசினி (சுவிஸ்), கதிர்காமநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான சிவநேசன், மகேசன் மற்றும் தர்சிகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஏரம்பமூர்த்தி, கதிர்காமநாயகி, சண்முகராஜா (சிவசக்தி - வவுனியா), கருணைத்தவசோதி (கனடா). சோதிலிங்கம் (கனடா), பாலசுந்தரம் (கனடா), ஜெயக்குமார் சிவகௌரி (கனடா), காலஞ்சென்றவர்களான நாதன், தர்மிளா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியா டில்லியில் இன்று (17.10.2021) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வை.தனகேசவன் (மருமகன்)**

**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 17.09.2021 அன்று இறைபதம் அடைந்த கைதடி மத்தி குமர நகரைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி சிவமணி சின்னத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (15.10.2021) வெள்ளிக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்." (குறள் எண் 50)

**குடும்பத்தினர்**

கைதடி மத்தி,
குமரநகர்
கைதடி

சு. சின்னத்துரை - கணவர்
(இரத்தினசிங்கம்)

# 35ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்
03.04.1939

மறைவு
13.09.2021

## அமரர் காத்தார் வீரகத்தி (C.T.B)

தொழில் அதிபர் (நேசம் பூட்சிற்றி உரிமையாளர்)

பளவத்தை பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், பொலிக்கண்டி வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் காத்தார் வீரகத்தி (C.T.B) அவர்கள் கடந்த 13.09.2021 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காத்தார் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், இளையதம்பி இலட்சுமியின் அன்பு மருமகனும், நேசம்மாவின் அன்புக் கணவரும், வீரநேசன் (நேசன் - சுவிஸ்) நேசரஞ்சன் (ரஞ்சன் - லண்டன்) (Happon Enterpise Super Market Kingsbury London), NSN Super Market Harrow London) நேசரஞ்சனி, இராசகுமாரி, அபிராமி, குகநேசன் (குகன் நேசம் பூட் சிற்றி உரிமையாளர்), குவேந்தினி (குகந்தா) அகியோரின் அன்புத் தந்தையும், வீ.விருந்தா (சுவிஸ்), நே.தாரணி (லண்டன்), சி. உதயச்சந்திரன் (முகாமைத்துவ உதவியாளர் - மேல் நீதிமன்றம் வவுனியா), ம.பிரகாஸ், சி.அகில்ராஜன் (ரூபன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேசா (லண்டன்), ரூபினி, தனுஸ்கா, நேகா, அபிவர்ஷா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்

வீரபத்திரர் கோவிலடி
பொலிகண்டி, வல்வெட்டித்துறை ,
வடமராட்சி.

மகன் – குகநேசன் (குகன்)
077 631 3447

# பணிநிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கிவரும் DSI மொத்த வியாபார நிலையத்திற்கு பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ் காணும் முகவரிக்கு 28.10.2021 இற்கு முன்பாக கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக்கவும்

முகவரி:
சுப்பசூஸ்
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
16
06
1928



இறப்பு
17
09
2021

## அமரர் குமாரசாமி சிவகாமிப்பிள்ளை

அன்னார் அராலி தெற்கு செம்பிதோட்ட ஞான வைரவராலய அறங்காவலராக ஆண்டாண்டு காலமாக அகலாத பக்தியோடு சகலவிதத்திலும் தொண்டாற்றி வந்தவர் அன்னார் கடந்த 17.09.2021 வெள்ளிக்கிழமை அன்று எல்லாம் வல்ல வைரவப்பெருமானின் பாதார விந்தங் களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

அராலிதெற்கு,
வட்டுக்கோட்டை.

அராலி தெற்கு, செம்பிதோட்ட
ஞான வைரவராலய பஜனை மன்றம்

# ஓர் ஆண்டு சென்றதுவோ எங்கள் தாயே!



அன்னையின்
மடியில்
30.04.1946

ஆண்டவன்
அடியில்
17.10.2020

## திருமதி யோசேப்பின் தேவநாயகம்

ஓர் ஆண்டு ஓடியதோ! ஆனாலும்
ஓயாது எம் துயரம் தாளது எங்கள் மனம்!
நெஞ்சூட்டி வளர்த்தவளே!
தவமாக வந்தவளே!

நீ இருந்த போது உன் அருமை புரியவில்லை
நீ மறைந்தபோது எம் இதயம் கனக்கிறதே!
எத்தனை பிறவியோ இனி உன் முகத்தைப் பார்ப்பதற்கு
எங்கு உமைத் தேடுவதோ நாம் பட்ட கடன் தீர்ப்பதற்கு!

அனைவரையும் ஆதரிப்பாய் பக்குவம் பல சொல்லிடுவாய்
இப்போது அவை கேட்க நீ இங்கு இல்லையம்மா!
எமைப் போல பாவியாகி உன் மடியில் ஏன் பிறந்தோம்
கடைசிப்பிடி மண் கூடபோட எம்மால் முடியவில்லை!
அதற்குக் கூட எங்களுக்கு கொடுப்பனவு கிடைக்கவில்லை.

மனதோடு போராடும் மறையாத ஞாபகங்கள்
நீர் விழியோடு உம் நினைவு என்றென்றும் மாறாது மறையாது

உங்கள் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றியடைய பிரார்த்திக்கின்றோம்.

இல 4A அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்,
077 424 4049

உங்கள் பிரிவில் தவிக்கும்
கணவர், பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

தோற்றம்
04
10
1951



மறைவு
13
10
2021

## திரு. வேலுப்பிள்ளை குகபாலன்

(முன்னாள் கூட்டுறவுச் சங்க ஊழியர்)

அளவெட்டி மேற்கு தம்மளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை குகபாலன் கடந்த (13.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பூபதி (தங்கம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் அன்னபாக்கியம், காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற திலீபாகரன் மற்றும் கஜேந்திரன் (கனடா), மயூரன் (அளவெட்டி) லோகேசன் (லண்டன்), தரணீதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரார்த்தனா (கனடா), தர்சிகா, கஜனியா, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கேமிஷா, ஆதிரா, கவிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்மளை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தம்மளை
அளவெட்டி மேற்கு

தகவல்:
குடும்பத்தினர்
077 668 8726, 077 286 4709

## பணிப்பெண் தேவை

நாவலர் வீதியில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. **074 1472 445**

## பெண் பணியாளர் தேவை

யாழ் நகரிலுள்ள போட்டோகொப்பி கடைக்கு பெண் பணியாளர் தேவை.

**T.P: 077 580 6768**

## Accounting Service & Business Consultation

உங்களது அனைத்து வித வியாபார மேம்படுத்தலுக்கு Accounts and Income TAX உள்ளிட்ட அனைத்து வித TAX தீர்வுகளுக்கும் நாம் உதவி செய்வோம்.

**075 410 5230, 071 072 9870**
bmcsram@gmail.com

## சேல்ஸ்மன் தேவை

யாழில் கிரான் பஜார் வீதியில் இயங்கி வரும் புடைவையகத்திற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**T.P: 077 736 2136**

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியிலுள்ள வீடொன்றில் வயோதிபர் ஒருவரை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை. (வயதெல்லை 35-50)

தொடர்புகளுக்கு: **077 910 3689**

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் தேவை. வயது 40 தொடக்கம் 60 வரை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**071 497 7009**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1985 ஆம் ஆண்டு தனு இராசி நட்சத்திரம் மூலம் பிரான்ஸ் நாட்டு P.R. உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு படித்த பொருத்தமான மணமகள் தேவை.

**076 376 3232**

## ALL in one JOB Portal

All in one Job Portal Linking the Talents and Vacant Positions. Profesional IT, Accounting Banking, HR, Sales, MGO, UN and Government Jobs.

www.lankacareersandtalents.com

## வீடு வாடகை

யாழ் இந்துக் கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகை உண்டு.
வாகனத்தரிப்பிடம் உண்டு

**077 449 3222**

## சிறுநீரகம் தேவை

**B+ குறுப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை**

**076 419 6112**

## மணமகள்மார் தேவை

யாழிந்து 84 சித்திரை, divorce 74ரேவதி, 82அனுஸ்சம், 79மூலம் இஞ்சினியர், 84கேட்டை சொந்த கடை, Pr உள்ள மணமக்களுக்கு மணமகள்மார் உள்நாட்டில் தேவை,

தொடர்பு
**00447404534517**

## மணமகள் தேவை

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்சமயம் லண்டனில் பிரஜா உரிமை கொண்ட கிறிஸ்தவம் வயது: 36 பெற்றோர் தங்கள் மகனுக்கு நற்குணங்களுடைய மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகளின் புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ் காணும் இமெயில் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும்.

aaronbenjamin8894@yahoo.com

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறை, தையிட்டியில் 8.13. பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு. பலாலி விமான நிலைத் திலிருந்து 1km தூரத்திற்கு உள்ளது.

**074 014 7422**

## Spoken சிங்களம்

நீங்கள் சிங்களம் பேச தெரியாதவர் என்றால் வெறும் 3 மாதத்தில் சரளமாக பேசலாம் பிரத்தியேக வகுப்புக்கள்.

**077 473 7737**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிக்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 327 6502**

## விற்பனைக்கு

நவாலியில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 365 9503**

## காணி தேவை

1 பரப்பு 3/4 பரப்புக்காணி யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதிகளில் நல்ல தண்ணீர் காணி உடன் தேவை. வீட்டுடன், அல்லது வெறுங்காணி விரும்பத்தக்கது.

**070 480 2770**

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L இணைந்த கணிதம் 2021. 2022, 2023 மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 832 4002**

## SALES EXECUTIVE தேவை

வயது 20 முதல் 40 க்கு உள், ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (வடபகுதி)

theesan@remlk.com 077 473 7737

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**074 175 9214**

## வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், கரந்தன் சந்தி வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: **077 382 6099**

## தேவை

Show Room (ELECTRONIC) போடுவதற்கு இடம் தேவை. யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி.

**076 821 9414**

## மணமகள்மார் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 89, 91, 95 ஆண்டு மணமகன்மாருக்கு வீடு, காசு எதிர்பார்க்கவில்லை. கொழும்பில் 25 வருடமாக வசிக்கிறார்கள் கொழும்பில் நல்ல கம்பனியில் வேலை செய்கிறார்கள். நல்ல பண்பான மணமகள்மார் தேவை.

தொடர்பு: **0094 76 451 0541**
Whatsapp: **0044 74 240 92585**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983, கார்த்திகை, இடபராசி, 35 கிரக பாவம் உடைய அரச உத்தியோகம் கொண்ட சைவபோசன மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

**075 217 8635**

## வேலையாள்கள் தேவை

Phoenix Book Shop இற்கு வேலையாட்கள் தேவை.

- Cashier or Manager
- Photo Copy Operatar
- Sales girl or Boy (வெளிவேலை இல்லை)
- Bio data with IC PhotoCopy கொண்டு வரவும்.
- 36 வயதிற்கு உட்பட்டோராக இருத்தல் கட்டாயம்
- யாழ் மாநகர சபைக்குட்பட்டோராக இருத்தல். விரும்பத்தக்கது.
- முன் அனுபவம் தேவையில்லை.
- O/L or A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு 077 063 3116
386, Clocktower Road, Jaffna.

## மருந்தாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்க உள்ள மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmasit) தேவை.

**077 081 2893**

## காணி விற்பனைக்கு

யாழ் கொழும்புத்துறை மேற்கில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**077 212 5262**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டியதாக சிறிய வீடு/ அனெக்ஸ் தனியொருவருக்கு (வர்த்தகர்) உடன் தேவை.

**077 351 8131**

# வேலிக்கு தீ இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

நவாலி தெற்குப் பகுதியில் வீடொன்றின் வேலிக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் 21 வயது மற்றும் 19 வயது இளைஞர்கள் இருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வேலிக்கு தீ வைக் கப்பட்டுள்ளது. வேலி அடைக்கப்பட்டு சில நாள்களே ஆகியிருந்த நிலையில் தீ வைக் கப்பட்டுள்ளது. வேலி முற்றாக எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த நிலையில் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-125)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சரவணமுத்து குமாரசாமி



தோற்றம் 17.08.1936 — மறைவு 10.10.2019

உங்கள் ஆசைமுகம் பார்த்து
ஆண்டிரண்டு ஆகினாலும் - நீங்கள்
எங்கள் மேல் வைத்த பாசம் மாறவில்லை
அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
இத்தரணியிலே வாழ்ந்த
எம் பாசமிகு அப்பாவே
எம்மை எல்லாம் மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்டு - நீவீர்
நிம்மதியாய் உறங்குகிறீர்
உங்கள் நேசமுகம் காண
இப்போதும் ஏங்குகிறோம்...

வாதரவத்தை, புத்தூர்.

நினைவுகளுடன் குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி சிதம்பரப்பிள்ளை சிவசோ...

(நீர்வேலி மத்தி)

(திதி துவாதசி : 17.10.2021)

தோற்றம்-18.11.1927 — மறைவு-13.10.20...

நீர்வேலி மத்தியில் பிறந்து பம்பலப்பிட்டியில் வசித்து இறைவனடி சே... எமது அன்னையின் முதலாம் ஆண்டு நினைவில் அன்பான நினைவுகளுடன் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கிறோம். 15.10.20... இல் இடம்பெற்ற இறுதிக்கிரியைகளில் பங்கேற்றவர்களுக்கும், பிரார்த்... செய்தவர்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாப... தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம்சாந்தி !

6/1, பிராங்போட் பிளேஸ், கொழும்பு-04 | குடும்ப உறுப்பின...



## இன்றைய நாள்

**மேடம்:** குழந்தைகளின் கல்விச் செலவுகள் சற்றுக் கூடும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வேலையில் கவனமும், விழிப்புணர்வும் அவசியம் தேவை.

**இடபம்:** மனதில் உற்சாகம் ஏற்படுத்தும் செயல் ஒன்று நடைபெறும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய நற்செய்தி ஒன்று உண்டு. பணவிடயத்தில் கவனம் தேவை. நோய்கள் நீங்கும்.

**மிதுனம்:** எதிரி ஒருவரால் இருந்த மறைமுகத் தொந்தரவு முடிவுக்கு வரும். உறவினர்களிடம் கவனம் தேவை. பேச்சில் நிதானம் அவசியம். முகத்தில் பொலிவு கூடும்.

**கடகம்:** எவருக்கும் கையெழுத்துப் போட்டு பணம் வாங்கிக் கொடுக்காதீர். சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். பணிகள் விரைந்து முடியும். நகை போன்றவற்றை கவனமாக வைத்துக்கொள்வது நல்லது.

**சிம்மம்:** பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். மூன்றாவது நபர்களிடம் பேசும்போது கவனம் தேவை.

**கன்னி:** இளம் வயதினருக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். செலவு அதிகமாக இருந்தாலும் வரவும் அதிகரித்து நிம்மதி தரும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும். பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பச்சுமை குறையும். செலவு சற்றே அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பொருளாதாரப் பிரச்சினை அகல நண்பர்கள் வழிகாட்டுவர். குடும்பத்தினருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருளை வாங்குவீர்கள்.

**தனுசு:** கற்பனைப் பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டு கவலைப்பட வேண்டாம். மனதுக்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைத்து மகிழும் நாள்.

**மகரம்:** உங்கள் நலம் விரும்புவோரைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். புதிய வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள். காணாமல் போன பொருள் கைக்கு வரும்.

**கும்பம்:** உறவினர்கள் இடையே ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சி கூடும். நண்பர்கள் சந்திப்பு திடீரென்று நிகழ்ந்து உற்சாகம் கூட்டும்.

**மீனம்:** வழக்கமாகச் செய்யும் பணியை இன்றுமாற்றி அமைப்பீர்கள். எப்போதோ எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான சம்பவமொன்று நடைபெறும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும்.

# இந்திய பொருளாதாரம் துரிதகதியில் மீள்கின்றது

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு

**புதுடில்லி, ஒக்.17**

**இந்தியப் பொருளாதாரம் மிக வேகமாக மீண்டு வருகின்றது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு நடைபெற்ற உலக வங்கியின் வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாப் பிரச்சினையையும் மீறி கடந்த நிதியாண்டில் இந்தியாவுக்கு 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபா கோடி அந்நிய நேரடி முதலீடு கிடைத்துள்ளது. இதன்மூலம் உலக முதலீட்டாளர் களிடையே முதலீட்டுக்கு உகந்த நாடு என்ற அந்தஸ்தை தக்க வைத்துள்ளது. மேலும் கொரோனா இரண்டாவது அலையில் தீவிரம் குறைவடைந்த நிலையில், கொரோனாக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் ஜி.எஸ்.டி. வசூல் தலா ஒரு லட்சம் கோடிக்கும் மேல் கிடைத்துள்ளது.

இது, இந்தியப் பொருளாதாரம் வேகமாக மீண்டு வருவதற்கு சாட்சி ஆகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பசுமை விவசாயத்துக்கான 15பேர் செயலணி நியமனம்

மண் மற்றும் நீருடன் கலக்கும் இரசாயனக் கழிவுகளைக் குறைத்துக்கொண்டு, வாழ்வாதார முறைமைகளின் ஊடாகச் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற ஆரோக்கியமான பசுமை விவசாயத்தை அறிமுகப்படுத்தும் அரசின் இலக்கை நிறைவேற்றுவதற்காக பசுமை விவசாயத்துக்கான செயலணி நிறுவப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

ஆராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம், பாதகமான வேளாண்மை இரசாயனங்களைக் குறைத்துக்கொள்வதற்கும் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பானதும் தேசிய சுற்றுச்சூழல் நிலைமைகளுக்குப் பொருத்தமானதுமான சேதனப் பசளை உற்பத்திக்குத் தேவையான ஊக்கப்படுத்தல்களை வழங்குவதற்கான அவசியத்தைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றின் பிரகாரம், மேற்படி ஜனாதிபதிச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விஜித் வெலிகல தலைமையில் நிறுவப்பட்டுள்ள இந்த ஜனாதிபதி செயலணியில், 14 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

பசுமை விவசாயத்தை நிலையாகப் பேணுவதற்குரிய முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், பல்வேறு பயிர்களுக்குத் தேவையான சேதனப் பசளையை அடையாளம் கண்டுகொள்ளல் மற்றும் அந்தப் பசளை உற்பத்தியை மேம்படுத்தல், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளைத் தேசிய அளவில் உற்பத்தி செய்துகொள்ளல், தேசிய உற்பத்திகளின் ஊடாகத் தேவைகளை நிவர்த்திசெய்யும்போது ஏற்படக்கூடிய பற்றாக்குறையை, உயர் தரத்திலும் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் அனுமதியுடனும் வரையறுக்கப்பட்டளவில் இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டம் மற்றும் மேற்பார்வை முறைமைகளை அடையாளம் கண்டுகொள்ளல், சேதன உணவு உற்பத்திகள் மற்றும் நுகர்வு ஆரோக்கியம், சமூக மற்றும் பொருளாதாரப் பிரதிபலன்களை மக்கள் மயப்படுத்துவதற்கான தொடர்பாடல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் இந்த வேலைத்திட்டத்துக்காக அரச துறையினரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கள ரீதியில் சேதன வேளாண்மை விரிவாக்கச் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான பொறுப்புகள் என்பன, இந்த ஜனாதிபதிச் செயலணியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமையை ஒழிப்புக்கான செயலணி மற்றும் காலநிலை மாற்றத்துக்கான நிலையான தீர்வுகளுடன் பசுமை இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென்றும், பசுமை விவசாயத்துக்கான ஜனாதிபதி செயலணிக்கு, இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி ஆணை பிறப்பித்துள்ளார். (ஒ-இ)

**சிகிச்சைக்கு நிதி உதவி தேவை**

69 வயதுடைய வயோதிபத் தாய் ஒருவரின் நுரையீரல் பழுதடைந்துள்ளது உடனடியாக மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வதற்கு நிதி உதவி அவசரமாகத் தேவைப்படுகின்றது.

சு. புவனேஸ்வரி - மக்கள் வங்கி 040-2-001-1-00097873

076 259 9920

**FREE ON-LINE CLASSES**
**பிரிவு VI**

- DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
- DIPLOMA IN SINGALAM
- DIPLOMA IN ICT

ஆரம்பம் : 17,23,24/10/2021, 10.00 AM

குறிப்பு: ஆர்வமுடைய உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் Viber, Whats app ஊடாக இணைய முடியும்.

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ் வழங்கப்படும்

IPS to your future
ON-LINE EDUCATION DIVISION
Jaffna.
021 434 0229 / 076 685 2529

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



ஜனனம் 24.06.1940 மரணம் 17.09.2021

17.09.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி குலரத்தினம் செல்வமலர்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வமலர் வாசா
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

குடும்பத்தினர்.
077 078 4225

### புலம்பெயர்...

அண்மையில், ஐ.நா. பொதுச் செயலரை சந்தித்த ஜனாதிபதி கோத்தாபய, இலங்கையின் பிரச்சினைகள் உள்நாட்டு பொறிமுறையின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், புலம்பெயர் தமிழர்களுடன் இது தொடர்பாக பேச்சு நடத்த தயாராக இருக்கிறேன் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் இலங்கை அரசு தடை செய்த பட்டியலில் உள்ள அமைப்புக்களுடன் பேச்சு நடத்தப்படமாட்டாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

'உலகத் தமிழர் பேரவை, பிரிட்டிஷ் தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் தேசிய சபை, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் உலகத் தமிழ் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவை பாதுகாப்பு அமைச்சகத்தால் தடை செய்யப்பட்ட அமைப்புக்களாகும். இந்த அமைப்புக்கள் தடை செய்யப்பட்ட நபர்களுடன் அரசு பேச்சு நடத்தாது. அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில் நிதியுதவி வழங்கியவர்கள். இப்போதும் புலிகளுக்கு புத்துயிர் அளிக்க முயற்சிப்பவர்கள். அவர்களுடன் பேசுவது பயங்கரவாதிகளுடன் பேசுவதற்கு ஒப்பானது. இலங்கையின் அபிவிருத்தியில் முன்னேற்றத்தில் பங்காளியாக செயற்பட விரும்பும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் இருக்கின்றன. அவர்களுடன் நாம் பேச்சு நடத்துவோம்' என்று பீரிஸ் தெரிவித்துள்ளார். இதேவேளை, ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்ற தடை செய்யப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்த தயார் என்று அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-5,22)

### கோத்தாவின்...

தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'புதிய அரசமைப்பு மற்றும் தமிழர்சார் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் எந்தநேரமும் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால், அந்தப் பேச்சுக்கான அழைப்பு அவரிடமிருந்து இன்னமும் வரவில்லை. இந்நிலையில், இம்மாத இறுதியில் வெளிநாடு செல்லும் ஜனாதிபதி, அடுத்த மாத முற்குதியில் நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பார் என்று வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார். எனினும், இது தொடர்பில் உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து எமக்கு இதுவரை வரவில்லை. அப்படி ஒரு அழைப்பு வந்தால் வரவேற்கத்தக்கது. சர்வதேசத்தின் மனதை ஜனாதிபதி வெல்ல வேண்டுமெனில் முதலில் நாட்டிலுள்ள தமிழர்களின் மனதை அவர் வெல்ல வேண்டும். தேசியப் பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தரத் தீர்வை ஜனாதிபதி கொண்டுவந்தால்தான் இங்குள்ள ஒட்டுமொத்த தமிழர்களின் மனதை அவரால் வெல்ல முடியும்' - என்றார். (ஒ-5,22)

### பிரபாகரன்...

யாவோ, சீனாவோ இலங்கையில் கால் பதித்திருக்கமாட்டாது. இவ்வாறு சிங்கள கடும்போக்கு அமைப்பான எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் டான் பிரசாட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் பிரபாகரன் இருந்திருந்தால், கட்டாயம் திருகோணமலை துறைமுகங்களுக்குரியவை விற்பனை செய்யப்பட்டிருக்க மாட்டாது. சீனா- இலங்கைக்கு வந்து துறைமுக நகரத்தை நிர்மாணித்திருக்காது. இந்தியா துறைமுகங்களை கொள்வனவு செய்யவும் வந்திருக்காது என்று எமக்கு உண்மையில் எண்ணத் தோன்றுகிறது. பிரபாகரன் இருந்திருந்தால், உண்மையில் இவை நடந்திருக்காது. வெளிநாட்டவர்களுக்கு நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. துண்டு துண்டுகளாக விற்பனை செய்கின்றனர். நாடு மிகவும் பயங்கரமான நிலைமைக்கு சென்றுள்ளது.

சீனா, இலங்கைக்கு வந்திருப்பது இந்தியாவின் இரகசியங்களைத் தேட என்று இந்தியா கூறுகிறது. எதிர்காலத்தில் இலங்கை மிகப் பெரிய போர்க் களமாக மாறும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இவ்வாறு சீனாவும், இந்தியாவும் மோதிக்கொண்டால், எமது நாட்டு மக்களே இழப்பீடுகளை செலுத்த நேரிடும். அமெரிக்காவுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்யும் போது, அமெரிக்காவை கடுமையாக எதிர்த்த தற்போதைய அரசில் இருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சீதா அரம்போல ஆகியோர் தற்போது அமைதியாக இருக்கின்றனர், எனவும் டான் பிரசாட் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

### ரஷ்ய...

என. சேவைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அந்தக் கப்பல்கள் நாளை கொழும்பு துறைமுகத்திலிருந்து வெளியேறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தில் முகாமிட்டுள்ள நிலையில் அது தொடர்பில் இந்தியா தீவிர கவனம் செலுத்தியுள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-இ)

### நாடாளுமன்றுக்கு...

இருந்து நீக்கியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் கட்சியால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, புதிய தேசியப்பட்டியல் உறுப்பினரின் பெயரை பரிந்துரைக்க கட்சி நடவடிக்கையெடுத்துள்ளது. அதற்கு அமைவாக ஞானசார தேரரின் பெயர் பரிந்துரைக்கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது. (ஒ-இ)

### முல்லைத்தீவில்...

மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாயின் மூன்றாவது கணவரால் பதின்ம வயதுச் சிறுமிகள் இருவர் தொடர்ச்சியாக பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக கிராமத்தவர்களால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக முல்லைத்தீவுப் பொலிஸாரால் இரண்டு சிறுமிகளும் மீட்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சிறுமிகளின் தாயாரின் உடந்தையுடனேயே அவரது மூன்றாவது கணவரால் அவர்கள் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் கண்டறிந்த பொலிஸார் தாயாரையும் அவரது மூன்றாவது கணவரையும் சந்தேகத்தில் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கமன்று உத்தரவிட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இன்னுமொரு பகுதியில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 72 வயதான ஓய்வு பெற்ற ஆசிரியர் உறவினர்கள் வீட்டில் வசித்து வருகின்றார். அவரிடம் கல்விகற்கச் சென்ற சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்த முயற்சித்தாக உறவினர்களால் குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதற்கு அமைவாக ஓய்வு பெற்ற ஆசிரியர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-19)

### சிறுவர்...

பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். 'இப்படியான வழக்குகள் சில சமயங்களில் 10 வருடங்கள் கூட இழுக்கப்படுகிறது. இப்படி நீண்டகாலம் இழுபடுவதால் பாதிக்கப்பட்டவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பினர் இந்த மாதிரியான குற்றங்களை தொடர்ந்து செய்வார்கள். பரிணாம வளர்ச்சியடைந்த சமூகத்தில் சிறுவர் துர்நடத்தை மற்றும் பெண்களை துர்நடத்தைக்கும் உட்படுத்தும் நபர்கள் பதிவாகக்கூடாது.

துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள் பிற்காலத்தில் வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் சட்ட நடவடிக்கைகள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன- என்றார் வீரசேகர. (ஒ-இ)

### பாடசாலை...

தின் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். '200 க்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகளின் அதிபர்களை பொலிஸார் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டுள்ளமை அபாயகரமான விடயம்.

பொலிஸாருக்கு பொறுப்பாகவுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸார் மூலம் தொலைபேசியில் அழைத்து அச்சுறுத்தல் விடுக்கின்றார். காலி முகத்திடலுக்கு எம்மை அழைத்துச் சென்று ஆப்பு வைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டிஆராச்சி கூறியுள்ளார்.

இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு இரண்டு வருடங்களாக கல்வியை வழங்குவதில் தோல்வி கண்டுள்ள அரசுக்கு நீங்கள் வழங்கும் தண்டனை என்னவென அவரிடம் நான் கேட்கின்றேன்- என்று ஸ்டாலின் கேள்வி எழுப்பினார். (ஒ-இ)

### கடதாசி...

யுள்ளதாக முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியால் நேற்றுமுன்தினமும் 2 ஆயிரம் கோடி ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். மத்திய வங்கி இவ்வாறு பணம் அச்சிடுவதன் காரணமாகவே அனைத்துப் பொருள்களின் விலைகளும் கணிசமாக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

### 23 பேர்...

துடன் நேற்றைய தினம் 649 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-22)

# மீனவருடன் கலந்துரையாடாமல் மீனவருக்கான போராட்டமா?

## அரசியல் இலாபங்களுக்கான தனி மனிதச் செயற்பாடு என்கிறது சமாசம்

யாழ்ப்பாணம், ஒக். 17

மீனவ சமூகத்தை புறந்தள்ளிவிட்டு மீனவருக்காக இன்று போராட்டம் நடத்துவது என்பது வேடிக்கையாகவுள்ளது என்று தெரிவித்த யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாச சம்மேளனத்தின் தலைவர் அ. அன்னராசா, மீனவரின் பிரச்சனையை அரசியல் இலாபத்துக்காக மலினப்படுத்துவதை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மீனவர்களுக்கு ஆதரவாக இன்று நடைபெறும் கடல்வழி போராட்டம் தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் எவரும் எம்முடன் கலந்துரையாடவில்லை. பத்திரிகையூடாகத்தான் இந்தச் செய்தியை அறிந்தோம். பிரதேசவாரியாக 9 கடற்றொழில் சமாசங்களையும், 118 கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதே எமது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம். எம்மிடம் இது குறித்து கலந்துரையாடாமல் எமக்கான போராட்டத்தை தனிமனிதர் ஏற்பாடு செய்வதாக அறிவிப்பது எம்மை சிறுமைப்படுத்தும் செயற்பாடு. இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு இல்லை என்று அறிந்தோம். நொந்துபோயுள்ள மீனவரை மீண்டும் புதைகுழிக்குள் தள்ளுவது போல் அவர்களின் துன்பத்தை வைத்து ஒருசிலர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர். மீனவ அமைப்புக்களுடன் பேசாமல் மீனவ சமூகத்தை புறந்தள்ளிவிட்டு எமது போராட்டத்தை மலினப்படுத்தவே இது திட்டமிட்டு செய்யப்படுகிறது. எம்முடன் பேசியிருந்தால் ஆதரவு கொடுத்திருப்போம். எமக்கான போராட்டம் எனக் கூறி எமது பங்களிப்பு இல்லாமல் போராட்டத்தை மேற்கொள்வது சரியா? அரசியல் நோக்கத்துக்காக இந்தப் போராட்டத்தை தனி ஒரு நபர் மேற்கொள்வது என்றால் இச்சந்தர்ப்பத்தில் எமது கோரிக்கைகள் பலவீனப்படுத்தப்படுகிறது. எமக்கு ஆதரவாக குரல்கொடுப்பதாக கூறி எமது போராட்டங்களை மலினப்படுத்தி வெளி உலகுக்கு எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவது போல் உள்ளது. இதனால் நாம் பெரிதும் கவலையடைந்துள்ளோம். தீர்வு வேண்டி நித்தம் போராடும் எம்மையும் எமது துன்பங்களை வைத்தும் அரசியல் செய்யும் அரசியல் கட்சிக்காரர்களை வன்மையாக கண்டிக்கிறோம்- என்றார். (ஒ-இ)

# வவுனியாவில் விபத்தில் இளைஞன் காயம்

வவுனியா,ஒக்.17

வவுனியா, ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். கிளிநொச்சியில் இருந்து ஏ-9 வீதி ஊடாக வவுனியா நகரை நோக்கிப் பயணித்த மகேந்திரா பட்டா ரக வாகனம், ஏ-9 வீதி ஊடாக ஓமந்தை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் இளைஞர் காயமடைந்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-18)

# ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 17

திருமறைக் கலாமன்றத்தால் மாதந் தோறும் நடத்தப்படும் ஆய்வரங்கத் தொடரின் ஐந்தாவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு (இலங்கை நேரம்) சூம் செயலியூடாக நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது' நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் இந்த ஆய்வரங்கம் நடைபெற்றுவருகின்றது.

யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் பி.ஜே. ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் "நிர்வாக ஆளுமையின் தனித்துவ அடையாளம் மரியசேவியர் அடிகள்" என்னும் தலைப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆய்வை முன்வைக்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச் சொல் cpa ஊடாக நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- ☆ பத்திரிகை விநியோகிப்பவர் (Delivery Boy)
- ☆ துப்பரவு ஊழியர்
- ☆ உதவியாளர்

ஆர்வம் உள்ளவர்கள் **18.10.2021 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை** நேரில் சமூகம் தரவும்.

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

Closing Date 09.11.2021



அமெரிக்க லொத்தர் விசா

DV-2023

இன்றே உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு Passport அவசியம்

**Thirumurugan Com Net** பொதிகள் சேவை

321, K.K.S. Road, Jaffna. **0777 554 528**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வீமன்காமம் வடக்கு பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையில் K.K.S வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் வீமன்காமம் சந்தையின் வாசலுக்கு நேர் எதிரே உள்ள நிலப்பரப்பு 36 குளி 16.45 குளிக் காணி விற்பனைக்கு உண்டு.

**R. செல்வநாயகம்**

**077 396 0224 / 074 049 4027**

## வேலைவாய்ப்பு

யாழில் முன்னணி நிறுவனங்களிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. சாரதி, துப்புரவுப்பணியாளர், சமையல் உதவியாளர், வரவேற்பாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், துப்புரவாளர், விற்பனையாளர் (ஆண்/பெண்), பரிமாறுபவர், Graphic Designer இன்னும் பல வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

தொடர்புகளுக்கு: **076 674 3807**

## காணி விற்பனைக்கு

யாழ், கோப்பாய், உரும்பிராய் பிரதான வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு.
(உரும்பிராய் கிருஸ்ணன் கோவிலுக்கு அருகாமை)
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தொடர்பு கொள்ளவும். (1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்).

**077 468 3354 (குரு), 077 288 0152, 077 505 8561**

## சுயதொழில் முயற்சியாளர்களுக்கான அரியவாய்ப்பு

**SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்தின் கீழ் அங்கர் உற்பத்திகளை (குளிர்நிலை மற்றும் திரவநிலை பொருள்கள்)** விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவைப்படுவதால் குளிர்சாதன வாகன வசதியுள்ள முயற்சியாளர்கள் தொடர்புகொள்ளவும்.



SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்
No, 154, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: **077 735 0490**

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள பன்சி கடை (Fancy) ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

**077 788 7271**

## Personal and group Classes

விஞ்ஞானம் : தரம் 6 - 11 வரை
உயிரியல் : 2023 Batch

பெண் ஆசிரியை **076 282 2967**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல கவரிங் நகை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண் / பெண் பணியாளர்கள் தேவை.

**077 260 4233**

## Personal English Classes

தனி வகுப்புகள் யாழ் நகரில்
Grammar & Spoken Grade 7 to Graduates including English medium Courses செய்பவர்கள் தொழில் புரிவோர்.

**077 766 8725**

## ENGLISH CLASSES

**Zoom** மூலம் **Gr. I to O/L**
அல்லது வீடு வந்து கற்பிக்கப்படும்
**Grammar and Syllabus**
**T.P.: 077 331 4608**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 419 5015**

## கணிதம் தரம் 6 - 11 ஆங்கில மொழிமூலம்

அனுபவம் வாய்ந்த கல்லூரி ஆசிரியரின் குழு வகுப்புகள்
திருநெல்வேலி சிவன் கோயில் அருகாமை

**077 864 5971**

## பெண் உதவியாளர் தேவை

முல்லைத்தீவில் உள்ள வயோதிபப் பெற்றோரை தங்கி இருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் **35,000/=**

**077 710 0874**

## காணி விற்க வாங்க

காணி வீடு விற்க விரும்புபவர்களுக்கான தரகர் கட்டணம் 2%உம் வாங்குபவர்களுக்கான தரகர் கட்டணம் 1% உம் அறவிடப்படும்.

**077 912 2789, 077 018 6171**

## விற்பனைக்கு

இயக்கச்சியில் A9 வீதியில் இருந்து 700m தூரத்தில் 36 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு உள்ளது. **தரகர் தேவையில்லை.**

**077 221 6683, 077 227 6639**

## பணியாளர்கள் உடன் தேவை

கிளிநொச்சியில் உள்ள **Hotel** ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- ★ சமையலாளர்கள்
- ★ கிச்சன் கெல்பர் (உதவி சமையலாளர்)
- ★ வெயிற்றர்
- ★ துப்புரவு பணியாளர்கள்

**077 231 5521**

**JOBSIN**
BUILD YOUR DREAM JOB HERE

**யாழ் வேலை வாய்ப்புக்கள்**


சரியான பிடித்த வேலை கிடைக்கும்வரை வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

250 இற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் தற்போது எம்மிடம்

அழையுங்கள் 077 408 8241


## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 10 . 1937



இறப்பு 16 . 10 . 2021

# சங்கரப்பிள்ளை முருகையா

**(ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் பரிசோதகர்)**

ஆழங்குளாய் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வதிவிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை முருகையா நேற்று (16.10.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சீதாதேவியின் அன்புக் கணவரும், ரஜனி (ஸ்பெயின்), சுதாகரன் (கரன்), முகுந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, பாக்கியலட்சுமி, சொர்ணலட்சுமி, கனகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பாலச்சந்திரன், மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலகிரிசாந், பாலபிரசாந், மாதுமை, மாதனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்பு: சுதாகரன் (மகன்)**
**077 650 3769**

**தகவல்: குடும்பத்தினர்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

மலை :33 | வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 31 | ஞாயிற்றுக்கிழமை (17.10.2021) | சிகரம் : 69


அரசியலில் கயவர்களின் வருகை
அறியாமைக்கு நாம் அளிக்கும் சலுகை
நரிகள் ஆள வந்துவிட்டதால்
ஓநாய் எல்லாம் உயிர் குடிக்கும்
அரிமாக்களாய் வாழ்வதுவே பெருமை

-மஹாகவி



# தீயே உனக்கு தீராத பசியா?

## கூண்டோடு மாண்ட குடும்பம்

## கொலையா? விபத்தா?



○ உளவாளி+ சனத்

*07.10.2021 வியாழக்கிழமை*
*இரவு 10.15 மணி.*

நுவரெலியா மாவட்டம், ராகலை பகுதியில் உள்ள குடியிருப்பு மெல்லமெல்ல இரவின் தாலாட்டில் உறங்கத் தொடங்கியிருந்தது. திடீரென அந்த உறக்கத்தைக் கலைத்தது போல எழுந்தது ஒரு பெருநெருப்பு. நெருப்பின் வெம்மையும் வெளிச்சமும் உறங்கச் சென்றவர்களை பதை பதைக்கவைத்தது. எல்லோரும் ஓடோடிச் சென்றனர். தீயை அணைக்க எவ்வளவோ போராடினர். ஆயினும் எல்லாமே தோல்வியில் முடிந்தன. அந்த வீடு எரிந்து கரிக்கட்டையானது. வீட்டுக்குள் ஐந்து பேர் கருகிப்போய் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இராமையா தங்கையா (வயது -61), அவரது மனை லெட்சுமி (வயது 57), தங்கையாவின் மகள் நதியா (வயது 34), நதியாவின் பிள்ளைகளான துவாரகன் (வயது 13), ஹெரோசன் (வயது 1) ஆகிய ஐவருமே அந்த வீட்டுக்குள் ஒரே இரவில் எரிந்து கருகிப்போய் உயிர்விட்டவர்கள். ராகலை பறிச்சகாடு தேயிலை மலையின் பொதுமயானத்தில் அந்த ஐந்து உடல்களும் ஒன்றாகப் புதைக்கப்பட்டன.

ஐவரும் விபத்தில் மாண்டார்களா? அல்லது கொலைசெய்யப்பட்டார்களா?

## நதியா துயரின் நதியா?

நதியாவுக்கு எப்போதும் நிம்மதி இருந்ததில்லை. அவள் பிறந்த சிறிது காலத்திலேயே தாயார் பிரிந்துவிட தந்தையாரான தங்கையா இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். சிற்றன்னையாக வந்த லெட்சுமி தன்னுடைய சொந்தமகள் போலவே நதியாவையும் பார்த்துக்கொண்டார். லெட்சுமி - தங்கையா தம்பதிக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைதான் ரவீந்திரன். குடும்பச் சூழலும் பொருளாதார இறுக்கமும் நதியாவையும் ரவீந்திரனையும் பாடசாலைக்கு அதிக நாள்கள் செல்ல அனுமதிக்கவில்லை. தமது தாய், தந்தையரைப்போல அவர்களும் சிறு வயதிலேயே வேலைக்குச் செல்ல தொடங்கிவிட்டனர்.

இந்த நிலையில்தான் நதியாவுக்கு சத்தியநாதனோடு திருமணம் நடந்தது. ஓர் ஆண் மகவுக்கும் (துவாரகன்) தாயானாள். கணவன், பிள்ளை என்று அவள் வாழ்க்கை பூத்துக்குலுங்கியது. தன் வாழ்வில் இனி எல்லாமே நல்லதாகவே நடக்கும் என்று நம்பிக்கொண்டிருந்த நதியாவின் நம்பிக்கையில் இடி விழுந்தது. கணவனை காலன் திடீரெனப் பறித்துக்கொண்டான். ஒற்றைக் குழந்தையோடு மீண்டும் அவள் வாழ்வை இருள் கௌவிக் கொண்டது. மீண்டும் பெற்றோரைத் தஞ்சமடைந்தாள். எவ்வளவு காலம்தான் பெற்றோரின் தயவிலேயே தங்கியிருப்பது என்று எண்ணிக்கொண்டவள் தனக்கும் பிள்ளைக்குமாக ஒரு தொழிலைத் தேடத் தொடங்கினாள். ஆரம்பத்தில் கூலி வேலைக்குப் போய்க்கொண்டு இருந்தவள் பின்னர் ஓர் ஆடைத்தொழிற்சாலைக்குப் போய்வரத் தொடங்கினாள்.

வீட்டிலிருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் அந்த ஆடைத் தொழிற்சாலைக்கு நடந்துதான் செல்லவேண்டும். அப்படிச் சென்றுவரும் வழியில்தான் அவளுக்கு மோகனதாஸின் நட்புக் கிடைத்தது. இந்த நட்பு காலப்போக்கில் காதலாகிக் கசிந்து அவள் கர்ப்பமானது. மோகனதாஸ் அவளைத் தன்னுடைய மனைவியாக்கிக்கொள்ளச் சம்மதித்தான். மீண்டும் அவள் வாழ்வில் வசந்தம் துளிர்த்தது. ஹெரோசன் என்ற இன்னொரு ஆண் மகவுக்கு நதியா தாயானாள். இப்போது அவளுக்கு இரண்டு பிள்ளைகள். கூடவே காதல் கணவர். கையில் வேலையும் இருந்ததால் எந்தக் கவலையும் இருக்கவில்லை. ஆனால், காலம் அவளை அவ்வளவு சுலபத்தில் விடுவதாக இல்லை.

மோகனதாஸுக்கும் நதியாவுக்கும் இடையே மனஸ்தாபங்கள் எழத்தொடங்கின. ஆரம்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்களோடு முடிந்துபோன இந்தக் குடும்பச் சச்சரவுகள் போகப்போக அடிதடிவரை பெரிதாகத் தொடங்கின. நதியாவுக்கு ஊரில் வேறு சிலரோடு தகாத தொடர்பு இருப்பதாக மோகனதாஸ் அடிக்கடி குற்றஞ்சாட்டத் தொடங்கினான். இந்தச் சந்தேகத்தை மனதில்வைத்தே ஒவ்வொரு முறையும் அவன் புதுப்புதுப் பிரச்சினைகளைக் கிளப்பினான். ஒரு கட்டத்தில் மோகனதாஸ், நதியாவை விட்டுப்பிரிந்து தனியாக வாழப்போகும் அளவுக்குப் பிரச்சினை முற்றியது. நதியாவைப் பிரிந்திருந்தாலும் தன் பிள்ளை ஹெரோசன் மீது மோகனதாஸ் பிரியமாகவே இருந்தான். இந்த நிலையில்தான் ஹெரோசனின் முதலாவது பிறந்ததினம் வந்தது.



சந்தேகநபர் ரவீந்திரன்

## மரண இரவு

07.10.2021 வியாழக்கிழமை
ஹெரோசனின் முதலாவது பிறந்த நாள்.

தன் பிள்ளையின் முதல் பிறந்த நாளை பெரிதாகக் கொண்டாட வேண்டும் என்பது நதியாவின் விருப்பம். கொரோனா வந்ததால் ஒன்றுகூடுவதற்கான அனுமதி இல்லையென்றாலும்கூட அக்கம்பக்கத்தாருக்கு இரவு உணவுகொடுத்து அன்றைய நாளை சிறப்பிக்க நினைத்தாள். அவளின் இரண்டாவது கணவனும் ஹெரோசனின் தந்தையுமான மோகனதாஸ் நீண்ட நாள்களுக்குப் பின்னர் அன்று வீட்டுக்கு வந்திருந்தான். கையில் மகனுக்கான பிறந்தநாள் கேக்.

கேக்கை மகனுக்கு கொடுத்துவிட்டு அவனைத்தூக்கி சிறிதுநேரம் கொஞ்சிக் குலாவிவிட்டு மோகனதாஸ் சென்றுவிட்டான். நதியா பிறந்த நாள் கொண்டாட்டம் முடியும் வரையாவது நின்றுவிட்டுச் செல்லுமாறு கெஞ்சினாள். ஆனால், மோகனதாஸ் அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை.

சரி இதுதான் வாழ்க்கையென்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டவள் அன்றைய பிறந்தநாள் கொண்டாட்ட வேலைகளில் மூழ்கிப்போனாள். எல்லாமே நல்லபடியாகத்தான் நடந்தன. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் வந்து ஹெரோசனை வாழ்த்தினார்கள். பரிசுகளைக் கொடுத்தனர். நதியா குடும்பம் தயாரித்த இரவுணவை உண்டு மகிழ்ந்தனர். ஆனந்தம் என்னும் பேராறு அந்தச் சிறு வீட்டுக்குள் அன்றைய பொழுது முழுதும் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. காலையில் மோகனதாஸ் கொடுத்துச் சென்ற பிறந்த நாள் கேக்கை, முன்னரே வீட்டுக்காரர் உண்டு முடித்துவிட்டதால் இன்னொரு கேக்கை நதியாவின் சகோதரனான (சிற்றன்னையின் மகன்) ரவீந்திரன் எடுத்து வந்திருந்தான். அந்தக் கேக்கைத்தான் குழந்தை ஹெரோசன் கத்தியால் வெட்டி தன் பிறந்தநாள் கொண்டாட்டத்தை ஆரம்பித்திருந்தான்.

விருந்து முடிந்து வந்தவர்கள் எல்லோரும் போயாயிற்று. இப்போது அந்த வீடும் அந்தக் குடும்பமும் மட்டுமே. அக்கம்பக்கமெல்லாம் உறக்கத்துக்குள் மூழ்கத் தொடங்கியபொழுது அந்த வீட்டில் இருந்து பெரிதாக எழுந்தது தீயின் கொடுஞ்சுவாலை. சற்று முன்னர்தான் ஆட்டமும் பாட்டமும் ஆளரவமுமாக சந்தோசத்தில் திளைத்த

11

சஞ்சீவி
17 ஒக்ரோபர் 2021

# 13 ஆவது திருத்தமும் புதிய யாப்பும்



○ நிலாந்தன்

ஒரு புதிய யாப்பை இந்த ஆண்டின் இறுதிக்குள் கொண்டுவரப் போவதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருக்கிறார். இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அநுராதபுரத்தில் உள்ள ஒரு படைமுகாமில் நடந்த ஒரு வைபவத்தில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அரசாங்கம் அதன் யாப்புருவாக்க முயற்சியில் மெய்யாகவே ஈடுபடுகிறதா என்ற கேள்வியை மேலும் வலிமைப்பப்படுத்தியிருக்கிறது.

யாப்புருவாக்கத்துக்கான நிபுணர் குழுவைச் சேர்ந்த ஒருவர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் ஒரு புதிய யாப்புக்கான சட்டவரைபை அரசாங்கம் தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது. அதை நம்பித்தான் சம்பந்தர் அண்மைக்காலங்களில் ஒரு புதிய யாப்பு உருவாக்கப்படும் என்று என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்து வருகிறாரோ தெரியவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளோடு பேசிய பொழுது சம்பந்தர் ஒரு புதிய யாப்பு உருவாக இருப்பது குறித்து கருத்து தெரிவித்திருந்தார். அதன்பின் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு வர இருந்த பின்னணியில் சம்பந்தர் பங்காளிக் கட்சிகளை நோக்கி ஓர் அறிக்கை விட்டிருந்தார். அந்த அறிக்கையில் கூட்ட மைப்பின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்று அழைப்பு விட்டிருந்ததோடு ஒரு புதிய யாப்பு உருவாகவிருக்கும் சூழலில் கூட்டமைப்பின் ஐக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்படவும் கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஒரு புதிய யாப்பைக் குறித்த கருத்துக்களை அவர் இந்திய வெளியுறவுச் செயலரைச் சந்திக்கும்போது கூறுவதைத் தவிர்ப்பது நல்லது என்று பங்காளிக்கட்சிகள் கருதியதாக தெரிகிறது. மாறாக சந்திப்பின்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று வெளியுறவுச் செயலரிடம் கேட்கவேண்டும் என்று ஒரு பங்காளி கட்சி சம்பந்தருக்கு வலியுறுத்தியதாக தெரிகிறது. சந்திப்பின்போது மேற்படி பங்காளிக்கட்சியின் தலைவர் அதனை தொடக்கத்திலேயே வெளியுறவுச் செயலரை நோக்கி ஒரு வேண்டுகோளாக முன்வைத்ததாகவும் அறியமுடிகிறது. இந்திய வெளியுறவுச் செயலரின் நிலைப்பாடும் அதுவாக இருந்த காரணத்தால் உரையாடலில் அந்த விடயம் பேசப்பட்டிருக்கிறது. எனினும் உரையாடலின் போக்கில் சம்பந்தர் ஒரு புதிய யாப்பை குறித்தும் கருத்து கூறியதாக அறிய முடிகிறது.

பல மாதங்களுக்கு முன்பு கூட்டமைப்பினர் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தபோதும் இது குறித்து அவர் வலியுறுத்தியதாக தெரிகிறது. ஒரு புதிய யாப்பை உருவாக்கும்பொழுது 13 வது திருத்தம் என்ற பேச்சு எழப்போவதில்லை. அந்தப்புதிய யாப்புக்குள் 13 ஆவது திருத்தத்தின் முழு அளவு உள்ளடக்கமும் இணைக்கப்படுமாயிருந்தால் பிரச்சினை இல்லை. மாறாக 13 ஆவது திருத்தத்தை விடக் குறைவான அதிகாரங்களே அதில் இருந்தால் அதைக் குறித்து இந்தியா அழுத்தம் எதையும் பிரயோகிப்பது கடினமாக இருக்கும். ஏனென்றால் ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது இலங்கை தீவில் உள்நாட்டு விவகாரம். அதேசமயம் 13 ஆவதுதிருத்தம் என்பது இந்திய -இலங்கை உடன்படிக்கையின் விளைவு. அதனால் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா அதில் தலையிட முடியும் என்ற தொனிப்பட ஜெய்சங்கர் கூட்டமைப்பிடம் கருத்துத் தெரிவித்ததாக தெரிகிறது. எனினும் கடந்த 12 ஆண்டுகளாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியா இலங்கையை வற்புறுத்தவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.


ஜெய்சங்கரைச் சந்தித்த பின்னரும் சம்பந்தர் ஒரு புதிய யாப்பைக் குறித்து பேசுமளவுக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று அழுத்தமாகப் பேசுவதாகக் தெரியவில்லை.. இந்தியாவின் அழுத்தத்தோடு ஒரு தீர்வைப் பெற முயற்சித்தால் அது சிங்களமக்களை பகை நிலைக்குத் தள்ளும் என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது. சிங்கள மக்களைப் பயமுறுத்தாமல் ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தால் இந்திய அழுத்தம் என்ற விவகாரம் புதிய யாப்புருவாக்க முயற்சியில் ஒரு விவகாரமாக இருக்கக்கூடாது என்று சம்பந்தர் கருதுகிறாரோ எனத் தெரியவில்லை.

கடந்த வாரம் ஜனாதிபதி அநுராதபுரத்தில் வைத்து ஆற்றிய உரை சம்பந்தரின் நம்பிக்கையை பதப்படுத்தக்கூடும். கடந்த ஜெனிவா கூட்டத்தொடரின்போது அரசாங்கம் கொழும்பிலுள்ள தூதரகங்களுக்கும் ஐ.நாவுக்கும் அனுப்பிய அறிக்கையில் நிலைமாறு காலநீதி செய்முறைகளை ரணில் விக்கிரமசிங்க விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து தான் முன்னெடுப்ப தாக ஒரு தோற்றத்தைக் காட்டியிருந்தது. அத்தோற்றத்தை மேலும் பலப்படுத்தவேண்டுமாக இருந்தால் ஒரு புதிய யாப்பைக் குறித்தும் பேசவேண்டியுள்ளது. ஆனால், இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் ஒரு புதிய யாப்பை எந்த அடிப்படையில் உருவாக்குவது? என்பதுதான்.

அண்மையில் 'இந்து' பத்திரிகைக்கு பேட்டியளித்த மிலிந்த மொரகொட கூறுவதுபோல அது இந்தியாவின் உதவியோடு கூடிய ஒரு உள்நாட்டுத் தயாரிப்பாக இருக்கமுடியுமா? இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் பிராந்திய மயப்பட்டுவிட்டன; அனைத்துலக மயப்பட்டுவிட்டன. திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் அதன்பின் ஜெனிவா வரையிலும் அது போய்விட்டது. எனவே அதற்கு உள்நாட்டு தீர்வு கிடையாது. இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் காண்பது என்றால் ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணையோடு கூடிய ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது அரசியல் உடன்படிக்கை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே எழுதப்படவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் யாப்புருவாக்கக் குழுவுக்கு தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த முன்மொழிவில் இது கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தத்தோடு ஒரு சமாதான உடன்படிக்கை எழுதப்பட்ட பின்னரே அந்த உடன்படிக்கையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களை ஒரு சட்டக்கட்டமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கத்தோடு ஒரு யாப்பை வரையவேண்டும். மாறாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுக்க முழுக்க ஒரு யாப்புருவாக்க முயற்சியாகக் குறுக்கக்கூடாது.



ரணில் விக்ரமசிங்கவின் யாப்புருவாக்க முயற்சிகளில் இந்த இரண்டு அம்சங்களில் ஒன்றாகிய மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் என்ற அம்சம் ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் 30/1 தீர்மானமானது நிலைமாறுகால நீதிக்குரியது. நிலைமாறு காலநீதிச் செய்முறைகளின் கீழ் ஒரு தீர்வைக்காணும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டது. யாப்புருவாக்கத்துக்காக வழிநடத்தற்குழுவும் உபகுழுக்களும் உருவாக்கப்பட்டு ஒரு யாப்புக்கான இடைக்காலவரைபுவரை அது முன்னேறியது.

ரணில் விக்கிரமசிங்கவின் தீர்வுக்கான முயற்சிகளை இக்கட்டுரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் அவர் ஒரு விடயத்தை ஒப்பீட்டளவில் செய்ய முற்பட்டார். அது என்னவெனில் யாப்புருவாக்க முயற்சி என்பது பொறுப்புக்கூறலின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும், நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்பதே அது. அதேசமயம் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்போடு சேர்ந்து வேறு ஒரு தந்திரத்தையும் செய்தார். என்னவெனில், நீதி விசாரணைகளில் இருந்து தீர்வுக்கான முயற்சிகளைப் பிரித்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நீதி விசாரணையையும் வேறுவேறு ஆக்கினார்.

இப்பொழுது கோத்தாபய அதன் அடுத்தகட்டத்துக்கு போக முயற்சிக்கிறாரா? அவர் யாப்புருவாக்க முயற்சிகளை பொறுப்புக்கூறலில் இருந்து பிரிக்க முயற்சிக்கிறாரா?

ஒரு புதிய யாப்பு ஏன் தேவைப்படுகிறது? பழைய யாப்பு பிரச்சினைகளை தீர்க்க தவறிவிட்டது என்பதனால் தானே? பழைய யாப்பு ஏன் பிரச்சினைகளை தீர்க்க தவறியது ? ஏனென்றால் பழைய யாப்பு நாட்டின் பல்லினத்தன்மையை பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதால்தான். அப்படி என்றால் ஒரு புதிய யாப்பு இலங்கை தீவின் பல்லினத் தன்மையை பாதுகாக்கும் நோக்கிலானதாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால், தன்னை தனிச் சிங்கள மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் வெற்றி பெற்றதாக காட்டிக்கொள்ளும் ஓர் அரசாங்கம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியுமா? தனிச்சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற வெற்றிக்கோஷம் பல்லினத்தன்மைக்கு எதிரானது. நல்லிணக்கத்துக்கு எதிரானது. நிலைமாறு காலநீதிக்கு எதிரானது. .ஒரு புதிய யாப்பை உருவாக்குவது என்பது நல்லிணக்கப் பொறிமுறையின் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியாக அமைய வேண்டும். ஆனால் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியாத ஒரு அரசாங்கம் எப்படி அப்படிப்பட்ட ஒரு யாப்பை உருவாக்கமுடியும்? இதுதான் பிரதான கேள்வி. மிகக் குறிப்பாக, ஐ.நா.வில் வெளியகப் பொறிமுறையை இந்த அரசாங்கம் நிராகரிக்கிறது. உள்ளகப் பொறிமுறையைத் தான் வலியுறுத்துகிறது. இந்தியாவுக்கான புதிய தூதுவர் மிலிந்த மொரகொட இனப்பிரச்சினைக்கு தீர்வாக உள்ளூர்த் தயாரிப்பான ஒரு தீர்வைத்தான் மனதில் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி என்றால் ராஜபக்சக்கள் உள்ளகப் பொறிமுறை, உள்நாட்டு விசாரணை, உள்நாட்டுத் தயாரிப்பான ஒரு தீர்வு என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே தொகுத்துப் பார்த்தால் எமக்கு கிடைக்கும் சித்திரம் தெளிவானது.

இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறல், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற எல்லாவற்றையும் அனைத்துலகமய நீக்கம் செய்வதற்கு அல்லது பிராந்தியமய நீக்கம் செய்வதற்கு முயற்சிக்கின்றதா? அவ்வாறு நல்லிணக்கத்தை, பொறுப்புக்கூறலை, இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியாரின் தலையீடுகள் அற்ற உள்நாட்டு வடிவிலானதாக மாற்றுவது என்பது இறுதியிலும் இறுதியாக தமிழ்மக்களை தனிமைப்படுத்தும் ஒரு உத்திதான். அவ்வாறு பொறுப்புக்கூறலை உள்நாட்டுக்குள் குறுக்கும் ஒரு உத்திக்கு கூட்டமைப்பும் உடந்தையாக இருக்கக்கூடாது என்று கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் கருதுவதாகத் தெரிகிறது.

மேலும், அண்மையில் ஐ.நா.வுக்கு ஒன்றாகக் கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளும் அவ்வாறே சிந்திப்பதாகத் தெரிகிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்பதனை சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு முன் நிபந்தனையாக முன்வைக்கவேண்டும் என்று அவை கேட்கின்றன. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையே நம்பிக்கைகளை கட்டியெழுப்புவதற்கான ஒரு நிபந்தனையாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று மேற்படி கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. அப்படி ஒரு முன் நிபந்தனையை முன்வைத்தால் அது இந்தியாவையும் இது விடயத்தில் பொறுப்புக்கூறவைக்கும் என்று பங்காளிக்கட்சிகள் கருதுகின்றன. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தரப்பு கோரிக்கை வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. இது விடயத்தில் தமிழ்த் தரப்பு அதற்காக உழைத்தால்தான் இந்தியாவும் சேர்ந்து செயற்படலாம் என்ற தொனிப்பட இந்திய வெளியுறவுச் செயலர் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உண்டு. சம்பந்தர் அதற்கு உடன்பாடு தெரிவித்ததாகவும் தெரிகிறது. ஆனால் அதேசமயம் ஒரு புதிய யாப்பைக் குறித்த கற்பனைகளும் அவரிடம் இருப்பதாகத் தெரிகிறது. ■

# புரிந்து கொள்ளுமா புதுடில்லி?

## இலங்கை குறித்த இந்திய வெளியுறவு கொள்கையில் மாற்றம் வருமா?

அ.நிக்ஸன்



இலங்கையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகக் காலம் கடந்து இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மத்தியில், பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினரும் மூத்த அரசியல்வாதியுமான சுப்பிரமணியன் சுவாமியின் கொழும்பு வருகை ஆரோக்கியமான உறவை உருவாக்குமெனக் கூறமுடியாது. ராஜபக்ச குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என்ற முறையில் மகிந்த ராஜபக்சவின் பிரதமர் மாளிகையில் இடம்பெற்ற சரஸ்வதி பூஜையில் முக்கிய பிரமுகராகக் கலந்து கொள்ள சுப்பிரமணியன் சுவாமி கொழும்புக்கு வந்திருந்தார். அவருடைய வருகை தனிப்பட்ட முறையில் அமைந்திருந்தாலும் இதன் மூலம் இந்தியாவுடன் ஒத்துச் செல்ல வேண்டுமென்ற நெருக்கத்தை இலங்கைக்கு ஏற்படுத்தாது.

அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, சுப்பிரமணியன் சுவாமி தனிப்பட்ட முறையில் ராஜபக்ச குடும்பத்துக்கு நெருக்கமானவராக இருக்கலாம். ஆனால் இந்தியாவைக் கடந்து தமது அரசியல். பொருளாதார நகர்வுகளை அமெரிக்கா, சீனா போன்ற வல்லாதிக்க நாடுகளுடன் முன்னெடுக்க வேண்டுமென்ற சிந்தனை சிங்கள ஆட்சியாளர்களிடம் 2009 க்குப் பின்னர் வலுப்பெற்றுள்ளமை.

இரண்டாவது, இந்தியாதான் தங்கள் இரத்த உறவு என்று காலம் காலம் காலமாக நம்புகின்ற ஈழத்தமிழ் மக்கள், சுப்பிரமணியன் சுவாமி தொடர்பாக ஆரோக்கியமான கருத்தைக் கொண்டிருப்பதில்லை. இதனால் இந்தியா தற்போது எடுக்கும் குறைந்தபட்ச முயற்சிகூட பயனளிக்காதென்றே அவர்கள் கருதுகின்றனர்.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை 2009 இல் முற்றாக அழித்தவர் மகிந்த ராஜபக்ச என்ற அடிப்படையிலேயே ராஜபக்ச குடும்பத்தோடு சுப்பிரணியன் சுவாமிக்கு மேலும் நெருக்கம் ஏற்பட்டதாக ஈழத்தமிழர்கள் நம்புகின்றனர்.

ஆகவே இவ்வாறான பின்புலத்தில் சுப்பிரமணியன் சுவாமி இலங்கையோடு உறவைப் பேணும் நிலையில், அவர் அங்கம் வகிக்கும் நரேந்திரமோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கம், இலங்கையோடு பேணும் உறவு நிலை அல்லது தமது கட்டுப்பாட்டுக்குள் இலங்கையைக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகள் எல்லாமே இந்திய நலன் சார்ந்தது என்ற உணர்வே தமிழர்களுக்கு உருவாகும். இந்தியா மீதான நம்பிக்கையீனம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்கனவே வேரூன்றியிருக்கும் நிலையில், சுப்பிரமணியன் சுவாமி போன்றவர்கள் கொழும்போடு வைத்திருக்கும் உறவு, இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்குமிடையேயான உறவை மேலும் தூரத் தள்ளிவைக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை.

அத்துடன் சுப்பிரமணியன் சுவாமி கொழும்போடு குறிப்பாக ராஜபக்ச குடும்பத்தோடு நெருக்கமாகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கிறார் என்பதற்காகச் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு இலங்கையில் சிறந்த முக்கியத்து வம் கொடுப்பார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

எனவே இவற்றை உற்று ஆராய்ந்து தமது நகர்வுகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களைச் செய்யாமல், குறிப்பாக பாராம்பரியமான மரபு வழி வெளியுறவுக் கொள்கையை மாத்திரம் வைத்துக் கொண்டு, இலங்கையைத் தமது கட்டுப்பாட்டில் அல்லது புதுடில்லியோடு ஒத்துப்போகக்கூடிய முறைமையை உருவாக்கவே முடியாது என்பது பட்டறிவு.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த உணர்வுகளுக்கு எதிரான இந்தியப் பிரமுகர்கள் மூலமாக இலங்கையை இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தமக்குச் சாதமாகக் கொண்டுவரலாம் அல்லது சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தலாமென நம்புவதும் இந்திய நகர்வுக்கு நல்லதல்ல.

இந்தோ- பசுபிக் மற்றும் தென்சீனக் கடல் பிராந்திய விவகாரங்களில்கூட அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் தமது வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்களையும் காலத்தின் தேவை கருதிய திருத்தங்களையும் மேற்கொள்ளும்போது, அந்தப் போட்டியின் பங்குதாரராக இருக்க விரும்பும் இந்தியாவும், இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் ஏன் மாற்றங்களைச் செய்ய முடியாதென்ற கேள்விகளும் இல்லாமல் இல்லை.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா ஆகிய நாடுகள் இணைந்து மேற்கொண்ட இராணுவப் பாதுகாப்புக்கூட்டணியான அக்யூஸ் ஒப்பந்தம் ஆசியான் உறுப்பு நாடுகளிடையே பிளவுகளைக் கொண்டு வருமெனவும் தமது ஆயுதபலத்தைக் குறைக்கும் என்றும் மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் வெளிப்படையாகவே கூறுகின்றன. பிலிப்பைன்ஸைத் தவிர ஏனைய உறுப்பு நாடுகள் இதுகுறித்து விமர்சிக்க ஆரம்பித்துள்ள நிலையில், இதுவரை இந்தியா அக்யூஸ் ஒப்பந்தம் குறித்து தமது அதிகாரபூர்வமான கருத்தை வெளியிடவில்லை. ஆனால் இந்தியாவைத் தலைமையாகக் கொண்டு இயங்கி வரும் ஆசியாவின் நேட்டோ இராணுவ அணியென வர்ணிக்கப்படும் குவாட் அமைப்புக்கு ஆசியான் நாடுகளின் ஆதரவு உண்டு. ஏனெனில் பிராந்தியத்தில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற உணர்வு பல ஆசியான் உறுப்பு நாடுகளிடம் இருக்கின்றன.

ஆகவே இந்தோ? பசுபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு அவ்வப்போது புதிய வியூகங்களை வகுத்து வரும் அமெரிக்கா, தனது வெளியுறவுக் கொள்கையிலும் தேவையான அளவு மாற்றங்களை அல்லது விட்டுக் கொடுப்புகளைச் செய்து வருகின்றது என்பது சமீபகால வெளிப்பாடு. உதாரணமாக அவுஸ்திரேலியாவுக்கு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்கி இந்தோ- பசுபிக் மற்றும் தென் சீனக் கடல் விவகாரங்களில் மாற்றங்களைக் கையாள்கின்றது. (ஆப்கானிஸ்தானில் இருந்து படைவிலகிய பின்னர்)

அது மாத்திரமல்ல அமெரிக்கச் சீனப் பேச்சுக்கள் கூட ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசியல், பொருளாதார வளர்ச்சி மற்றும் இராணுவச் செயற்பாடுகள். பிராந்தியப் பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் சீனாவுடன் விரிவாக ஆராய அமெரிக்கா முற்படுகின்றது. சீனாவுடனான வர்த்தக உறவுக்குச் சாத்தியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் கூறியிருக்கிறார். அக்யூஸ் ஒப்பந்தம் தெற்காசியப் பிராந்தியத்தில் அச்சுறுத்தல்களை உருவாக்கும் என்று பல ஆசியான் உறுப்பு நாடுகள் எச்சரிக்கை செய்து வரும் நிலையில், அமெரிக்கா, சீனாவுடனான உறவு குறித்துப் புதிய வியூகம் ஒன்றை வகுத்துள்ளமை அதன் வெளியுறவுக் கொள்கையின் மாற்றம் என்றே கருத இடமுண்டு. நீண்டதூர நோக்கில் இதனை அமெரிக்கா முன்னெடுக்கும் தற்பாதுகாப்புச் சமாதான முயற்சி என்று கருதினாலும், பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்கும் செயற்பாடாகவே நோக்கலாம். ஏனெனில் அக்யூஸ் ஒப்பந்தத்தின் பின்னரான ஆசியான் உறுப்பு நாடுகளின் கருத்து வெளிப்பாடுகள், அமெரிக்காவை சீனாவோடு பேசுவதற்கும் தூண்டியிருக்கலாம்.

ஏனெனில், அடுத்த மாதம் ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது. இந்தப் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியாவும் கலந்துகொள்ளும். ஆகவே அதற்கு முன்னராக ஆசியான் நாடுகளைச் சமாதானப்படுத்தக்கூடிய ஏற்பாட்டுக்கு அமெரிக்கா முற்பட்டதன் விளைவே அமெரிக்க - சீனப் பேச்சுவார்த்தைக்குக் காரணமெனலாம். ஆனாலும் ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு அக்யூஸ் ஒப்பந்தத்துக்குப் பின்னரான பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துமென மலேசிய ஊடகமான தி ஸ்டார் தெரிவித்துள்ளது. மலேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஹிஷாமுடின் ஹுசைன், ஆசியானில் உள்ள தனது கூட்டாளிகளுடனான சந்திப்பு அடுத்த மாதம் நடத்தப்படுமெனச் சென்ற செவ்வாய்க்கிழமை மலேசிய நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா- சீனாவுக்கு இடையேயான அதிகாரச் சமநிலையைப் பொருட்படுத்தாமல், பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதே இச் சந்திப்பின் நோக்கமெனவும் அவர் கூறியுள்ளார். இந்தோ-பசுபிக் பிராந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஆயுதப் போட்டி மற்றும் மின்சார அபிவிருத்தித் திட்டங்களை இந்தோனேசியா விரும்பவில்லை என்று இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர் ரெட்னோ மர்சுடி கூறியுள்ளார்.

ஆகவே அமெரிக்கா தனித்து முடிவெடுக்கும் வல்லாதிக்க நாடாக இருந்தாலும் கூட, அக்யூஸ் ஒப்பந்தத்தின் பின்னரான அரசியல் நிலைமைகளை ஆராய்ந்தும் அல்லது அந்த ஒப்பந்தத்தைக் கையில் வைத்துக் கொண்டு எச்சரிக்கை விடுவது போன்றதொரு தொனியிலும் சீனாவோடும் மற்றும் ஆசியான் நாடுகள் சமாதானமடையும் முறையிலும் தனது அணுகுமுறைகளில் மாற்றங்களைக் கையாள்கிறது. ஆகவே தனது வெளியுறவுக் கொள்கையில் நெகழ்ச்சித் தன்மையை அமெரிக்கா சமீபகாலமாகக் கையாண்டு வரும்போது, ஏன் இந்தியாவும் இந்தோ- பசுபிக் பாதுகாப்பு மற்றும் பிராந்திய நலன்சார்ந்து இலங்கை தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களைச் செய்ய முடியாது என்ற கேள்விகள் எழுகின்றன.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது அமெரிக்க வெளியுறவுக் கொள்கை அதிரடியாக அவ்வப்போது மாறியது. இஸ்ரேல், ரஷ்யா போன்ற நாடுகளுடன் உறவைப் பேணியது. ஜி- 7 மற்றும் நேட்டோ அணிகளின் கூட்டுறவுகளை மீறியும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை இயங்கியது. ஜோ பைடன் ஜனாதிபதியாகப் பதவியேற்றதில் இருந்து இன்றுவரைகூட அமெரிக்க வெளியுவுக் கொள்கைகள் அவசியம் கருதி இறங்கிச் செல்கின்றன அல்லது மாற்றமடைகின்றன. குறிப்பாக கொவிட்-19 இன் பின்னரான சூழலில் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கான தீர்வு குறித்து, சீனாவின் அணுகுமுறையை அமெரிக்கா ஆராய்ந்ததாக குளோபல் ரைம்ஸ் செய்தித் தளம் கூறுகின்றது. இதனால் வர்த்தக உறவு அதிகரித்தாகவும் கூறப்பட்டுள்ளது. இதனால் சீன-அமெரிக்க வர்த்தக அளவு கடந்த ஆண்டைவிட ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை டொலர் அடிப்படையில் 35.4 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதை சீன சுங்க புள்ளிவிவரங்கள் கடந்த புதன்கிழமை வெளிப்படுத்தின. முதல் எட்டு மாதங்களில் இருந்த 36.6 சதவிகித வளர்ச்சியைவிட இப்போதைய வளர்ச்சி விகிதம் சற்றுக் குறைவாக இருந்தாலும், இருதரப்பு வர்த்தக அளவு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை 543 பில்லியன் டொலரை எட்டியது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் இயல்பு நிலைக்கு திரும்புவதால், 2018 ஆம் ஆண்டு சீனா அமெரிக்க வர்த்தகப் போருக்கு முன் இந்த ஆண்டு இருதரப்பு வர்த்தகம் 700 பில்லியன் டொலரை எட்டும் என்று குளோபல் ரைம்ஸ் கூறுகின்றது.

எனவே இதன் பின்னணியில், சீனாவிடம் இருந்து பெருமளவு கடன்களைக் பெற்றாலும் துறைமுகங்கள், மின்சார அபிவிருத்தித் திட்டங்களை அமெரிக்காவுக்கு வழங்கினாலும், இந்தோ- பசுபிக் பாதுகாப்பில் இலங்கை தம்மோடு நிற்கும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு. அதற்கேற்ப இலங்கையுடனான தனது கொள்கையில் அமெரிக்கா மாற்றங்களைச் செய்திருக்கிறது. அதாவது ஈழத்தமிழர் பிரச்சினையை இலங்கையின் உள்ளக விவகாரமாகவே பார்ப்பது என்ற நம்பிக்கை இலங்கைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா சொல்வதைக் கேட்டு வந்த அமெரிக்கா, தற்போது இலங்கையோடு நேரடியாகவும் இலங்கையின் தேவைக்கு ஏற்றவாறும் செயற்பட்டால், பிராந்தியத்தில் தமது நலன்களைப் பெறலாம் என்பதைப் பட்டறிவாகக் கண்டிருக்கிறது. இதன் விளைவுதான் இலங்கைக்குத் தற்போது ஏற்பட்டுள்ள துணிச்சல்.

இந்த இடத்தில் ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமான இடைவெளி மேலும் மேலும் அதிகரிக்கும். ஆனால் இதற்குத் தீர்வு 13 அல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளாதவரை, இலங்கையின் துணிச்சலும் இந்தியாவைப் புறக்கணித்துச் செயற்படும் தன்மையும் மேலும் கையோங்கும். ■

எஸ். கிருபானந்தகுமாரன்[ MVSc]
கால்நடை மருத்துவர்




# பால் நேற்று... இன்று... நாளை...

இலங்கையில் இறக்குமதியாகும் பால்மாவின் விலை அதிகரித்துள்ளது. 945/= ரூபாவில் இருந்த ஒரு கிலோ பால் மா 1145/= ரூபாவாகவும், 380/= ரூபாவில் இருந்த 400 கிராம் பால்மா 480/= ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. வழமையாக கிராமத்தின் பெட்டிக் கடைகளிலும் இலகுவாக கிடைக்கக் கூடிய பால் மாவை இப்போது பெற முடியாது மக்கள் திண்டாடிக் கொண்டிருகின்றனர். கடந்தஇரண்டு மாதங்களாகவேநாடு முழுவதும் பால் மாவுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. கொரோனாப் பெருந்தொற்றின் தாக்கத்தின் பிடியில் சிக்கியிருக்கும் மக்கள் இதனால் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர். உள்நாட்டில் உள்ள பசுக்களில் இருந்து பெறப்படும் திரவப்பால் கூட கிடைக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. பல இடங்களில் அதிக விலையில் அதாவது 120/= வரையில் திரவப் பால் விற்கப்படுவதோடு, விற்பனை நிலையங்க ளுக்கு வரும் பால் குறித்த சில மணி நேரத்தில் முடிவடைந்தும் விடு கின்றது. மனிதனின் மிக முக்கிய உணவுப் பொருளாக காணப்படும் பால் தொடர் பான பல விடயங்களை இந்தக் கட்டு ரைத் தொடர் ஆராய்கிறது. பாலின் அடிப்படைகள் உலக பாலுற்பத்தியின் போக்குகள், அதன் நுண் அரசியல் இலங்கையின் பாலுற்பத்தித் துறையின் கூறுகள் மற்றும் மக்களின் பால் நுகர்வு தொடர்பான விடயங்களை இந்த தொடரில் உள்ளடக்கியுள் ளேன். கட்டுரையாளனாகிய நான் கால்நடை மருத்துவர் என் பதால் என்னுடைய அனுபவத்தையும் துறை சார்ந்த அறிவை யும் பயன்படுத்தியதோடு இலங்கை மற்றும் தமிழகத்திலுள்ள கால்நடை உற்பத்தித் துறையின் அதிகாரிகளினதும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களினதும், கால்நடைப் பண்ணையாளர்களின் கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளேன். இங்கு பால் என நான் குறிப்பிடுவது மாடு,எருமை, ஆடு போன்ற விலங்குகளில்இருந்து மனிதன் பயன்படுத்தும் பாலாகும்.

## பாலும் மனிதனும்

இயற்கையில் மனிதன் மற்றும் பல விலங்குகள் தமது இளம் பருவங்களுக்கு ஊட்டுவதற்காக பெண் விலங்குகளின் முலைச் சுரப்பியில் இருந்து சுரக்கப்படும் சுரப்பே பால் .இந்தவகைவி லங்குகள் முலையூட்டிகள் / பாலூட்டிகள்[ mammals ]என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏனைய விலங்கு வகைகளைப் போலல்லாது பசு,எருமை,வெள்ளாடு, செம்மறியாடு,ஒட்டகம் ,யாக் போன்ற பல விலங்குகளின் பாலை வர லாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மனி தன் நுகர்கின்றான்.இந்த விலங்குகள் புற் களை பாலாக மாற்றக் கூடிய உணவுக் கால் வாய்த் தொகுதியை உடையவை. பால் பலவித ஊட்டச் சத்துகளை கொண்டமைந்த ஒரு நிறையுணவு. இது உடலின் வினைத்திறனான செயற்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவூட்டவும் தேவையான விற்றமின்கள், புரதம், கொழுப்பு மற்றும் கல்சி யம் போன்ற கனியுப்புகளையும் சிறப்பான விகிதத்தில் கொண் டமைந்துள்ளது. இறைச்சி,முட்டை போன்ற ஏனைய விலங்கு ணவுகளைப் போலன்றி சமய, சமூக வேறுபாடுகளின்றி சகல ராலும் நுகரப்படும் பால் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை சகல வாழ்க்கைப் பருவத்திலும் பயன்படும் ஓர் அற்புத உண வாக விளங்குகிறது. பாலைப் பொறுத்த வரை நேரடியாக திரவப் பாலாகவும் உருமாற்றம் செய்யப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களாகவும் மனிதனால் பயன்படுத்தப்படுகிறது. பால் ஒரு உயிர்த்திரவம் என்பதால் கறந்த பாலை நீண்ட நேரத்துக்கு வைத்திருக்க முடியாது. நேரம் செல்லச் செல்ல நோய்க் கிருமி களின் அளவு அதில் அதிகரிக்கும். எனவே நீண்ட காலம் பாலை வைத்திருக்க பல நுட்பமான முறைகளை கையாள வேண்டும்.




## பாற்பொருள்களின் உருவாக்கம் மற்றும் வியாபாரம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கட்டாக்காலிகளாக காடுகளில் திரிந்த விலங்குகளை பழக்கப்படுத்திய மனிதன் அவற்றிலி ருந்து பாலையும் , பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய், போன்றபல உணவுகளையும் உருவாக்கி உண்ணத் தொடங் கியிருந்தான். தொழில்நுட்பம் மேம்படத் தொடங்க குறிப்பாக குளிர்ப்பதன வசதிகள் உருவாக நீண்ட காலம் வைத்திருக்கத் தக்க பாற்பொருட்கள் உருவாகப்பட்டன. பால் அதிகமாக கிடைக் கும் பருவத்தில் பால் மா போன்ற பல பொருள்கள் அதிகளவு உற்பத்தி செய்யப்பட்டு பால் கிடைக்காத பருவத்தில் பயன்படுத் தப்பட்டன. சர்வதேசப் போக்குவரத்து வசதிகள் மேம்பட அவை உலகில் பல நாடுகளுக்கும் விற்பனை செய்யப்பட்டன. முன்பு அருகருகே இருந்த வீடுகளுக்கு மட்டும் மிதமிஞ்சிய பால் விற் பனை செய்யப்பட்ட நிலை மாறி உலகில் ஒரு மூலையில் உற் பத்தியாகும் பால் பொருள்கள் மில்லியன் கணக்கில் இன்னொரு மூலைக்கு விற்பனையாகும் ஒரு மிகப் பெரிய வணிகமாக பால் வணிகம் மாறியுள்ளது. இன்னும் விளக்கமாக சொன்னால் ஆரம்ப காலத்தில் தமது வீடுகளில் வளர்க்கப் படும் ஓரிரண்டு மாடுகளை விவசாயத்தில் பயன்படுத்தி வைக்கோல் போன்ற விவசாயக் கழிவுகளையும், அங்கு வளரும் புற்களையும் ,மனி தன் பயன்படுத்தும் உணவுக் கழிவுகளையும் உணவாக வழங்கி அவற்றின் மூலம் கிடைக்கும் பாலை நுகரும் காலம் மாறிவிட் டது. மில்லியன் கணக்கான பணத்தைச் செலவிட்டு அதிக பால் தரக் கூடிய கால்நடை இனங்களை உருவாக்கி, சகல வசதிகளும் கொண்ட பிரமாண்டமானதொழிற்சாலைப் பண்ணைகளை அமைத்து ,பல ஆயிரம் ஏக்கரில் செய்யப்படும் தீவனப் பயிர்க ளையும் பெருமளவு வர்த்தக விலங்குணவுகளையும் உணவாக வழங்கி மேற்கொள்ளப்படும் மிகப் பெரும் வணிகமாக பால் சார்ந்த பொருள்களின் வணிகம் மேம்பட்டுள்ளது. பல ஆயிரக் கணக்கான நேரடி, மறைமுக தொழில்களை தனி நபர்களுக் கும், நிறுவனங்களுக்கும் , நாடுகளுக்கும் ஏற்படுத்தியுள்ள பெறுமதியான வணிகமாகவும் இது மாறிவிட்டது. பலநாடுகள் கால்நடைகள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் பால்வரு மானத்தை நம்பியே இருகின்றன.

பால் நுகர்வின் அவசியம் மற்றும் ஊட்டச் சத்து தொடர்பான விடயங்களை அரச, தனியார்சுகாதார அமைப்புக்களும் பால் வணிக நிறுவனங்களும் மக்களுக்குத் தொடர்ச்சியாக நேரடியா கவும் ஊடகங்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்துவதன் காரண மாக ஆரம்ப காலத்தில் உலக மக்கள் எல்லாராலும் நுகரப்படாமல் இருந்த பால் இன்று அதிகளவாக பயன்படுத்தப் படுகிறது. தொடர்ச்சியாக ஏற்படும் சனத்தொகை அதிகரிப்பின் காரண மாக தேவைப்படும் பாலும் அதிக ரித்துள்ளது. அத்துடன் மிகச் சிறந்த பால் உற்பத்தி, விநியோக, விற்ப னைக் கட்டமைப்புகள் உலகெங்கி லும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் இலகுவாக பால் பொருள்களை பெற் றுக் கொள்ள கூடிய நிலை உள்ளது.

## பால் நுகர்வின்பயன்பாடுகள்

பாலில் 87 % வரை தண்ணீரே உள்ளது. மிகுதியில் புரதம், ஒமேகா- 3(omega-3) போன்ற கொழுப்பமிலங்கள், கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் A,D,B,B12,பொட்டாசியம் செலேனியம் என பலதரப்பட்ட ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன. புரதம் உடல் வளர்ச்சிக்கும்,நொதி யங்களின் உருவாக்கத்துக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்ப டுத்தவும் ,தேய்வடைந்த கலங்களை திருத்தவும் பயன்படுகிறது. பாலிலுள்ள casein மற்றும் whey புரதங்கள் முழுமையானபுர தங்களாகும்[ complete proteins]. அதாவது அவை எல்லா விதமான அமினோ மிலங்களையும் கொண்டமைந்தவை.

பாலிலுள்ள விற்றமின் D, கல்சியம் பொஸ்பரஸ் என்பன எலும்பு வளர்ச்சிக்கும் தசைத் தொழிற்பாட்டுக்கும் அவசியமானவை . வயதானவர்களில் ஏற்படும் osteoporosis போன்ற நோய்களை தடுக்க குணமாக்க அதற்குரிய சரியான விகிதத்தில் கல்சி யம்,பொஸ்பரஸ்மற்றும் விற்றமின் D நிறைந்த பால்க் கலவை கள் சந்தையிலுள்ளன.மேலும் குழந்தைகளுக்குரிய பால் ,பால் சேர்வைகள், மாற்றுப்பெறுமதிசேர் பால் பொருள்கள் என பல வகைவகையாக வயதுப் பிரிவுக்கு ஏற்ப சந்தையில் கிடைக் கின்றன.உலகிலுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு களைத் தீர்ப்பதில் இந்தப் பால் பொருட்கள் முக்கிய இடத்தை பிடிக்கின் றன.பல்வேறு நோய்களையுடையவர்களுக்கு பிரத்தி யேகமாக பயன்படக் கூடிய கொழுப்பு நீக்கிய, கொழுப்பு குறைத்த பால் மா[ skimmed milk/nonfat milk] வகை களும் உள்ளன. உடல் வலுவூட்டும் , உடல்வளர்ச்சி குறைந்தவர்க ளுக்குரிய அதிக ஊட் டச்சத்துள்ள பால் வகையும் [ whey protein powder] சந்தையில் உள்ளது.இறைச்சி,மீன் போன்ற ஏனைய விலங்கு உணவு களை நுகராத மக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் தான் சரியான ஊட்டச் சத்துக்களை வழங்குகின்றன.

## எதிர்ப்பு வாதங்களும் எதிர்மறை விளைவுகளும்

எனினும் தரமற்ற பால் மற்றும் பால் பொருள்களின் நுகர்வு தொடர்பாக பலதரப்பட்ட மருத்துவ நிபுணர்களின் எதிர்மறை யான எச்சரிக்கையும் இல்லாமலில்லை.

விலங்குகளின் பால் அவற்றுக்கே பொருத்தம் மனிதனுக்கு சரிவராது என்ற வாதமும் முன்வைக்கப் படுகிறது. எனினும் பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் விலங்குகளின் பாலை அருந் துகிறான் என்பது குறிப்பிடத்தக்கது.கெட்டுப்போன தரமற்ற பால் பல நோய்களுக்கு காரணமாகிறது. வியாபார ரீதியாக அதிக இலாபத்தைப் பெற பாற் பொருள்களில் சேர்க் கப்படும் பதார்த்தங்கள் சிலவும் மனித சுகாதாரத்தை பாதிக்கக்கூடியன என்பதை மறுக்கவும் முடியாது. சீனாவில் ஏற்பட்ட மெலமைன் (melamine) சம்ப வத்தை உதாரணமாகச் சொல்லலாம். மனிதர்க ளில் கணிசமான அளவினருக்கு lactose intolerance என்ற பால்ஒவ்வாமை நிலையும் ஏற் படுகிறது. அதாவது பாலிலுள்ள லக்டோஸ் (lactose) சமிபாடடைய முடியாத நிலையாகும். இதனால் அவ்வாறானவர்கள் அவர்கள் பாலை அருந்த முடி யாது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

## உலகில் பால் நுகர்வு

உலகத்தில் வளர்ந்த நாடுகளில் தனி நபர் ஒருவர் வருடாந்தம் 200 லீற்றருக்கு அதிகமாக பாலை அருந்துவதோடு, வளர்ந்து வரும் நாடுகள் 40 லீற் றருக்கும் குறைவாகவே பாலை அருந்துகின்றனர். சராசரி மனிதன் வருட மொன்றுக்கு அருந்தக் கூடிய பாலின் அளவாக நாற்பது லீற்றரை சுகாதார அமைப்புகள் நிர்ணயித் துள்ளன. இலங்கையில் பல வருடங்களாக நாற்பதுக்கும் குறைவாகவே சராசரி பால் நுகர்வு காணப்பட்ட போதும், நீண்ட முயற்சியின் பலனாக தற்போது 58 லீற்றர் வரை அதிகரித்துள்ளது.

*[ தகவல்கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வெளியீடு2019]*

ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளில் உள்ள மக்கள் ஏனைய நாடுகளை விட அதிக பாலை நுகர்கின்றனர். அண் மைக் காலமாக ஆசிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளிலும்பாலின் நுகர்வு அதிகரித்துள்ளதை காணமுடிகிறது. "பொதுவாக எமது கீழைத்தேய நாடுகளிலுள்ளவர்கள் பாலைக் குடிக்கின்றனர். மேலைத்தேய நாடுகளில் உள்ளவர்கள் பாலை உண்கின்றனர்" அதுதான் வித்தியாசம்.

இன்றைய உலக வருடாந்த பால் உற்பத்தி 906 மில்லியன் தொன் லீற்றர். .இந்தியாதான் உலகின் முதன்மை உற்பத்தியா ளர்.உலக பாலுற்பத்தியில் 17 சத வீதத்தை இந்தியா கொண்டுள் ளது. அதாவது வருடத்துக்கு 200 மில்லியன்தொன் லீற்றர் பாலை இந்தியா உற்பத்தி செய்கின்றது. 1970 களில் இருந்து இந்திய அரசு டாக்டர். வர்கீஸ் குரியனின் தலைமையில் தொடங் கிய வெண்மைப் புரட்சியின் [ white revolution operation flood] அடிப்படையில் இந்த முதல் நிலையை அடைய முடிந்துள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து அமெரிக்கா, சீனா,பாகிஸ்தான், ஐரோப்பிய நாடுகள் பால் உற்பத்தியில் முன்னணியில் உள் ளன. இந்த நாடுகளும் தமது உற்பத்தியின் பெரும்பாலான வற்றை உள்நாட்டு நுகர்வுக்கே பயன்படுத்துகின்றன. அவுஸ்தி ரேலியா,நியுசிலாந்து பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் மிகை பாலுற்பத்தி நாடுகள். உலக பால் ஏற்றுமதி வர்த்தகத்தை இவை செய்கின்றன.திரவப் பாலாகவும் பால் மாவாகவும் ஏனைய மதிப்பு கூட்டிய பொருள்களாகவும் இவை ஏற்றுமதி செய்கின்றன. உலகின் மொத்த பல் உற்பத்தியில் ஏற்றுமதி பால் 5-8 வீதமாக உள்ளது. நெஸ்ட்லே,பொண்டீரோ போன்ற பலத னியார், கூட்டுறவு அமைப்புகள் ஊடாக பால் விற்பனையாகி றது. சீனாதான் உலகின் பாலுற்பத்திகளை அதிகம் [ 20%] இறக்குமதி செய்கிறது. அதனை தொடர்ந்து ஜெர்மனி,ரஷ்யா , நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் சில அரபு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் பால் பொருள்களை இறக்குமதி செய்கின் றன. இந்த ஏற்றுமதி, இறக்குமதி என்பன ஒருவித சர்வதேச விலைக்கோரல் முறைகளின் ஊடாக இடம்பெறுகின்றன.மேய்ச் சலுக்குரிய இடப்பற்றாக்குறை கால்நடைகளுக்குத் தேவையான் தீவனங்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம், பெற்றோலி யப் பொருள்களின் விலையேற்றம், போக்குவரத்து கட்டண உயர்வு , காலநிலை மாற்றம் என பல காரணிகள் சர்வதேசபால் வளத்துறையையைப் பாதிக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் தனிதனி அரசியல், சமூக, புவியியல் காரணிகள் உள்ளன. அண்மைய கொவிட் பெருந்தொற்றும் பாலுற்ப்த்தி, பால் வணி கம் மற்றும் பால் நுகர்வுச் செயற்பாட்டை தலை கீழாக மாற்றி யுள்ளது.

இலங்கை நியுசிலாந்துஅவுஸ்திரேலியா,போன்ற நாடுகளில் இருந்து பால் மாவை இறக்குமதி செய்கிறது. ஆரம்ப காலங்க ளில் ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் இருந்தும் பாற்பொருள் கள் இறக்குமதி செய்யப்பட்டன. இலங்கையில் பால் தேவையில் 40 வீதம் உள்நாட்டுப் பாலில் இருந்தும் 60 வீதம் வெளிநாடு களில் இருந்து இறக்குமதியாகும் பால் பொருள்களில் இருந்தும் நிறைவு செய்யப்படுகிறது

## அதிகரித்துள்ள சீனர்களின் பால் நுகர்வு

உலக சந்தையில் அண்மைக் காலமாக சீனர்களின் அதிகரித்த பால் நுகர்வு காரணமாக அதிகளவான பாற்பொருள்களை அந்த நாடு இறக்குமதி செய்கிறது. இது ஏனைய நாடுகளுக்கு செல்லும் பாலின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனர்கள் தமது பால் உற்பத்தித்துறையை மிக விரைவாக மேம் படுத்தி வருகின்றனர். இலங்கையும் பால் இறக்குமதியைக் கட் டுப்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு வெளியே செல்லும் பணத்தை தடுக்க பல முயற்சிகளை எடுத்து வருவதைக் காண முடிகிறது. குறித்த காலத்தில் பாலுற்பத்தியில் தன்னிறைவு காண திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பால் நுகர்வு தொடர்பான விடயங்களை தொடர்ந்து வரும் வாரங்க ளில் ஒவ்வொன்றாக விரிவாக ஆராய்வோம்.....




ஏ.ஜே.ஞானேந்திரன்

# கர்ப்பிணியை கண்டுபிடிக்க..!



இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டதுதான். ஆனால் புராதன எகிப்தில் இருந்த மருத்துவ அறிவை அறிய முற்படும்போது, வியப்பே மேலிடுகின்றது...
ஒரு பெண் அம்மாவாகி விட்டாள் என்பதை உறுதிப்படுத்த, புராதன எகிப்திய மருத்துவர்கள், கைக்கொண்ட வழிமுறை இதுதான்..
பார்லி, கோதுமை விதைகளை பரப்பி அதன் மீது இந்தப் பெண்களை சிறுநீர் கழிக்கும்படி பணிப்பார்கள்..செடிகள் புதிதாக முளைத்தால் கர்ப்பம் உறுதிப்படுத்தப்படும். பார்லி வளர்ந்திருந்தால் ஆண் குழந்தையும், கோதுமையென்றால் பெண் குழந்தையும் பிறக்குமாம்.



# விதை ஒன்று போட சுரை வேறு முளைக்குதே!

விதை ஒன்று போட்டால் சுரை வேறு முளைக்குமா ? என்று முன்னோர் கேட்டார்கள். ஆனால் இப்போது அப்படிக் கேட்டால் தயங்காமல் நீங்கள் ஆம் என்று சொல்லிவிடலாம். நீங்கள் சாப்பிடும் அப்பிள் பழத்தின் விதை, அதே இன மரத்தில் காய்த்தது அல்ல. அப்படி வருவதற்கான வாய்ப்புகளும் இல்லை. உதாரணத்திற்கு க்ரானி ஸ்மித் (Granny Smith) என்ற இன அப்பிள் விதையை நட்டிருந்தால், அதிலிருந்து வருவது வேறு ஓர் இன அப்பிள் மரமாகவே இருக்கும். ஆச்சரியமாக இருக்கிறதா? நம்மை ஆச்சரியப்படுத்துவதுதான் இயற்கையின் வேலை.



# சாப்பாட்டு நகரம்?


புதுடில்லி, மும்பை என்ற இரு இந்திய நகரங்களில் உள்ள உணவகங்களின் எண்ணிக்கையை விடவும் , லண்டன் மாநகரிலுள்ள இந்திய உணவகங்களின் தொகை அதிகமாம். லண்டனில் எல்லோருமே சாப்பிடுவதை மட்டும் தான் முழுநேர வேலையாகச் செய்கிறார்களோ என்னவோ.

உலகிலேயே மிக நீண்ட ஆடம்பரக் காரின் நீளம் எவ்வளவு தெரியுமா? சுமார் 100 அடி. அதற்கு 26 சக்கரங்கள். இரு சாரதிகள், அதற்குள் ஒரு நீச்சல் குளம். ஒரு இராட்சதப் படுக்கையறை.. நடமாடும் ஆடம்பர பங்களா. இத்தனையும் அதற்குள் அடக்கம். இங்கே சாதாரண சைக்கிள் வாங்கவே வக்கற்றதாக எங்கள் நிலை மாறுகையில், உலகம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது.

# ஆடம்பரக் கார்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்!



# சொற்சிலம்பம் போட்டி 53




அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................................................
கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நாடில்லாமல் ஒவ்வொரு நாடாக அலைபவன் 4. எச்சிலை உமிழ்/ உளவு 6. (வாழ்க்கை) வரலாறு 8. ரூபாவில் நூறு 10. தாமரை 11. வறுமை 12. அக்கினி 13. ஓர் இராசி 15.சாகச் செய் 16. ஓர் பறவை 17. இல்லம் 18. வயலில் கட்டுவது 20. கடன்வாங்கியவன்

## மேலிருந்து கீழ்

1. ஐந்தாவது திதி 2. நாடு 3. நகு 4. கண்ணைத் திறந்து கொண்டு இதைச் செய்ய முடியாததாம் 5. அரற்றுதல் 7. எரியும் செயற்பாடு 9.சளிவைத்தால் வரும் 12. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவது இதனால் 14. கனம் மிக்கவன் 15. கொடூரமான 16. மிக 17. வீரம் மிகுந்தவன் 18. போக அல்ல 19. காயம்.

### சொற்சிலம்பம் போட்டி 52 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாதுகாப்பு 2. புண் 6. விரைவு 7. தியானி 9. தகர்த்தல் 11. புதல்வி 13. தம் 14. தையல் 17. அதிக 19. சய 20. வரம்பு 21. விரல் 22. திம்பு 23. உடும்பு

**மேலிருந்து கீழ்**

1. பாவிப்பு 2. துரை 3. காவுதல் 4. புதிர் 5. புனிதம் 8. யாத்தல் 10. கவி 12. தந்திரம் 15. யதி 16. இயல்பு 17. அவதி 18. கம்பு 19. சரம் 21. விடு

### சொற்சிலம்பம் போட்டி இல.54

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**22.10.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

### போட்டி இலக்கம் 52இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**கே.எஸ்.சிவஞானராஜா** ,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

**2 ஆம் பரிசு**
**செல்வி இ.கஜானி,**
**மே/பா.ம.இரவிஷங்கர்**
இல.493/26 ஏகாம்பரம் வீதி,
உப்புவெளி, திருகோணமலை.

**3 ஆம் பரிசு**
**அ.சத்தியரூபன்,**
தபாலகம், காங்கேசன்துறை.,

**4 ஆம் பரிசு**
**வி.செல்வராணி,**
காரை வடகிழக்கு,
காரைநகர்.

**5 ஆம் பரிசு**
**திருமதி R.M. தயானந்தன்,**
15 ஆம் கட்டையடி,
உடுப்பிட்டி.

# வடக்கு மாகாண புது ஆளுநர் ஐயாவுக்கு…!



## அவசரமா ஒரு கடுதாசி

*வணக்கம்.*

முதலில இந்த அப்பாவி அன்னமுத்துவின்ர வாழ்த்துக்கள் உங்களுக்கு. எல்லாம் வல்ல கடவுள் உங்களை ஆசிர்வதிப்பராக!. இது மாரி காலம். அடிக்கடி மழை பெய்யும். வெள்ளம் நிக்கும். அங்கை இங்கை போறது வாறது கவனம். அடி சறுக்கப்பாக்கும். கடைசிவரைக்கும் கதிரையை விடமாட்டன் எண்டு சொல்லிக்கொண்டு இருந்த சார்ள்ஸ் அம்மாவை ஒரு மாதிரிக் கிளப்பிப் போட்டியள். ஆனால் அவா சரியான கெட்டிக்காரி. அது மட்டுமில்லை அவசரமாக் கொழும்புக்குப் போக வேண்டி வந்தால் பிளேனிலை போங்கோவன் எண்டு சொன்னால் இது மக்களின்ரை காசு அதைக் கண்டபடி செலவழிக்க மாட்டன் எண்டு சொல்லிக் கொண்டு வவுனியாவாலைதான் போறவவாம். போகேக்கை போறவழியிலை நல்லது கெட்டது எல்லாத்தையும் பாத்துக் கொண்டு போகலாம்தானே எண்டு சொல்லுவவாம். நீங்களும் அப்பிடி மக்கள் பிரச்சினையளை அறிஞ்சு நல்லது கெட்டதுகளை முடிவெடுப்பீங்கள் எண்டு நம்பிறம். போறவாற வழியிலை எல்லாம் நீங்கள் சோலி இல்லாத ஆள் எண்டு சனம் கதைக்கிது. பாப்பம், உங்கட வரவோடையாவது வடக்குக்கு ஒரு விடிவு கிடைக்குதோ எண்டு.



நீங்கள் இஞ்சை வரமுன்னம் வாய்விட்டுச் சொல்லிப்போட்டியள் "பாதுகாப்புமிக்க மாகாணமாக வடக்கை மாற்றுவதே என்ரை விருப்பம்" எண்டு. முன்னம் சண்டை நடந்த காலத்திலை, பெடியள் இருக்கேக்கை இரவு பன்னிரண்டு மணிக்கும் ஒரு குமர்ப்பிள்ளை தனியாப் போகலாம். அவ்வளவு பாதுகாப்பு. ஒண்டும் நடக்காது. அவ்வளவுக்கு வட மாகாணம் அமைதியாத்தான் இருந்தது. எப்ப சண்டை நிண்டுதோ, அண்டைக்கு மூக்கிலை சளி பிடிச்ச மாதிரி எல்லாம் தலைகீழாப் போச்சுது. அடிபிடி, கஞ்சா கடத்தல், தூள் வியாபாரம், வாள் வெட்டு, அறா வட்டிக்குக் கடன் குடுக்கிற கொம்பனியளின்ரை அட்டகாசம் எல்லாம் துவங்கிவிட்டுது.

அண்டு துவங்கினதுதான் இண்டும் ஓயேல்லை. பொலிசைப் போட்டினம், ஆமியைப் போட்டுப் பாத்தினம், விசேட அதிரடிப் படையைக் கொண்டு வந்து மோட்ட சைக்கிள் சவாரிவிட்டுப் பாத்தினம். அவை வந்து படம் காட்டிற கொஞ்ச நாளைக்கு எல்லாம் அடங்கின மாதிரி இருக்கும். பிறகு பாம்பு எழும்பி ஆடுறமாதிரி எழும்பி ஆடத் துவங்கிவிடும். பிறகுதான் சனம் ஓடி முழிச்சுது. அதெல்லாம் அப்புமாற்றை விளையாட்டு. பிள்ளையையும் நுள்ளித் தொட்டிலையும் ஆட்டினம் எண்டு தெரிஞ்சு போச்சுது. அப்ப மெயின் சுவிச் அவையின்ரை கையுக்கை இருக்கேக்கை என்னெண்டு வட மாகாணத்தை பாதுகாப்பாக்கிறது?. எப்பிடி அமைதியான மாகாணமாக மாத்திறது? அப்ப பிழையான ஆக்களிட்டை இருக்கிற அதிகாரத்தைப் பிடுங்க வேணும். இசகு பிசகான விசயங்களுக்கு உடந்தைபோற ஆக்களை நல்ல ஒரு வடிதட்டு வேண்டி வடிகட்ட வேணும். உங்கட முதல் வேலையா அதுதான் இருக்கவேணும்.

ஏதோ பதவி எடுத்த புளுகத்தில எல்லாரும் 'அப்பிடிச் செய்வன். இப்பிடி மாத்துவன்" எண்டு சொல்லிக் கொண்டுதான் வாறவை. ஆனால் பிறகு ஒண்டும் செய்யிறேலை. அப்பிடி நீங்களும் மாறக்கூடாது. எதுக்கும் உங்களுக்கு முன்னம் இருந்த ராகவன் ஐயா, சார்ள்ஸ் அம்மா எண்டு எல்லாரோடையும் உதைப் பற்றி ஒருக்காக் கதைச்சுப் பாருங்கோ. ஆனால் சார்ள்ஸ் அம்மா இப்ப இருக்கிற நிலைமையிலை வடிவாக் கதைப்பவோ தெரியாது. ஏனெண்டால் தன்னை உந்தச் சீற்றாலை கிளப்பிப் போட்டாங்கள் எண்டு அவவுக்குச் சரியான மனவருத்தமாம். புதுசா வாற கவர்னரைப் பற்றி ஏதாவது சொல்லுங்கோ எண்டு கேட்டதுக்கு "தயவு செய்து மற்றவையளைப் பற்றி ஒண்டும் என்னட்டைக் கேளாதையுங்கோ. என்னோடை தேவை இல்லாத கதையளையும் கதைக்காதையுங்கோ" எண்டு கறாராச் சொன்னவவாம். எதுக்கும் கவனம்.

ராகவன் ஐயா நடிப்பாலையும் அதட்டலாலையும் வெருட்டியும் காரியத்தைக் கொண்டு போனவர். அவரும் இந்தா வெட்டுறன், கொத்துறன் எண்டுதான் நிண்டவர். அவராலையும் வட மாகாணத்தைப் பாதுகாப்பா வைச்சிருக்கேலாமல் போச்சு. அதோடை அவரும் ஒண்டையும் திறமாச் செய்யேல்லை. அவர் உந்தக் கதிரையைப் பாவிச்சு பார்லிமெண்டுக்குப் போனதுதான் மிச்சம். சார்ள்ஸ் அம்மா ஊமைத்துரை போலை இருந்தே ஒரு மாதிரிக் காலத்தை ஓட்டிப் போட்டா. அவவாலையும் ஒண்டும் பண்ணேலாமல் போச்சுது. அவை மாதிரி இல்லாமல் இறங்கி வேலை செய்தால் தான் உங்களுக்கு எண்டு இருக்கிற பேரைக் காப்பாத்தலாம்.

"அரச அதிகாரிகளை பொது மக்கள் வந்து சந்திக்கிறதுக்கு அங்கால அதிகாரிகள் மக்களைச் சென்று சந்திச்சு அவையின்ர பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தும் விதத்தில் நானே மக்களை நேரடியாகச் சென்று மக்களைச் சந்திக்க உள்ளேன் "எண்டு சொல்லி இருக்கிறியள். அது திறமான வேலை. ஆரோ ஒருத்தர் நல்ல புத்தி சொல்லித் தந்திருக்கிறார் எண்டு நினைக்கிறன். அவரைக் கையுக்கை வைச்சுக் கொள்ளுங்கோ. அவரிட்டைப் புத்திமதியைக் கேளுங்கோ.

ஏனெண்டால் மக்கள் வந்து உங்களைச் சந்திக்கிறதெண்ட விசயத்திலை பல பிரச்சினையள் இருக்கு. உங்களைச் சுத்தி நாகம்; கொம்பேறிமூக்கன், தேள், கொடுக்கன் எண்டு பலவிதமான விசப் பிராணியள் இருக்கு. அதுகள் நல்லது செய்ய விடாதுகள். தங்களுக்குச் சாதகமாத்தான் காய் நகர்த்துவினம். பல சந்தர்ப்பங்களிலே பிழையாக் கூடப் படங்களைக் காட்டுவினம். சனத்திட்டை உங்களைச் சரி இல்லாத ஆள் எண்டு காட்டி உங்களுக்கு ஒரு பிழைகாரன் எண்டு பட்டத்தை வேண்டித் தந்திடுவினம். ஆனபடியாலை சனத்தை நேரடியாச் சந்திக்கிறதெண்ட விசயம் நல்லது. ஆனால் அதை எப்பிடி நடைமுறைப்படுத்தப் போறியள்? அதுக்கு நல்ல பொறிமுறை ஒண்டை உருவாக்க வேணும். அது தான் இப்ப தேவை. செய்வியள் தானே?

இப்படிக்கு
நன்றி அப்பாவி அன்னமுத்து.

# ஒரு தேசம்.. ஒரு சட்டம்



# ஒரேயொரு வாக்கு!

○ மயூ

தேர்தல் என்றாலே சுவாரசியங்களுக்கு குறைவிருக்காது. தேர்தல் அறிவிக்கப்பட்டு பரப்புரைகள் ஆரம்பித்தது முதல், தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் இந்த சுவாரசியங்கள் தொடரும்.

அது மட்டுமல்லாது வாக்குகளைப் பொறுக்கும், காரியமாவதற்காக "குரங்கு வித்தை" காட்டுவதற்கும் தயாராக இருப்பார்கள் அரசியல்வாதிகள். வீதி கூட்டுவதில் இருந்து, வயலில் இறங்கி உழுவதுவரையில் தங்களுக்குத் தெரிந்த மொத்த வித்தைகளையும் இறக்குவார்கள். அதையெல்லாம் பார்த்து மக்கள் சொக்கிப்போய் தங்களுக்கு வாக்கிடுவார்கள் என்பது அரசியல்வாதிகளின் எண்ணம்.

ஆனாலும் மக்களும் அந்தளவுக்கு முட்டாள்கள் இல்லைத்தானே. எல்லாவற்றையும் சிவனே என்று பார்த்து சகித்துக் கொண்டிருந்து விட்டு, தேர்தல் அன்று ஊமைக் குத்தாகக் குத்திவிடுவார்கள்.

தமிழகத்தில் அண்மைய நாள்களாக "ட்ரெண்டிங்" ஆக உள்ள ஒரு விடயம்தான் "ஒற்றை ஓட்டு பா.ஜ.க.". சமூக வலைத்தளங்களில் முதலிடத்தில் இருக்கின்றது இந்த "ஒற்றை ஓட்டு பா.ஜ.க.". என்ன என்று புரியவில்லையா?. மக்களிடம் "ஊமைக் குத்து" வாங்கிய அரசியல்வாதி ஒருவரின் கதைதான் இந்த "ஒற்றை ஓட்டு பா.ஜ.க.". தமிழ்நாட்டின் கோவை மாவட்ட ஊரக உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. பெரும்பாலான இடங்கள் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம் வசம் சென்றிருக்கின்றது. அங்குள்ள பெரியநாயக்கன்பாளையம், குருடம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட 9 ஆவது தொகுதிக்கு இடைத் தேர்தலும் நடந்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அருள்ராஜ் என்பவரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வைத்தியலிங்கமும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் ரவிக்குமாரும் போட்டியிட்டனர். இந்த மும்முனைப் போட்டி போதாதென்று வலிய வந்து சுயேச்சையாகக் களத்தில் குதித்தார் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த கார்த்திக் அவர்தான் இந்த ஒற்றை வாக்குச் சாதனைக்குச் சொந்தக்காரர்.


தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் கார்த்திக்கும் தீவிர பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டார். அவரைச் சுற்றி ஒரு கூட்டம் கொடிகளைப் பிடிக்க "ஜாம் ஜாம்" என்று தேர்தல் பரப்புரைகள் நடந்தன. பரப்புரைகளின் தீவிரத்தையும், கார்த்திக்கைச் சுற்றியிருந்த கூட்டத்தையும் பார்த்தவர்கள் "அவனுக்கென்னப்பா, சீட் கென்போர்ம்" என்று பேசிக் கொள்ளுமளவுக்கு இருந்தது.

அந்தத் தொகுதியில் ஆயிரத்து 551 வாக்குகள். தேர்தல் நாளும் வந்தது. அங்கு 913 வாக்குகள் பதிவாகின. வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பித்தன. அந்தத் தொகுதியில் போட்டியிட்டவர்களின் வாக்கு எண்ணிக்கை ஏறியும், இறங்கியும் நடமாடிக்கொண்டிருக்க, கார்த்திக்கின் வாக்கு எண்ணிக்கை மட்டும் ஓரிடத்திலேயே அசையாமல் "குந்தி" விட்டது. கார்த்திக்கும் கால் கடுக்கக் காத்திருந்தார், ஆனாலும் வாக்கு எண்ணிக்கை நகரவேயில்லை. இறுதியில் வாக்காளர்கள் பெற்ற வாக்கு எண்ணிக்கைகள் அறிவிக்கப்பட்டன. கார்த்திக் ஒரே ஒரு வாக்கை மட்டும் பெற்றிருந்தார். அவருக்கு அவரே போட்டுக்கொண்ட வாக்குத்தான் அது. அந்த நிமிடத்தில் இருந்து "ட்ரெண்டிங்" ஆகத் தொடங்கியது "ஒற்றை ஓட்டு பா.ஜ.க.".

தன் சகாக்களைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு அரசியலில் குதித்த வடிவேலுவின் நிலைமையாகிவிட்டது கார்த்திக்கின் நிலை. அவருடன் கூடச் சேர்ந்து கோசம் போட்டு, பிரியாணி சாப்பிட்டவர்களில் ஒருவர் கூட அவருக்கு வாக்கிடவில்லை என்பதுதான் மிகப்பெரிய பரிதாபம். சொந்தக் குடும்பத்தினரே வாக்கிடவில்லை என்று கிண்டலடிக்கின்றனர் ஏனைய கட்சியினர். தன் குடும்பத்தினர் தனக்கு வாக்கிடாமைக்குக் காரணம், அவர்களின் வாக்குகள் வேறு ஒரு தொகுதியில் இருக்கின்றன. அதனால் எனக்கு அவர்கள் வாக்கிடவில்லை என்று பரிதாபமாகக் கூறியிருக்கிறார் கார்த்திக்.

கார்த்திக் களமிறங்கிய பாரதிய ஜனதாக் கட்சிக்கு தமிழகத்தில் பெரும் எதிர்ப்பு இருப்பதால், அவரை சமூக வலைத்தளங்களில் "ட்ரெண்டிங்" ஆக்கி விட்டனர் நெட்டிசன்கள். அதேநேரம், வேறு சில தொகுதிகளில் ஒரு வாக்குக் கூடப் பெறாதவர்கள் இருக்கின்றனர் என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. அவர்கள் போட்டியிட்ட தொகுதியில் அவர்களுக்கு வாக்கு இல்லையாம். இவையெல்லாம் கார்த்திக்கின் "ஆதரவாளர்களுக்கு" சற்று ஆறுதலான விசயம்தான்.

கூடவே 10 ஆள்களை வைத்துக் கொண்டு, வாகனங்களில் சுற்றித் திரிந்தும், வயலுக்குள் இறங்கி மாடு கட்டி உழுது, அடுப்பில் எரித்தும் கருகாத மாவிலை கட்டிய பானையோடு பொங்கலிட்டும் மக்களைத் தங்கள் பக்கம் திருப்பிக் கொண்டுவிட முடியும் என்று அரசியல்வாதிகள் நினைத்தால், அதன் முடிவு இப்படித்தான் இருக்கும். மக்களை முட்டாளாக்க என்ன செய்யலாம் என்று விட்டத்தைப் பார்த்து யோசிப்பதை விடுத்து, மக்களுக்கு என்ன நல்லது செய்யலாம் என்று யோசித்தால் மட்டுமே மக்கள் கொண்டாடுவார்கள். இந்திய அரசியல் படுமோசம் என்று நாம் கிண்டலடித்துக் கொண்டிருக்க, இப்போது அப்படியான அரசியலையே இங்குள்ளவர்கள் கையிலெடுக்கின்றனர். அடிமட்டமான இந்த அரசியல் போக்கைக் கைவிட்டு வாக்கிட்ட மக்களுக்கு உண்மையாக இருந்தால், என்ன செய்யலாம் என்று விட்டத்தைப் பார்த்து யோசிக்க வேண்டியிருக்காது. மக்கள் தாமாகவே கொண்டாடுவார்கள். ■



# மௌன மொழி

## 52 இற்கான கவிதைகள்

நண்பனே, அணிந்து கொள் முகமூடியை
காலை முதல் மாலை வரை மட்டும் அல்ல
பிறப்பு முதல் இறப்பு வரைஅது
பிணியில் இருந்து மட்டும் அல்ல பல
மனிதர் தரும் வலியில் இருந்தும்
உன்னைக் காக்கும்

**சி.சிவநயனி**
கோப்பாய்.

தன்னலம் கருதா நட்பினில் கூட
களங்கம் காணும் காலம் தன்னில்,
பெரியோரிடையே அணைந்து போகும்
நட்பெனும் தீபத்தை
இளையவர் ஊடாக உலகினில் ஏற்றி,
உயிர்காக்கும் உன்னத தோழனின்
நட்பை வெளிக்கொணரவோ
கொரோனா நீயும்
இவ்வுலகினில் தோன்றினாய்?

**ஜெ. அபர்ணா** ,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

சீராய் அணியாவிடின்
சீரழிவு வந்திடும் என எண்ணி
தன் தம்பி தனை
தற்காத்திட எண்ணி
காத்திடும் முக்ககவசத்தை
கவனமுடன் கட்டிவிடும்
அண்ணன்.

**தி.கோதீஷன்**

கொரோனா என்னும் பெருந்தொற்றால்
சிக்கித் தவிர்க்கிறோம் சிறார்கள் நாம்
சிறகடித்துப் பறக்கும் பட்டாம்பூச்சிகள் நாம்
சிறைக் கைதிகள் ஆகிவிட்டோம் இன்று
பசுமையான பள்ளிக் காலம் பறந்துவிட்டதேனோ
நட்பு என்னும் சங்கிலி அறுந்து விட்டதேனோ
முகக்கவசம் என்னும் முகமூடியை
அணிந்து விட்டோம் நிரந்தரமாய்.

**ஞா.கிரிஷி**
நல்லூர்

சீனத்துச் சீதனமாம் கொவிட் வைரஸ்
சீரழித்து விட்டது எம் மனித வாழ்வை
அரசன் முதல் ஆண்டி என்ற பேதமின்றி
அனைவரது வாழ்வினையும் பறித்துச் சென்றான்

மருத்துவமும் தத்துவமும் தோல்விகாண
ஊசி தனைத் தெய்வமாக வேண்டி நிற்கின்றோம்
புது வழியும் இயலாது கைவிரிக்க தம்பி
முகக்கவசம் அணிவது தான் நம் மாற்றுவழி

த.பாலசுப்பிரமணியம், உடுவில்

பள்ளிக்குச் செல்கையிலே
ஏடும் முதுகோலும்
எடுக்க மறந்தாலும்
முகக்கவசமிதை முக்கியமாய்
மறக்கவில்லை
அவசரத்தில் அவிழ்ந்த தம்பியின்
முகக்கவசமதை சீர்திருத்தும்
அருமை அண்ணனிவன்

**வி.பி. சிவேஸ்**

புத்தகங்களை சுமந்து
பாரமாகி விட்டதால்
முகக்கவசத்தைச் சுமக்க
மனம் வந்து விட்டதோ?

மனது பறிபோகும்
மழலைச் சிரிப்பை
மறைத்துத் தான்
உயிரைக் காக்க
வேண்டும்
என் உற்ற நண்பனே

**க.சிந்துரியா**
வாகையடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

கண் மட்டும் காட்டும் கவசம் மூடி
பயத்துடன் கழிகிறது எங்களின் நொடி
பாதுகாப்பை மட்டுமே நிற்கிறோம் தேடி
மறைந்தோரை எண்ணி தினமும் வாடி

மாணவர் நாமோ மலர்ந்திடா பசுங்கொடி
மற்றவர் திருந்திட நாம் நிற்போம் வழிகாட்டி
எத்தனை நாள் தான் ஒளிவது ஓடி
உலகை காப்பதே எங்கள் உயிர் நாடி

**அபிராமி கிருபாகரன்**

**பரிசு பெறும் கவிதை**

**முகமூடி அணிந்தோம்**
**முகத்தின் அழகினை மறைத்தோம்**
**புன்னகை செய்த**
**காலம் போய்விட்டது**
**கண்சிமிட்டும் காலம் மாறிவிட்டது**
**முகமூடி இல்லாதவன் சிறந்தவன்**
**என்றார் அன்று**
**முகமூடி இருந்தால் தான் நீ**
**சிறந்தவன் இன்று**

**க.இந்துஜா**
நாகர்கோவில்

வான் தொடும் கல்வியை வழங்கும்
நிலம் தொட்ட பாடசாலையிலே
மனதில் மாயை இன்றி சுதந்திரமாய் பறக்கும்
இரு வெள்ளைப் புறாக்களில்
கல்வி சிசுவை தோளில் கருப்பையிலே சுமந்து
தொப்புள் கொடி உறவற்ற தன் நண்பனுக்கு
கொடிய நோய் வராது காக்க பொய் முகமூடி அகற்றி
மெய்யான முகக்கவசம் அணிவிக்கின்றான்.

கம்சி

கடிவாளம் போட்ட குதிரை போல
காதுமடல் வலித்தாலும் மாட்டிக்கனும்
காத்துல இருக்குற தூசியெல்லாம்
நாசிக்குள்ள போகாம பாத்துக்கனும்
மூச்சு விடாம பேசிய காலம் போய்
பேசும் போதே மூச்சடைக்கும் காலம் இது
முத்துப்பற்களைக் காட்டி சிரித்த காலம் போய்
முகமூடிக்குள்ளே சிரித்து வாழுகின்றோம்

**பெ.கமலதாசன்,** நாகர்கோவில்

**பல நாள் கழித்து நீயும்**
**பள்ளிசெல்லும்வேளையில்**
**நின்று நீயும் நிதானமாய்**
**நினைவில் கொள் சகோதரனே**
**கொடிய அந்தக் கொரோனாவை**
**தடுக்கும் இந்த முகக்கவசம்**
**குந்தி புத்திரன் கர்ணனைப் போல்**
**இந்தக் கவசத்தை நீ கைவிடாதே**

குணாயினி

ஊழியின் ஆரம்பம் உலகை ஆட்டிடும்
கொரோனாத் தொற்றின் கொடுமையில் மீள
சுத்தம் பேணி சுகாதாரத்துடன்
முகக்கவசம் அணிந்து பிணியின் வீரியம்
சிதைந்து விடுபட்ட பாடசாலை
வாழ்க்கையைத் தொடங்குவோம்
புறப்படு தோழா?
இளமைக் கல்வியை இழந்து விடாது
கவனமாகப் படித்து கல்வியில் சிறப்போம்.

**மங்களம் மனோரஞ்சன்,**
69வட்டை விதானை வீதி,
கல்முனை 02

முகமூடி தரிக்காத சிரிப்புகள் அன்று
முகக்கவசம் தரித்து நடப்பதே நன்று
மாசாகி போனதுவோ தென்றல் காற்று
கொடியவன் கொரோனா வந்தான் நேற்று
கூடவே இருந்தவர் உயிரும் போயிற்று
சிறார் எம் ஆசைகள் கனவுகள் ஆயிற்று
போக வேண்டும் கொரோனா எம்மிடம் தோற்று
முகக்கவசம் அணிவதை என்றும் நீ பின்பற்று

**ஆரணி கிருபாகரன்**
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை


தொற்றிய கொரோனாவால்
தூக்கம் கெட்டுப் போனதுவே
பல மாதம் களித்து
பள்ளி தனை திறக்கையிலே
பள்ளி செல்லும் ஆர்வத்தினால்
பறந்தடித்து செல்கையிலே
அவிழ்ந்த மாஸ்க் தனை
அழகாக அணிந்து விடும்
அன்புத் தோழனிவன்

**சி.மதீஷன்,** தரம்10,
வித்தியானந்தாக் கல்லூரி

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/

**கவிதைக்கு பரிசு 1000/=**

**53**




பூமி எங்கும் அழுகுரலே
பூதம் போல வந்தாயே
மனிதர் வாழ்வை சிதைத்தாயே
மரணகோசம் தந்தாயே
வருத்தம் வேண்டாம்
மழலையரே
கொடிய நோயைப் போக்கிடவே
வழிதேடிட வாருங்களே

கா .கனிவிழி, தரம்7
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்,

உன்னைப் போல்
அயலவனை
நேசிக்கக் கற்றுக்கொள்
பரவிடும் நோய்க்கு
கவசங்கள்
அணிய பழகிக்கொள்
மூடிய பாடப்புத்தகங்களை
மீண்டும்
படிக்க அறிவு கொள்
நாட்டை தூய்மை செய்து
நல்ல சூழல்
அமைத்துக் கொள்

**சிவரம்யா**

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**22.10.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

ஆர்.பிரகாஷ்




# சென்னைக்கு விசில்போடு!!

முதியோர் இல்லம், அப்பாக்களின் அணி, 'டடிஸ் ஆர்மி' என்று எத்தனையோ விமர்சனங்கள். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மீது கடந்த நான்கு ஆண்டுகளாக முன்வைக்கப்படும் இந்த விமர்சனங்கள் கடந்த வருடம் 'ப்ளே ஓவ்' சுற்றுக்குத் தகுதிபெறாமல் முதலாவது அணியாக சென்னை வெளியேறியதை அடுத்து உச்சம் பெற்றன. ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தொடர் நடப்பதால் சென்னை சுப்பர் கிங்ஸ் 'பிளேஓவ்' செல்வதற்குச் சிரமப்படலாம், அவ்வாறு 'பிளேஓவ்' சென்றாலும் இறுதியாட்டம் வரை சென்று கிண்ணத்தைக் கைப்பற்றாது என்றும் தெரிவிக்கப்பட்டது. சோகம் யாதெனில் சாதாரண ரசிகர்களை விட உச்சபட்ட கிரிக்கெட் அறிவுள்ள விமர்சகர்களும் இந்த விமர்சனத்தை முன்வைக்கத் தவறவில்லை.

ஆனால், அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைத்து கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ். கடந்த வருடம் பிளேஓவ் கூடச்செல்லாமல் வெளியேறிய அதேஇடத்தில் இந்த வருடம் கிண்ணத்தை தனதாக்கியுள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ்.

## சென்னை சுப்பர் கிங்ஸ் பலமானதொரு அணியா?

கிண்ணத்தைத் தனதாக்கியதால், இந்த ஐ.பி.எல். தொடரில் களமிறங்கிய அணிகளிலேயே பலமான அணியென்றால் அது சென்னைதானா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். கொல்கத்தாவிடம் இருப்பது நரைன், வருண் போன்ற சுழல்பந்து வீச்சுக் கூட்டணி சென்னைக்கு இல்லை. ஆர்.சி.பியிடம் இருப்பது போன்ற வில்லியர்ஸ், மக்ஸ்வெல், கோலி போன்ற பெரும் ரி-20 துடுப்பாட்டப் புள்ளிகள் சென்னையிடம் இல்லை. மும்பையிடம் இருப்பதுபோன்று பாண்டியா, இஷான் கிஷான், சூரியகுமார் என ரி-20 ஆட்டங்களுக்கு என்று அடையாளப்படுத்தப்பட்ட புள்ளிகள் சென்னையிடம் இல்லை. ஒப்பிட்டளவில் இந்தத் தொடரில் களமிறங்கிய அணிகளில் நான்காவது பலமான அணியாகத்தான் சென்னை இருந்தது. ஆனால், அந்த அணியிடம் வேறெந்த அணியிலும் இல்லாத கூட்டு முயற்சி இருந்தது. நம்பிக்கை இருந்தது. பிணைப்பு இருந்தது. இவை மூன்றும் இணைந்துதான் இன்று கிண்ணத்தை தனதாக்கியுள்ளது சென்னை. இன்னும் சுருக்கமாகச் சொல்லவேண்டுமாயின் இமாலயப் பலம்பொருந்திய கோலியாத்தை தாவீது வீழ்த்தியதைப் போன்று காரியத்தை கனகச்சிதமாக நிறைவேற்றியுள்ளது சென்னை சுப்பர் கிங்ஸ்.




## பிராவோ எனும் நம்பிக்கை

சென்னைக்கு மத்திய வரிசையில் எவ்வாறு ஜடேஜா அசைக்க முடியாத நம்பிக்கையோ, அதுபோல பிராவோ இறுதிக்கட்டப் பந்துப் பரிமாற்றங்களை வீசுவதில் வல்லவர். 'டெத் ஓவர்களின்' நம்பிக்கை. டோனியின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான வீரரான பிராவோ இம்முறையும் தன் மீது அணி வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றியுள்ளார். தனது தேவை அணிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்தியுள்ளார். ஆக, இது ஒரு கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

கொண்டாடப்பட வேண்டிய வெற்றி. அதிலும், சர்வதேசத்தில் இருந்து ஓய்வுபெற்ற வீரர்களையும், சர்வதேசத்தில் அறிமுகமாகாத வீரர்களையும், குறை அனுபவம் கொண்ட வீரர்களையும் வைத்துக்கொண்டு இதைச் சாதிப்பதென்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டியதுதானே. அப்பாக்களின் அணியென்றால் என்ன? அனுபவத்துக்கு அங்குதானே அதிகம்.

## பலமான ஆரம்ப இணை

ஐ.பி.எல். வரலாற்றில் இதுவரை அடையாளப் படுத்தப்பட்ட மிகப்பலமான ஆரம்ப இணைகளில் ஒன்றாக இந்த முறை சென்னைக்காகக் களமிறங்கிய ஹெய்க்வாட், டுபிளஸி இணை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரருக்கு வழங்கப்படும் ஓரேஞ் வர்ணத் தொப்பிக்கு இவர்கள் இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. 635 ஓட்டங்களுடன் ஹெய்க்வாட் அந்தத் தொப்பியை வென்றிருந்தாலும், அவருக்கு அடுத்த இடத்தில் 633 ஓட்டங்களுடன் டுபிளஸி இருக்கின்றார். சென்னை சுப்பர் கிங்ஸ் இந்தத் தொடரில் குவிந்த ஓட்டங்களில் கிட்டத்தட்ட 40 வீதமான ஓட்டங்கள் ஆரம்ப இணையே குவித்துத் தள்ளியுள்ளது. இதற்கு முன்னர் வெவ்வேறு அணிகளின் இரு வீரர்கள் இந்தத் தொப்பிக்கான போட்டியில் இருந்தாலும் ஒரே அணியின் ஆரம்ப வீரர்களுக்கு இடையில் இவ்வாறான நெருக்கமான போட்டி இருப்பது இதுதான் முதல்முறை. சென்னை சுப்பர் கிங்ஸ் இந்தத் தொடர் முழுவதும் மூன்றாவது இடத்துக்கு ஒரு வீரரை அடையாளப்படுத்துவதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டது. ரெய்னா, மொயின் அலி என்று இருவரையும் மாறிமாறிப் பரிசீலித்த போதிலும் தோல்விதான் இந்தப் பரிசீலனைகளின் முடிவில் எஞ்சியது. இந்தத் தடுமாற்றத்தை சமன்செய்தது என்னமோ ஆரம்ப இணைதான். ஆரம்ப இணை ஆட்டத்தின் பவர் பிளேக்குள் ஆட்டமிழந்த போதெல்லாம் சென்னை தோல்வியைச் சந்தித்தமை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

## தூணாக ஜடேஜா

ஒவ்வொரு தொடரிலும் சென்னையின் தூணாகச் செயற்படும் ஜடேஜா, இந்தத் தொடரிலும் தன் பங்களிப்பை கனகச்சிதமாகவே வழங்கியுள்ளார். மிகச் சிறந்த சகலதுறை வீரராக ஜடேஜா செயற்பட்டுள்ளார். துடுப்பாட்டத்தில் மத்திய வரிசையில் களமிறங்கி 227 ஓட்டங்களை 75 என்ற சராசரியில் குறித்துள்ளார். பந்துவீச்சில் 13 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். களத்தடுப்பில் ஜடேஜாவை விடச் சிறப்பாகச் செயற்பட்ட வீரர் இந்தத் தொடரில் இல்லை என்று அறுதியாகக் குறிப்பிட முடியும். சுமார் 15 பிடியெடுப்புக்களை ஜடேஜா நிகழ்த்தியுள்ளார். அத்துடன் ஏராளமான பவுண்டரிகளை தடுத்து நிறுத்தியுள்ளார்.

எந்தவொரு அணிக்கும் கிடைக்காத பொக்கிஷமான ஜடேஜா தன் பெறுதியை மீண்டும் உயர்த்தி உணர்த்தியுள்ளார்.

## சர்துல் தாக்கூர் என்னும் ஜாலம்

எப்போதெல்லாம் துடுப்பாட்ட வீரர்கள் களத்தில் நிலைக்கின்றனரோ அப்போதெல்லாம் இலக்குகளைச் சரித்துக்கொடுக்கும் பந்துவீச்சாளராக தாக்கூர் செயற்பட்டுள்ளார். நேற்றுமுன்தின இறுதியாட்டத்தில்கூட ஒரே பந்துப் பரிமாற்றத்தில இரு வீரர்களை அடுத்தடுத்து வெளியேற்றியமைதான் ஆட்டத்தின் திருப்பு முனைகளில் ஒன்றாக அமைந்தது. அத்துடன் தாக்கூர் வீழ்த்திய இலக்குகள் அனைத்தும் முக்கிய வீரர்களின் இலக்குகள்.





### ஹர்சல் பட்டேல்

நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் அதிக இலக்கு களைக் கைப்பற்றிய வீரருக்குக் கொடுக்கப்படும் தொப் பியை ஆர்.சி.பி. அணியின் ஹர்சல் பட்டேல் பெற்றுள்ளார். 32 இலக்குகளை அவர் கைப்பற்றியுள்ளார். அதேநேரம் ஒரு சீசனில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய பிராவோவின் சாதனையை சமன்செய்துள்ள ஹர்சல் பட்டேல், ஒரு பருவகாலத்தில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய சர்வதேச ஆட்டத்தில் அறிமுகமாகாத வீரர் என்னும் பெயரையும் பெற்றுள்ளார்.

### ஹெய்க்வாட்

14ஆவது ஐ.பி.எல். தொடரில் ஆரெஞ் தொப்பியைத் தனதாக்கியுள்ளார் சென்னை சுப்பர் கிங்ஸின் ஆரம்ப வீரரான ஹெய்க்வாட். 635 ஓட்டங்களை ஹெய்க்வாட் குவித்துள்ளார். 45 என்ற சராசரியில் 136க்கும் அதிகமான ஸ்ரைக்ரேட்டில் இந்த ஓட்டங்களை அவர் குவித்துள்ளார். ஆனால் 16 ஆட்டங்களில் ஹெய்க்வாட் பெற்ற ஓட்டங்களை அவரை விட 3 ஆட்டங்களில் குறைவாக விளையாடிய கே.எல்.ராகுல் பெற்றுள்ளார்.

# வெங்காய வியாபாரி




ஒரு கணினி நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான்.

தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இண்டர்வியூ கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள்.

"ஈ - மெயிலா? எனக்கு ஈ-மெயில் இண்டர்நெட்டெல்லாம் தெரியாதே" என்றான் துடைக்க வந்தவன்.

"கணினி நிறுவனத்தில் வேலைபார்க்க விரும்புகிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே!" என்று அவனை அனுப்பிவிட்டார்கள். வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் 10 டொலர்கள் இருந்தன. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான்.

பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 டொலர் லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம் மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான். இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பது சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவருடைய ஈ- மெயில் முகவரி கேட்டார். வியாபாரி, "ஈமெயில் முகவரி இல்லை" என்று பதிலளிக்க, "ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இண்டர்நெட்டெல்லாம் தெரிந்திருந்தால்...?" என்று ஆச்சர்யமாய்க் கேட்டார் வங்கி ஊழியர். "அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்" என்றார் வியாபாரி.



## உலகு



கோடை கால வெண் மேகத்தை
ரசிக்கிறது இவ் உலகு
மாரி கால கரும் மேகத்தையும்
ரசிக்கிறது இவ் உலகு
ரசிக்க அம் மேகம் மோதும் போது
ஏற்படும் மின்னலையும் ரசிக்கிறது இவ்வுலகு
மனம் என மேகம் இருக்க உடைந்து
மழை என அழுகை பொழியும்
போதும் கூட இவ் உலகு ரசிக்கிறதே

**லோ.கம்சனா,** யாழ்ப்பாணம்.

## விடுகதைகள்


1.குதிரை ஓட ஓட வால் குறையும். அது என்ன?
**ஊசியும் நூலும்**

2.ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளி தின்னலாம் அது என்ன?
**இடியப்பம்**

3.இரவும் பகலும் சுற்றுவான் அவன் யார்?
**கடிகார முட்கள்**

4.இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?
**பட்டாசு**

**உ.ஆராதனா**
தரம்-3,
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.



## சஹாரா பாலைவனம்

உலகின் மிகப்பெரிய பாலைவனமான சஹாரா பாலைவனம், 9.2 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது.

ஆபிரிக்கக் கண்டத்தில் 31 சதவீத நிலப்பரப்பை சஹாரா பாலைவனம் கொண்டுள்ளது.


இன்னும் 15 ஆயிரம் ஆண்டுகளில் சஹாரா பாலைவனம் பசுமைப் பகுதியாக மாறும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அல்ஜீரியா, லிபியா, எகிப்து, மாலி, மொராக்கோ, சூடான் துனீஷியா உள்ளிட்ட நாடுகளில் சஹாரா பாலைவனம் பரந்து விரிந்துள்ளது.


வெப்பம் மிகுந்த பகுதியாக இருந்தாலும், சஹாரா பாலைவனத்தில் சுமார் 20 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு பெண்கள்தான் தலைவராக உள்ளனர். சஹாரா பாலைவனத்தில் ஏராளமான மணல் மேடுகள் உள்ளன. இந்த பாலைவனத்தில் ஓடும் ஒரே நதியாக நைல் நதி உள்ளது. சஹாரா பாலைவனப் பகுதியில் ஆண்டுக்கு 4 அங்குலம் அளவுக்கு மட்டுமே மழை பெய்கிறது.

# சிறுவர் கைவண்ணம்






பி.சஞ்ஜேய்,
தரம்: 2
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை.



P.மதீசன்,
தரம்: 5
யா/கோப்பாய் நாவலர் தமிழ்
வித்தியாலயம்.



V.சிவகாமி,
தரம்: 4A,
யா/ இந்து ஆரம்பப்
பாடசாலை.




க.ஜானுஜா,
தரம்: 4,
யா/ நீர்வேலி சி.சி.த.க.
பாடசாலை.



R.N..ஹெரோனா,
தரம்: 7A.
J/Holy family
convent.

# கி.ரா: நினைவுகள் 39


முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



**பேராசிரியர் அ.ராமசாமி**

*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

டிஸ்கவரி புக்பேலஸ் திட்டம் நடக்கவில்லை என்ற நிலையில் நான் புதுச்சேரியில் இருந்த போது தன்னார்வலராக ஒருவர் நடத்திய கி.ரா. விமரிசனக் கூட்டம் நினைவுக்கு வருகிறது. அந்தத் தன்னார்வலர் பெயர் இரா. அருளப்பன். இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறைப் பேராசிரியராக இருக்கும் முனைவர் இரா. அழகரசன் அவர்களின் அண்ணன். அவரைப் பார்க்கும்பொருட்டு அடிக்கடி புதுச்சேரி வருவார். அப்போது அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்துறையில் ஆய்வாளர். புதுவையிலுள்ள நூலகங்களில் நூல்கள் தேடும்பொருட்டும் அண்ணனைப் பார்க்கவும் வருவார். அவரது சகோதரர் அருளப்பன் புதுச்சேரியில் ஒருவிதத் தவநிலை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தவர்.



அரவிந்தரின் தியானம், வேதாத்ரி மகரிஷியின் வாழ்க வளமுடன் மீது தீராத நம்பிக்கை, இயற்கை உணவு முறைகள் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர். ஒரு பழைய மிதிவண்டியில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருப்பார். புதுச்சேரியில் நடக்கும் அரசியல், சமூகச் செயல்பாட்டுக்கூட்டங்களுக்கும் கலை, இலக்கிய நிகழ்வுகளுக்கும் தவறாத ஒரு பார்வையாளர். குறைவான ஆடை, மிகுந்த உணவுக்கட்டுப்பாடு என அவரது வாழ்க்கை முறை கொஞ்சம் பயமுறுத்துவதாகவும் நகைப்புக்குரியதாகவும் இருக்கும். புதுவை ராஜாஜி நகர் முதல் தெருவில் ஒரு வீட்டு முதல் மாடியில் நானிருந்தேன்.

அந்த வீட்டுக்குப் பக்கத்தில் மொட்டை மாடியில் ஓர் சிறிய அறையில் அவர் இருந்தார். அவரைப் பார்க்க வரும் அழகரசன், நிறப்பிரிகை, ஊடகம் போன்ற இதழ்களில் அப்போது எழுதியிருக்கிறார். மொழிபெயர்ப்புகளும் செய்து தருவார்.

ஒருநாள் திடீரென்று அருளப்பன், கி.ரா.வுக்காக ஒரு கருத்தரங்கம் நடத்தப்போவதாகச் சொன்னார். ஏற்பாடுகளை நான் செய்து கொள்கிறேன்; பேசுபவர்களை மட்டும் நீங்கள் உறுதி செய்து தாருங்கள் என்றார். மிஷன் தெருவில் உள்ள கல்வே கல்லூரியில் இடம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்தார்.

பெயர் தான் கல்லூரி; உண்மையில் அது பிரெஞ்சுக்காரர்கள் ஆரம்பித்த பள்ளிக்கூடம். அங்கு தான் நாங்கள் நாடக ஒத்திகைகளெல்லாம் நடத்துவோம். பெரிய திட்டமெல்லாம் இல்லாமல் அருளப்பன் ஏற்பாடு செய்த அந்தக் கருத்தரங்கம் கி.ராஜநாராயணனின் இலக்கிய வாழ்க்கையில் முக்கியமான திருப்பமொன்றைச் செய்தது. கட்டுடைப்பு, பின் நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் எனத் தீவிரமாக எழுதிக் கொண்டும் பேசிக்கொண்டுமிருந்த பலரையும் கி.ரா.வின் எழுத்துகள் மீது கவனம் திருப்பியது அக்கருத்தரங்கு. ராஜ்கௌதமன், கண்ணன். எம். க.பஞ்சாங்கம், பிரேம் ரமேஷ், அருணன், அழகரசன் ஆகியோருடன் நானும் ரவிக்குமாரும் முன்னின்ற கருத்தரங்கு அது.

தொடர்ச்சியாக அவர் தொகுத்த பாலியல் கதைகளை விரிவாக ஆய்வுக்குட்படுத்திய அக்கருத்தரங்கம்தான் கி.ரா.வின் கதைசொல்லும் மரபில் இருக்கும் இந்தியத்தனம் மற்றும் பின் நவீனத்துவச் சொல்முறைமை போன்றவற்றை வெளிக்கொண்டுவந்தது. வட்டார மொழிநடையைப் பயன்படுத்துவதன் மூலம் அவர் உருவாக்கும் படைப்புலகத்தின் மீது ஏற்படும் நம்பகத்தன்மை விரிவாகப் பேசப்பட்ட து.

தொடர்ச்சியற்ற கதைசொல்லல் தன்மை, இந்தியக் கதைக் கூற்று மரபின் தொடர்ச்சி போன்றனவற்றைக் கி.ரா.வின் எழுத்துகள் வழியாக முன்வைத்த கட்டுரைகள் பின்னர் நூலாகத் தொகுக்கப்பட்டது. அப்பொறுப்பில் பெரும்பங்காற்றியவர் முனைவர் க.பஞ்சாங்கம். அந்தக் கருத்தரங்கிற்குப் பின்பே அவர்களிருவரும் நெருங்கிய நண்பர்களாக மாறினார்கள். ■





# வீராப்பு இன்றி விழிப்பாய் இருப்போம்

76
மலர்ப் படுக்கையில் படுத்த பலரும்
மரணப் படுக்கையை விரைந்து ஏகினர்
மலர் மணக்க வாழ்ந்தவர் இறந்தும்
மலர் வணக்கமும் இன்றி வேகினர்
பலர் இருக்கவும், பாடை சுமக்கவும்
பாக்கியம் அற்றவர் பாவம் ஆகினர்
சிலர் நினைக்கிறார்; தப்பினோம் என்று
சீச்சீ...அந்த நினைப்பே தப்பாம்!

77
அடாத்தாய் சூழ்ந்து தாக்கும் கிருமி
அடுத்த வேலை செய்ய விடாமல்
இடக்குப் பண்ணி இழைத்த வலியை
இறக்கும் வரையில் மறப்பார் யாரோ?
எடுத்த பிறப்பில் இதுபோற் துன்பம்
எவரும் அறியார்? கொரோனா கூடி
விடுத்த சவாலை வென்றோம் என்று
வீராப் பின்றி விழிப்பாய் இருப்போம்

78
மூச்சை இழுத்து விடவே நூறு
மூட்டை சுமந்தாற் போல களைக்கும்
ஆச்சென்று இரும, தும்ம உடம்பே
அறுந்து விழுமாற் போல வலிக்கும்
பேச்சுக் கேதும் இரு சொல் பேச
பெருமூச் செறிந்து உயிரே பதைக்கும்
ஈச்சுப் போடும் கொரோனா வந்தால்?
உணர்ந்தித் துன்பம் அண்டாது இருப்போம்

79
முற்றாக் கொரோனா அற்ற தென்று
மொக்குக் கதைகள் பேசிக் கொண்டு
வெற்றி வீரர் போலத் திரிந்தால்
வீட்டில் முடங்க வேண்டி வருமாம்
கற்றும் பட்டும் உணர்ந்தோம் அவஸ்தை
கொடிது கொடிது கொரோனா என்பேன்
சற்றுக் கவனம் இழந்தால் மீண்டும்
சப்பாணி கட்டி இருக்க வருமாம்

80
ஒற்றைக் கிருமியும் இல்லாது ஒழிக
ஒட்டு மொத்த உலகமும் விடிக
தொற்றைக் காவித் திரிபவர் அற்று
தொல்லை நோயே அகன்று விடுக
இற்றை வரையில் உலகம் பட்டதை
இனியெப் பிறப்பிலும் படாதிருக்க
மற்றவர் மீதிலும் அன்பாய்ப் பண்பாய்
வாழ்வில் அறமும் வாழ வாழ்வோம்

○ வேலணையூர் சுரேஷ்



# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

## ஒல்லாந்தர் ஆட்சி

யாழ்ப்பாண கோட்டை மிகவும் பலம் வாய்ந்ததாக காணப்பட்டது. கோட்டையைச் சுற்றி அகழிகளும் பீரங்கிகளும் காணப்பட்டன. நாங்கள் கோட்டை மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன் கோட்டைக்குள்ளிருந்த போர்த்துக்கீச தளபதிக்கு ஒரு கட்டளை(Summons) அனுப்பினோம்.

### ஒல்லாந்தரால் அனுப்பப்பட்ட கட்டளையின் தமிழாக்கம்

எல்லாம் வல்ல இறைவன் எமது தோள் மீது இருக்கிறார். எமது தாக்குதலில் இருந்து தப்பி நீங்கள் கோட்டையை விட்டு வெளியேறுவதற்கான எந்த மார்க்கமும் இல்லை. ஐக்கிய மாகாணங்களின் ஆளுநர் மேன்மைதங்கிய ஜோன்மற்சுக்கர் மற்றும் கிழக்கிந்திய கம்பனி சார்பாக இந்த ஆணையை அனுப்புகிறோம். இந்தக் கோட்டையைப் பற்றி கேள்வி கேட்பதற்கு அல்ல. நீங்கள் உங்கள் துணிச்சலை நிரூபித்தி ருந்தீர்கள். இப்போது நீங்கள் சிந்திக்க வேண்டிய விடயம் எமது படைகளின் முன்னாள் உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதே. நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்களோ தெரியாது. நீங்கள் உங்களது முடிவில் வளைந்து கொடுக்காமல் இருக்கக் கூடும்.

ஆரம்பம் முதல் நாம் எமது துணிச்சலையும் பலத்தையும் நம்பியிருக்கிறோம். வீரம் செறிந்த போர் வீரர்கள் என்ற வகையில் உங்களுக்கு சில நிபந்தனைகளை விதிக்கிறோம். நீங்கள் எமது பலத்தை பரீட்சித்துப் பார்க்க விரும்பினால் அதற்கு முன்னர் நாங்கள் எமது கிறிஸ்தவ உலகத்தை பாதுக்காக்க வேண்டிய நிலை ஏற்படும். கடவுள் எங்கள் பக்கம் இருந்தால் நாங்கள் வெற்றி பெற்றால் உங்களை நாங்கள் மிகமோசமான முறையில் உபசரிக்கவேண்டியிருக்கும்.

யுத்த சம்பிரதாயங்களுக்கு இணங்க, பிறகு நாங்கள் உங்களது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மாட்டோம். உங்களது துணிச்சலை நீங்கள் நிரூபித்தீர்கள் இப்போது உங்களது பாதுகாப்பு பற்றி முன்னெச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் புத்திசாதுரிய மாகவும் தீர்மானம் எடுக்கவேண்டிய நிலையில் உள்ளீர்கள்.

உங்களது ஆளுநரிடமிருந்து சாதகமான பதிலை இந்தக்கடிதம் கொண்டு வருபவர் மூலம் எதிர்பார்க்கிறோம். எமது வார்த்தையை மதித்து நீங்கள் பதில் அனுப்ப விரும்பினால் உங்கள் எதிராகவோ நண்பனாகவோ நினைத்து இந்தக் கடிதம் கிடைத்து மூன்று மணித்தியாலங்களுக்குள் பதிலை அனுப்பிவைக்கவும்.

இப்படிக்கு

*டச்சுப் படைகளின் கடல் மற்றும் தரைப்படைத்தளபதி.*

*(இக்கடிதம் போர்த்துக்கீச மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது)*

### ஒல்லாந்தரின் கடிதத்துக்கு போர்த்துக்கீச தளபதி அல்லது ஆளுநர் வழங்கியபதில்

இந்தக் கோட்டை மேன்மை தங்கிய போர்த்துக்கல் அரசனுக்கே சொந்தமானது. இந்தக் கோட்டையின் தளபதியின் கடைசித்துளி இரத்தம் இருக்கும்வரை இந்தக்கோட்டை போர்த்துக்கல் அரசனுக்கே சொந்தம். கடவுள் என்ன நினைக்கிறாரோ தெரியாது ஆனால் அவரது ஆட்களை (போர்த்துக்கீசரை) அச்சுறுத்த முடியாது.

இந்த மொட்டையான பதில் எம்மைச் சிந்திக்க வைத்தது. ஒவ்வொரு விடயமும் எம்மீது தாக்குதல் நடத்துவது போன்றே இருந்தது. வீரம் நிறைந்த ஒருவனை இது பலவழிகளிலும் சிந்திக்கவைத்தது. கோட்டைக்குள் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. நாங்கள் சில நிபந்தனைகளின் பேரில் செயற்பட்டோம். கோட்டைக்குள் ஒரு மரத்தொட்டியில் மாத்திரம் குடிதண்ணீர் இருந்தது. ஏப்ரல் 28 ஆம்திகதி கோட்டை முற்றுகை யிடப்பட்டது. நாங்கள் கோட்டை மதிலை சுற்றிவர கண்ணிவெடிகளை புதைத்திருந்ததுடன் பீரங்கிகளையும் நிறுத்தியிருந்தோம். வெடிமருந்து பாவிக்கவேண்டிய தேவை எமக்கு ஏற்படவில்லை. போர்த்துக்கீசத் தளபதியும் பதில் தளபதியும் மிக ஓர்மத்துடன் போரிட்டனர். இவர்களில் ஒருவர் வாயிலும் மற்றவர் தொடையிலும் காயமடைந்தனர். மூன்றரை மாத யுத்தத்தின் பின் ஜூன் 21 ஆம்திகதி போர்த்துக்கீசர் வெள்ளைக்கொடியுடன் வந்து சரணடைந்தனர்.

போர்த்துக்கீசர் கோட்டையிலிருந்து வெளியேறுவதற்கு மூன்று நாள் எடுத்தது 23.06.1658 இல் கோட்டை எம்மிடம் வீழ்ந்தது. அன்றைய தினம் 17.15க்கு நன்றி செலுத்தும் ஆராதனையை நாம் நிகழ்த்தினோம். பால் டயஸ் பாதிரியார் தலைமையில் நன்றி செலுத்தும் ஆராதனை இடம்பெற்றது.

நாங்கள் கோட்டைக்குள் நுழைந்தபோது எமது தாக்குதல் காரணமாக கோட்டை மதில்கள், வீடுகள், தேவாலயங்கள் என்பன பலத்த சேதமடைந்திருந்தன. கோட்டையினுள் 300 தென்னை மரங்கள் காணப்பட்டன. நாங்கள் உள்ளூர்வாசிகளை கோட்டையினுள் இருந்த வீடுகளில் வந்து வசிக்குமாறு ஊக்கப்படுத்தினோம். சில பெண்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நாகபட்டினத்துக்கு கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு நாங்கள் சில அன்பளிப்புகளை வழங்கினோம். அவர்களும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கீசத் தளபதி கப்பலில் ஏற்றப்பட்டு கோவாவுக்கோ நாகபட்டினத்துக்கோ செல்லுமாறு அனுப்பிவைக்கப்பட்டார். எமது சிப்பாய்கள் போர்த்துக்கீசரை கௌரவமாகவே நடத்தினர். குடிதண்ணீர்ப் பிரச்சனை காணப்பட்டபடியால் நாங்கள் மன்னார்க்கோட்டையிலும் யாழ்ப்பாணக் கோட்டையிலும் கிணறுகளை வெட்டினோம்.

*(ஏற்கனவே இந்தப் பகுதியில் வெளிவந்த சில தகவல்கள் மீளவும் சில இந்தவாரம் இடம்பெற்றுள்ளன. பால்டயஸ்பாதிரியாரின் குறிப்புகளை முழுமையாக வழங்கும் நோக்குடன் அவரது குறிப்பை அப்படியே தந்துள்ளேன். அதனாலேயே அவ்வாறு சில தகவல்கள் மீள வந்துள்ளன.)*



(வரலாறு நீளும்)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வீட்டில் இருந்து கிளம்பிய நெருப்பைக் கண்டவர்கள் பதறினர். என்னாயிற்றோ என்ற ஏக்கத்தோடு தீயை அணைக்க ஓடிச் சென்றனர். அப்படி அவர்கள் ஓடிச் செல்கையில் வீட்டுக்குச் செல்லும் வழியின் குறுக்கே கீழே ஒரு மார்க்கமாக உட்கார்ந்திருந்தான் ரவீந்திரன் (நதியாவின் சிற்றன்னையின் மகன்). அவனும் அந்த வீட்டுக்காரன்தானே. ஆனால், ஏன் தீயை அணைக்காமல் உட்கார்ந்திருக்கின்றான் என்று கேட்க அவனுக்கு அருகில் சென்றவர்களின் நாசியில் குப்பென்று அடித்தது சாரய நெடி.

தலைக்கேறிய போதையில் தள்ளாடியபடி ரவி எழுந்தான். வீட்டை விழுங்கிக் கொண்டிருந்த நெருப்பை அணைக்கப்போனவர்களைப் பார்த்து, 'பயப்பிட வேணாம். வீட்டுக்குள்ள யாரும் இல்லை' என்று சொல்லி அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டான். தீயை அணைக்கச் சென்றவர்களுக்கும் அவன் சொல்வது உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. ஏனெனில் வீட்டுக்குள் தங்கையா, லெட்சுமி, நதியா, அவளின் இரு பிள்ளைகள் என ஐவர் இருந்தனர். இருப்பினும் இவ்வளவு தூரம் கொலைவெறியோடு தீ பற்றி எரிந்தபோதும் எவரதும் அலறலோ அபயக்குரலோ அந்த வீட்டில் இருந்து எழவில்லை. ஆகவே அவர்கள் வீட்டின் மறுபுறமாகத் தப்பித்திருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டார்கள்.


ஆயினும் அந்த வீட்டில் எரியும் தீ, இன்னும் மூர்க்கம்கொண்டால் தங்கள் வீடுகளுக்கும் பரவிவிடும் என்பதால் அதுகுறித்து உடனடியாகப் பொலிஸுக்கும் தீயணைப்புப் பிரிவுக்கும் அறிவித்தனர். அத்தோடு நின்றுவிடாமல், கையிலகப்பட்ட பாத்திரங்களில் தண்ணீரை ஏந்திவந்து தீயைக் கட்டுப்படுத்தினர். பொலிஸாரும் வந்துவிட்டனர்.

ஆனால், வீடு எரிந்து எலும்புக்கூடாகி இருந்தது. கூடவே மனித உடலங்கள் எரிந்த வாடையும் அந்தப் பகுதியெங்கும் பரவத் தொடங்கியது. உடனடியாகவே பொலிஸாரும் அந்தப் பகுதி இளைஞர்களும் வீட்டுக்குள் புகுந்தனர். உள்ளே முன் விறாந்தையில் ஒரு உடலமும் உள் அறையில் நான்கு சடலங்களுமாக கருகிப்போய் கிடந்தன. எவரும் உயிரோடு இல்லை. சில மணிநேரங்களுக்கு முன்னர் கொண்டாட்ட வீடாக இருந்த அந்த இடம் இப்போது சுடுகாடாக மாறியிருந்தது. அந்த ஐவரையும் தீ விழுங்கியது தற்செயலான விபத்தா? அல்லது திட்டமிட்ட கொலையா?.

அதே வீட்டைச் சேர்ந்த ரவீந்திரன் மட்டும் ஏன் தீ பற்றியெரியும்போது வீட்டுக்குள் இருக்காது வெளியே வந்து அமர்ந்திருந்தான்?.

தீயை அணைக்கச் சென்றவர்களிடம், 'வீட்டுக்குள் எவரும் இல்லை' என்று ரவீந்திரன் ஏன் தடுத்தான்?. ஊரவர்களுக்கும் பொலிஸுக்கும் இதே சந்தேகங்கள் தொற்றிக்கொள்ள ரவீந்திரன் கைதுசெய்யப்பட்டான். பொலிஸ் விசாரணையிலும் மேலும் சில தகவல்கள் சிக்கின.

## அவனா கொலையாளி?




என்னதான் ரவீந்திரன் நதியாவுக்குத் தம்பியாக இருந்தபோதும் உள்ளூர அவன், நதியாவோடு பகைமையே கொண்டிருந்தான். திருமணம் முடித்து அவள் அப்படியே போய்விடுவாள் என்று ரவீந்திரன் நம்பியிருக்க நதியா இரண்டு பிள்ளைகளோடு மீண்டும் வந்து அதே வீட்டில் தங்களோடு இருப்பதை அவன் விரும்பவில்லை. இப்படி அவள் துணையின்றி இருந்தால் தனக்கு வரவேண்டிய வீட்டை பெற்றோர் அவளுக்குக் கொடுத்துவிடுவார்களோ என்று அச்சப்பட்டான். இந்த அச்சத்தை தன் நண்பர்கள் சிலரிடமும் மதுபோதையில் முன்னர் உளறிக்கொட்டியிருக்கின்றான். அத்தோடு நதியாவின் நடத்தை தொடர்பிலும் பலமுறை ரவீந்திரன் தர்க்கப்பட்டிருக்கின்றான். ஆனால், இந்தச் சண்டைகளின் போதெல்லாம் பெற்றோர் ரவீந்திரன் பக்கம் நிற்பதில்லை. தான் பெற்ற பிள்ளையாக இருந்தபோதும்கூட லெட்சுமி ரவீந்திரன் பக்கம் நில்லாமல் தன் வயிற்றில் பிறக்காத மகளான நதியாவின் பக்கம் நிற்பதும் அவனுக்கு இன்னும் ஆத்திரத்தைக் கூட்டியது. சிலவேளைகளில்பெற்றோரைத்தாக்கவும்முயற்சித்திருக்கின்றான். ஆனால், அந்தச் சண்டைகளெல்லாம் பெரும்பாலும் அவன் மதுபோதையில் இருக்கும்போது நடப்பவைதான். போதை தெளிந்துவிட்டால் அப்பாவியாக மாறிவிடுவான். எனவே இந்தச் சண்டைகளை எவரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆயினும் உள்ளூர அவன் மனதில் இருந்த பகைமையும் சொத்து தன்னை விட்டுப்போய்விடுமோ என்ற ஏக்கமும் நதியாவின் நடத்தையால் தனக்கு அவமானம் ஏற்பட்டு விடுமோ என்ற ஆதாரமற்ற அச்சமும் அவனை தன் குடும்பத்தார் அத்தனை பேரையும் கூண்டோடு கொலைசெய்யத் தூண்டியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதனையே ஊரவர்களும் தங்கள் ஊகமாகச் சொல்கின்றனர்.

இந்தச் சந்தேகங்களின் அடிப்படையில், பொலிஸார் ஒருபுறம் அவனை முறையாகக் 'கவனித்து' உண்மையைக் கக்கவைக்க முயற்சித்துக்கொண்டே மறுமுனையில் அன்றைய நாளில் அவனது செயற்பாடுகளைப் பற்றியும் துருவத் தொடங்கினர். அப்படி அவர்கள் விசாரித்துக்கொண்டு போகையில் தான் அன்று மதியம் அவன் ஒரு கொள்கலனில் அதிகளவான பெற்றோலை ராகலை நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாங்கியிருந்தான் என்பது தெரியவந்தது. இத்தனைக்கும் அவனிடம் ஒரு மோட்டார்பைக் கூட இல்லை. அப்படியானால் எதற்கு அவனுக்கு இவ்வளவு பெற்றோல்? வாங்கிய பெற்றோலுக்கு என்ன நடந்தது? எதைக்கேட்டாலும் கல்லுளிமங்கன் போல ரவீந்திரன் வாயைத்திறந்து எதுவும் சொல்கிறான் இல்லை என்று அலுத்துக் கொள்கின்றனர் பொலிஸார்.

ரவீந்திரன்தான் இந்தப் படுபாதகச் செயலைச் செய்திருக்க வேண்டுமென்று ஊரவர்களும் பொலிஸாரும் உறுதியாக நம்புகின்றனர். ஆனால், அதுதான் உண்மையா? ஒருசில சம்பவங்களை மட்டும் வைத்துக்கொண்டு தனியே ரவீந்திரன் மீது கொலைப்பழியைச் சுமத்துவது சரியா? என்றும் இன்னொரு தரப்பு கேட்கவே செய்கின்றது. ஏனெனில் ரவீந்திரனைக் கைதுசெய்த பின்னரும் சில சந்தேகங்களுக்கு இன்னும் உருப்படியான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தெரிந்தும் தெரியாமலும்

# வெற்றி கொடுக்குமா வெற்றிலை?


○ சுழியன்



மாகாணசபைகளுக்கான தேர்தலை 2022 மார்ச் மாதத்துக்குள் நடத்தி முடிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நோக்கிலேயே வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்தபடியாக, உள்ளாட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கலப்பு முறையில் தேர்தலை நடத்துவதாக இருந்தால் எல்லை நிர்ணயப்பணி உள்ளிட்ட விடயங்களுக்கு காலமெடுக்கும். எனவே, பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவதற்கும் அதற்கான சட்ட ஏற்பாட்டை சபையில் முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இதற்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகளும், இதர அமைப்புகளும் தயாராகிவருகின்றன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியிலிருந்து விலகி மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக ஆராய்ந்துவருகின்றது. விமல், கம்மன்பில உள்ளிட்டோரை உள்வாங்கி 'வெற்றிலை' சின்னத்தில் கூட்டணி அமைப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. இந்த முயற்சி கைகூடும் பட்சத்தில் வடமேல் மாகாண முதல்வர் வேட்பாளராக தயாசிறி ஜயசேகர போட்டியிடவுள்ளார்.



## பிள்ளையானை வைத்து பிள்ளையார் சுழி!

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. மொட்டுக் கூட்டணியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராகவே அவர் களமிறக்கப்படலாம் எனவும், இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர் துறப்பார் எனவும் தெரியவருகின்றது. இதற்கான வியூகத்தை பஸில் ராஜபக்சவே வகுத்துவருகின்றார். அதாவுல்லா, கருணா, ஹிஸ்புல்லா உட்பட பல தரப்புகளின் ஆதரவுடன் பிள்ளையான் களமிறங்கலாம் எனவும், இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுக்கு கிழக்கு தேர்தல் களம் சவால்மிக்கதாகக் காணப்படும் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் பிள்ளையானின் கட்சி தனித்து போட்டியிட்டது. எனவே, பிள்ளையான் பதவி துறந்தாலும் அவரின் கட்சியை சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு உள்ளதால், சவாலை ஏற்று பிள்ளையான் முதலமைச்சர் வேட்பாளர்ஆகக்கூடும். அதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவின் மகளான ஷாமி கிரியல்ல போட்டியிடவுள்ளார் எனத் தெரியவருகின்றது. மத்திய மாகாணசபைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளாராம். தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை அவர் ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் மகள் வடமத்திய மாகாணத்தில் போட்டியிடுவார் என முன்னதாக தகவல் வெளியிடப்பட்டிருந்தாலும் தற்போது அது கேள்விக்குறியாகியுள்ளது.

## ஆட்டுவிக்கும் பஸில்

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளுக்குமிடையிலான இணையவழி கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வெளிவிவகாரத்துறைக்கு ஒதுக்கவேண்டிய தொகை மற்றும் கடந்தகாலங்களில் ஒதுக்கப்பட்ட நிதியை வைத்து முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

அதற்கான ஆவணங்களை தனக்கு அனுப்பிவைக்குமாறும், நிறைவுபெறாத திட்டங்களை விரைவில் செயற்படுத்துமாறும் பஸில் ராஜபக்ச அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருக்கும் தூதுவர்களையும் ஆட்டுவிக்குமளவுக்கு பஸில் அதிகாரம் கொண்டவராக மாறிக் கொண்டு இருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது என அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.



## மீண்டும் இணைவோமா?

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் பற்றியும் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்தும் இருவரும் மனம்விட்டு பேசியுள்ளனர். அதுமட்டுமல்ல ரணில், சஜித் சங்கமம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

" ராஜித நாம் ஏன் இணைந்து பயணிக்க கூடாது? என வஜிர கேள்வி எழுப்ப, அதற்கான காலம் உதயமாகும் என ராஜித பதிலளித்துள்ளார்.

ஆனால் அரசாங்கத்துடன் இரகசிய உறவு வைத்திருப்பவர்கள் தமது முகமூடியை கழற்றிவைத்துவிட்டு வந்தால் சிறப்பாக இருக்கும் எனவும் ராஜித இந்தச்சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## கவலையில் டயானா



ஐக்கிய மக்கள் சக்தி வழங்கிய தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் பிரவே சித்த, டயான கமகே, அதன்பின்னர் 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கி மொட்டுடன் சங்கமித்தார். அரசுடன் அவர் உத்தியோகபூர்வமாக இணையாவிட்டாலும்கூட சபைக்குள் ஆளுங்கட்சி எம்.பி.போலவே செயற்பட்டுவருகின்றார். சஜித் அணிக்கு தமது கட்சியை வழங்கிய நன்றிக்கடனுக்காகவே டயானாவுக்கு எம்.பி. பதவி ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்டது. எனினும், கட்சி எடுத்த முடிவுக்கு எதிராக அவர் செயற்பட்டார். இதனால் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். அதுமட்டுமல்ல அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிப்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடிதமும் அனுப்பியுள்ளது. இதனால் டயானா கடுப்பில் இருக்கிறார். பிரதமர் மஹிந்தவை அண்மையில் சந்தித்த அவர், தமது உள்ளக்குமுறலையும் வெளிப்படுத்தியுள்ளார். " ஐ.தே.கவில் இருந்து விரட்டப்பட்ட அவர்கள் வீதியில் இருந்தனர். நான்தான் அடைக்காலம் (கட்சி) கொடுத்தேன். வீட்டுக்குள் புகுந்த அவர்கள் இன்று வேறொரு பூட்டைபோட்டுக் கொண்டு சாவியையும் வைத்துக்கொண்டுள்ளனர். என்னையும் விரட்டுகின்றனர். என்று அழுது புலம்பியுள்ளாராம். " அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்ற பாணியில் புன்னகையை மட்டும் பதிலாக வழங்கிவிட்டு மஹிந்த புறப்பட்டுவிட்டாராம்.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சந்தேகம் 1

எரிந்துகிடந்த வீட்டினுள் கருகிக்கிடந்த சடலங்களில் நான்கு சடலங்கள் ஒன்றின் அருகே ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டபோல இருந்துள்ளன. முதியவரான தங்கையர்வின் சடலம் மட்டுமே முன் அறையில் கிடந்துள்ளது. ஏனைய நால்வரும் ஒரே அறையில் வரிசையாக சடலமாக மீட்கப்பட்மை பலவித சந்தேகங்களை எழுப்பியுள்ளது. ஒரு வீடு தீப்பற்றி எரியும்போது தங்கள் உயிரைக் காக்கவே எவரும் முயற்சிப்பார்கள். இதனால், அங்கும் இங்குமாக ஓடி அலைவார்களே தவிர ஓரிடத்தில் ஒன்றாகக் கூடியிருக்க மாட்டார்கள். அத்தோடு சம்பவம் நிகழ்ந்த வீடு சிமெந்துக் கற்களை வைத்து மண்ணால் சுவரெழுப்பி தகரங்களின் துணையோடு கட்டப்பட்ட ஒன்றுதான். சுற்றிவர தீப்பிடித்து எரியும்போது உள்ளே மாட்டிக் கொண்டவர்கள் கொஞ்சம் பலமாகத் தள்ளினாலேயே சுவர் பிளந்து வெளியேவர வழியொன்று கிடைத்திருக்கும். ஆனால், அப்படி எந்தப் போராட்டமும் இல்லாமல் உள்ளிருந்த ஐவரும் செத்து மடிந்திருந்தார்கள். அது எப்படி?. வழக்கமாக தங்கையா குடும்பம் நித்திரைக்குச் செல்ல இரவு 11 மணி தாண்டிவிடும். ஆனால், அன்றைக்கு நேரகாலத்துடன் அந்த வீடு உறங்கிவிட்டது. அது ஏன்?

### சந்தேகம் 2



வீடு தீப்பிடித்து எரியும்போது, அக்கம்பக்கத்தில் உள்ள எவருக்கும் எந்தவொரு அவலக் குரலும் கேட்கவில்லை. சம்பவம் நிகழ்ந்த வீட்டுக்கு மிக நெருக்கமாக நாலைந்து வீடுகள் உள்ளன. சற்று உரத்துக் கதைத்தால்கூட அயலில் உள்ள வீடுகளுக்குச் சத்தம் கேட்கும். அப்படியிருக்கையில், தீப்பிடித்து எரிகையில் மாட்டிக்கொண்டவர்களின் கூக்குரல் ஏன் வெளியே வரவில்லை?

மதுபோதை மயக்கத்தில் 'வீட்டில் எவரும் இல்லை' என்று ரவீந்திரன் உளறினானா அல்லது திட்டமிட்டேதான் வீட்டில் உள்ளவர்களை எரிந்து சாம்பராகட்டும் என்று தீயை அணைக்கப் போனவர்களைத் தடுத்தானா? அப்படியானால் வீட்டுக்குள் இருந்தவர்கள் ஏற்கனவே கொலைசெய்யப்பட்ட பின்னர் வீட்டுக்குத் தீவைக்கப்பட்டதா? அல்லது அவர்களுக்கு ஏதும் மயக்கமருந்து கொடுத்து உறக்கத்தில் ஆழ்த்திவிட்டு பின்னர் தீவைக்கப்பட்டதா? அல்லது இவை எதுவும் இல்லாமல் வீட்டில் உள்ளவர்கள் கொண்டாட்டக் களைப்பில் அயர்ந்து தூங்கியபோது தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தால் இந்த அனர்த்தம் நேர்ந்ததா?

### சந்தேகம் 3

நீண்டகாலமாக நதியாவுக்கும் மோகனதாஸ்க்கும் இடையே பிரச்சினை இருந்துவந்துள்ளது. இந்த நிலையில், தன் மகனின் பிறந்த நாளுக்காக திடீரென மோகனதாஸ் கேக்கோடு வந்திருந்தார். அந்தக் கேக்கை வீட்டில் இருந்த அனைவரும் உண்டுமிருந்தார்கள். ஏன் இந்தச் சம்பவத்தோடு மோகனதாஸ்க்குத் தொடர்பிருக்கக்கூடாது?

### சந்தேகம் 4

ஒருவேளை பொலிஸார் சந்தேகப்படுவதுபோல வீட்டிலிருந்தவர்கள் முன்னரே கொலைசெய்யப்பட்ட பிறகு வீட்டுக்கு ரவீந்திரன் தீவைத்ததாக எடுத்துக் கொண்டாலும், ஐந்து பேரையும் தனியொரு நபர் எந்தவித சத்தம் சந்தடியும் இல்லாமல் கொலைசெய்வது சாத்தியமா?. அப்படியானால் இந்தக் கூட்டுக்கொலையின் பின்னணியில் ரவீந்திரனோடு வேறு நபர்களும் இருக்கின்றார்களா?

## நாயே சாட்சி



நதியா தன் இரு பிள்ளைகளோடு மூன்றாவது பிள்ளையாக ஒரு நாயை வளர்த்து வந்தாள். தன் பிள்ளைகளைப் போலவே அதையும் அன்போடு பார்த்துக்கொள்வாள். நதியாவின் பிள்ளைகளும் அந்த நாயின் மீது கொள்ளைப் பிரியம் வைத்திருந்தனர். ஆனால், அதிர்ஷ்டவசமாக நாய் இந்தத் தீயில் இருந்து தப்பியிருந்தது. தன்னை வளர்த்த குடும்பம் கூண்டோடு தீயில் மாண்டதை கண் முன்னே கண்டதாலோ என்னமோ சில நாள்களாக வீட்டின் முன்னால் உள்ள மரத்தின் மீது அமர்ந்து கண்ணீர் வடித்தது. இப்போது அந்த நாய் தன்னை வளர்த்தவர்களைக் காணாத கோபத்தில் போவோர் வருவோரைப் பார்த்தெல்லாம் சீறிப் பாய்கின்றது. நாய்க்கு இருந்த பாசமும் நன்றியும் மனிதர்களுக்கு இல்லையே. அந்த நாய்க்குத்தான் நடந்தது கொலையா? விபத்தா? என்ற உண்மை தெரியும்.

# முனைவர் தி. கமலநாதனின்

# 'உளக்குவிப்பு ஆற்றுப்படை'

பேராசிரியர் கி.விசாகரூபன்,
சிரேஷ்ட பேராசிரியர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இலங்கையில் தரம் மிக்க ஆசிரிய மாணவர்களை உருவாக்கும் கல்லூரியாக நிமிர்ந்து நிற்பது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆகும். இந்தக் கல்லூரி இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்படுவதற்கு மூலவேராக நின்று அதன் முதல்வராகவும் அலங்கரித்தவர் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன். அந்தக்கல்லூரியின் இருபத்தோராவது அகவையைச் சிறப்பிக்கும் முகமாக அதன் பிதாமகரே ஒரு சிறப்பு நூலை வெளிக் கொணர்ந்துள்ளார். அந்தநூல்தான் "உளக்குவிப்பும் கற்றலும்" என்ற நூல்.




இன்று அவுஸ்திரேலியா மண்ணில் வாழ்ந்தாலும் அவரின் வேரும் வாசமும் இந்த மண்ணைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கும் தனது பணியில் இருந்து இன்னும் அவரால் ஓய்வுபெறவே முடியவில்லை என்பதற்கும் சான்றாக இந்நூல் அமைகின்றது.
மிகச் சிறந்த ஆசிரியன் ஒருவன் கல்வி உலகைப் பற்றிய தனது இறுதிக்கணங்கள் வரை கனவு காண்கின்றான். அவனது நினைவுகளின் வேர்களில் இருந்து ஆரோக்கியமான கனிகள் தோன்றுகின்றன. அவை எட்டக்கூடிய இடத்தில் இருந்து கற்பவர்களைநோக்கித் தாமாகவே கையசைத்து வந்துவிடுகின்றன. ஆசிரியனின் உள்ளம் பளிங்குபோல் மினுமினுப்பாகவும் உயர்வுமிக்கதாகவும் அமைகின்றது. எப்பொழுதுமே பண்படுத்தப்பட்டு-விதைக்கபட்டுக்கொண்டே இருக்கும் அந்த நன்னிலம் எத்தனையோ பயிர்களின் தாயகமாக அமைந்து தலையசைத்துக் கதைபேசும். இந்த நூல் உயர்ந்த உள்ளத்தில் இருந்துதோன்றிய நறுங்கனி. தலையசைத்துக் கதைபேசும் புதிய பயிர். நெறிகெட்டு வழிதேடும் உள்ளங்களுக்கான ஆற்றுப்படை.
உலகமயமாக்கல் சூழலில் ஒற்றைப்பண்பாட்டின் முன்னர் அனைத்துத் தனித்துவங்களும் இல்லாமல்போய் கற்றல்மட்டும் மிக நவீனப்பட்டிருக்கின்றது. கற்றல் என்ற விதைப்பு நிகழவேண்டிய மனவயல் பண்படுத்தல் இன்றி வளம் இன்றி வரண்டுபோய் இருக்கின்றது. மனதையும் மனஆற்றல்களையும் குவிமையப்படுத்துவதற்கான உபாயங்களை எமது பண்பாட்டின் மூலவேர்களில் இருந்து தேடல்செய்துள்ளார் ஆசிரியர். இது ஒரு கல்வியியல் நூலாகவும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பாகவும் உளவியல் பனுவலாகவும் மேற்கிளம்புவதைக் காணலாம். ஆசிரியர், மாணவர்களுக்கு மாத்திரமன்றி அனைவருக்குமான பிரதியாகவும் பரிணாமம் பெறுகின்றது.
" வாழ்க்கைச் செயற்பாடுகளை வினைத்திறன் படுத்தவல்ல உளக்குவிப்பை மேம்படுத்தும் உளவியல் உபாயங்கள் நூலின் பயன்பாட்டை மேலும் விசைப்படுத்துகின்றன" என்று கலாநிதி சபா.ஜெயராசா அவர்கள் சிறப்பிப்பது ஈண்டு கவனத்திற்குரியது.
"கற்றலில் கற்பவனுக்கு பெரும்மட்டுப்பாடுகளை உளவியல் ரீதியில் தருவன, கற்பவை விளக்கத்துடன் மனதில் நிறுத்தி மீண்டு பயன்படுத்த முடியாத நிலையிருப்பது, அதற்குக் காரணமான கற்பவற்றை மனதில் பதிவுசெய்துகொள்ள முடியாமை, மறதி என்பனவாகும். இதற்குக் கவனக் கலைப்பான்களும் பல்வேறு காரணங்களால் தோன்றும் மனத்தளம்பலும் சோம்பலும் கற்பவருடைய திட்டமற்ற வாழ்வியல் நடைமுறைகளும் காரணங்களாக அமையலாம். இவற்றை நீக்கி அல்லது வெற்றி கண்டுகற்பவனே கற்றலில் மேன்மை காண்கின்றான்.
அந்த வெற்றியைத் தரவல்லது, உளக்குவிப்புடனான கற்றல் அல்லது உள்ளத்தை ஒருமுகப் படுத்திக் கற்றலாகும்" என்ற பின்னணியை அடிப்படையாகக் கொண்டே வெற்றிகரமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.
உளக்குவிப்பும் கற்றலும், சீரான நித்திரை, உடற்பயிற்சி, தியானம், யோகாசனம், மூச்சுப்பயிற்சி, தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், உணவுத்தெரிவு-முதலாய பதினைந்து தலைப்புகளில் விரிந்துள்ள இந்நூல் பல்வேறு உபதலைப்புகளுடன் எம்மை ஆக்கிரமித்து புதிய அறிவையும் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி நிற்கின்றது. உடலுக்கும் உள்ளத்துக்குமான ஆரோக்கியத்தையும் அதில் இருந்து கட்டமைக்கப்படவேண்டிய கற்றலையும் எளிமையாக மனதில் சேர்த்துவிடும் இலாவகம் அற்புதமாக நிகழ்கின்றது.
கல்வியியலாளராக நின்று நிலைத்த பேரனுபவத்தில் இருந்தும் ஒரு பண்பாட்டின் விசுவாசியாக அனுபவித்த சுகங்களில் இருந்தும் தன்னனுபவத்தை ஒரு சமூகத்தை நோக்கிய ஆற்றுப்படையாக மாற்றுகின்றார் முனைவர் கமலநாதன். இந்த எழுத்துகளில் அவரே நேரே நின்று போதனை செய்வதைப் போன்ற "பாவனை" எழுகின்றது.
இன்று மருத்துவ உலகம் தியானத்தை நோக்கியும் யோகாசனத்தை நோக்கியும் உணவுப்பண்பாட்டை நோக்கியும் உடற்பயிற்சியை நோக்கியும் மக்களைத் திருப்பிக் கொண்டிருக்கும் வேளையில் கல்வி உலகமும் அவற்றை உள்ளீர்த்துக் கொள்ளவேண்டியதன் பின்னணியை கீழைத்தேயப் பண்பாட்டின் அடிப்படையில் விளக்கிச் செல்கின்றார். தியானத்துக்கும் உளக்குவிப்புக்கும் இடையில் உள்ள ஆத்மார்த்தமான பிணைப்பினை மிகத் தெளிவாக இனங்காட்டி ஆற்றொட்டமான மொழிநடையில் அதனை விளக்கிச் செல்கின்றார். உளக்குவிப்புக்குத் தியானமும் தியானத்துக்கு உளக்குவிப்பும் இன்றியமையாது விளங்கும் தன்மையைச் சொல்வதோடு தியானத்தின் வகைகளை விளக்கியும் உள்ளார்.
உளநிறைவுத்தியானம், தெய்வீகத் தியானம், உளக்குவிப்புத் தியானம், சுவாசக் கவனத்தியானம், ஒலித்தியானம், ஆழ்நிலைத் தியானம் ஆகிய தியானவகைகளை அவற்றின் செய்முறைகளை நன்மைகளை எடுத்துரைத்துள்ளார். 95 பக்கங்களுக்குள் பயணம் செய்கின்ற போது உளக்குவிப்பும் கற்றல் மனநிலையும் ஒரு தியானத்தைப் போல வாய்த்துவிடுகின்றன.
அதேபோல யோகாசனப் பயிற்சியும் உளக்குவிப்பும் என்ற பகுதி கவனத்துக்குரியது. யோகக்கலை, உளத்தையும் உடலையும் ஆரோக்கியப்படுத்தும் வித்தையினைத் தெளிவுறவே அறியும் வகை தெளிவுற மொழிந்துள்ளார். யோகாசனப் பயிற்சிகள் 108 ஆகும்.
அவற்றில் 72 முக்கியமானவை. அவற்றுள் 7 ஆசனங்கள் மிகமிக முக்கியமானவை. அந்த ஏழு ஆசனங்கள் பற்றியும் செய்முறை, விளக்கப்படங்கள், நன்மைகள் என்று எழுதிச் சென்றுள்ளார் தியானம், யோகா போலவே மூச்சுப் பயிற்சிக்கும் முதன்மை கொடுத்துள்ளார்.
அவற்றுடன் இணைத்து மூச்சுப் பயிற்சியை முன்னெடுக்கும் போது ஏற்படும் நன்மைகளையும், செய்முறைகளையும் விளக்கியுள்ளார். மூச்சுப்பயிற்சியினால் உடல் இளமையாகும், ஆயுள் அதிகரிக்கும், நோய் எதிர்ப்புசக்தி அதிகரிக்கும். மூளை சுறுசுறுப்படையும், கற்றல் ஆற்றல் விருத்தியடையும், உளக்குவிப்பு மேனிலை அடையும் என்று அடுக்கிக்கொண்டு போகும் நன்மைகளைப் பார்க்கின்றபொழுது கற்பவர்கள் மட்டுமல்ல மற்றவர்களும் பின்பற்றவேண்டியதன் அவசியமும் தேவையும் மேற்கிளம்புவதைக் காணலாம்.
ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு "செயற்பட்டு மகிழ்வோம்" என்ற செயற்திட்டம் வலயக்கல்வித்திணைக்களம் ஊடாக ஒவ்வொரு பாடசாலையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அங்கு பாரம்பரிய விளையாட்டுகள் உட்புகுத்தப்படும் போது ஏற்படும் ஆரோக்கியவாழ்வை எம் கண் முன் கொண்டு வந்துவிடுகின்றார். பல்லாங்குழி, கோலி, பம்பரம் சுழற்றல், ஆடு புலி ஆட்டம், தாயக்கட்டை, பாண்டியாட்டம், கண்ணாமூச்சி, கிச்சு கிச்சுத்தாம்பளம், பச்சைக்குதிரை, கிட்டிப்புள், கொக்கட்டான், குலை குலையா முந்திரிக்கா என்று நீண்டு செல்லும் விளையாட்டுகளை தனியே பெயர் சொல்லிச் செல்லாது அவ்விளையாட்டுகளை விளையாடும் முறைகள், அவை சிந்தனையைத் தூண்டும் விதம், அவை ஏற்படுத்தும் உளக்குவிப்பு. புத்துணர்ச்சி என்று மிக ஆழமானவகையில் எழுதிச்சென்றுள்ளார். அந்தவகையில் எமது பாரம்பரிய விளையாட்டு களுக்குள் இருந்த பண்பாட்டு மேம்பாட்டுச் சிகிச்சைகளையும் இலகுவாக வெளிக்கொணர்ந்துள்ளார். அதுமட்டுமல்லாமல் மூளையைத் தூண்டும் வழிமுறைகளை படித்ததில் இரசித்தது பகுதியின் ஊடாகவும் வழிப்படுத்திநிற்கின்றார்.
மேலும் நீங்கள் உண்ணும் உணவின் தன்மையைப் பொறுத்து உளக்குவிப்பிலும் ஞாபக சக்தித் திறனிலும் மாற்றம் ஏற்படக் கூடும். ஆதலால் உங்கள் ஆகாரத்தின் தரத்தில் கவனங்கொள்ளுதல் வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றார்.
இயற்கைச் சத்துணவுகளைத் தெரிகின்ற வழிகளையும் கூறியுள்ளார். "எது உனக்கு உணவாக இருக்கின்றதோ? அதுவே உனக்கு மருந்தாக இருக்கவேண்டும். எது உனக்கு மருந்தாகவும் இருக்கின்றதோ அதுவே உணவாகவும் இருக்கவேண்டும்" என்ற சித்தமருத்துவக் கருத்தைத் தானும் வழிமொழிந்து உணவு உண்ணும் பன்னிருமுறைகளை எடுத்துரைத்துள்ளார்.
இவ்வாறு "உளக்குவிப்பும் கற்றலும்" என்ற இந்தநூலானது கல்வியியல் ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் மிக முக்கியமானது. முனைவர் தி. கமலநாதன் ஆளுமைமிக்க கல்வியியலாளர் என்பதையும் தாயுமானவர் என்பதையும் இந்த நூல் ஒன்றாகவே வெளிப்படுத்தி நிற்கின்றது.

# இமை வழியே பெருங்காதல்

நீக்கமற நிறைந்திருக்கும் பின்னிரவு
மழையின் குளிர் இருளில் நீந்தும்
இரு சொற்கள் அகந்திறந்து
நமை வேடிக்கை பார்க்கின்றன

விரகத்தின் மெல்லியகோடு
மௌனத்தின் அந்திமம்
கரையக் கரைய மாயரகசியங்களில்
பூட்டிக்கொள்கிறது

ஆயுள்ரேகையின் ரகசியக்கோடுகளில்
பரமபதம் ஆடத்துவங்குகிறோம்
மரகத மஞ்சள் ஆழங்களில் மீன் தேடும்
நாரை முத்தங்களை தின்னத் துவங்குகிறது

விபரித்தலுக்கு அப்பாற்பட்ட
எலுமிச்சை வாசனையில்
இமையாது விழி அருந்துகிறது
ஒரு கடலின் பெருங்காதலை



கயூரி புவிராசா

மானிப்பாய் சுதன்

# ஆமி நிக்குதோ..?

சஞ்சீவி
**சிறுகதை**


சிவத்தார் என்று அழைக்கப்படும் சிவம், மூன்று பிள்ளைகளின் தகப்பன். மூன்றாவது பிள்ளை பெண்ணாகப் பிறந்தால் அதிர்ஷ்டம் வரும் என்பது அவரின் அதீத நம்பிக்கை. அதேபோல அவருக்கு மூன்றாவது பிள்ளை பெண்குழந்தையாகவே பிறந்தது. அவரது நம்பிக்கை பொய்க்கவில்லை. பெண்குழந்தை பிறந்ததில் இருந்து அவர் தொட்டதெல்லாம் துலங்கியது. வியாபாராம் அமோகமானது.

## 1984

வடமராட்சியில் வியாபார அலுவலாக தொண்டமனாறு வீதியால் சிவத்தார் போய்க்கொண்டிருக்கும்போது, அங்கு சனநடமாட்டத்தில் சிறிது மாற்றம். சட்டென அதனை சிவத்தார் உணர்ந்து கொண்டார்.

தனது சைக்கிளை நிறுத்தி, வீதியில் போய்க் கொண்டிருந்தவரிடம் "என்னடா தம்பி சனமெல்லாம் பதற்றப்பட்டுக்கொண்டு போகுதுகள், உங்கால எங்கேயும் ஆமி நிக்குதோ?" என்று கேட்டார்.

"ஓம் அண்ணை, உதில நெடியகாட்டுக்கு கிட்ட நிக்கிறாங்களாம், உங்கை எங்கை போறாய்? ஒழுங்கைகளுக்கால போ. உதுக்குள்ளை போய் கரைச்சல் படாமல்." என்றவாறு சைக்கிளில் வந்தவர் கடந்து சென்றார். யார்? எவர்? என்று தெரியாத ஒருவரின் அறிவுரையை ஏற்று ஒழுங்கைகளுக்குள் சங்கமித்தார் சிவத்தார். பாதுகாப்பாக போக வேண்டிய இடத்துக்கும் போனார்.



## 1987

யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலை கட்ட வந்த சிவத்தார், வல்லையில முனியப்பரை கும்பிட்டுவிட்டு வெளிக்கிடும்போது ஏற்கனவே புகையிலை ஏத்திக்கொண்டு வந்தவர்களிடத்தில், புகையிலை நிலைவரத்தை கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது திடீரென்று

"நெல்லியடிச் சந்தியால போகலாமே? ஆமி நிக்குதோ?" என்றொரு கேள்வியைக் கேட்டார்.

"ஓமண்ணை. ஆமி நிக்கிறாங்கள் எண்டு சனம் சொல்லித்தான், நாங்கள் சுத்தியடிச்சு மண்டானுக்கால வந்தனாங்கள்", என்றார்கள் அவர்கள்.

" அறுவார் நிம்மதியாக தொழில் செய்யவும் விடமாட்டாங்களாம். முனியப்பர்தான் துணை" என்று புறுபுறுத்தவாறே கிளம்பினார் சிவத்தார்.

என்னதான் பிரச்சினை என்றாலும் தனது வியாபாரங்களில் கண்ணும் கருத்துமாக தொழிலை நடத்தி வாழ்க்கையில் தன்னிறைவை அடைந்து, ஒரு மாதிரி யாழ், நகரில், ஒரு வீட்டையும் சிவத்தார் கட்டி விட்டார். 1987 ஜுலையில், யாழ்ப்பாணத்துக்கு இந்திய இராணுவத்தின் அமைதிப் படை வருகை சிவத்தாரின் மனதில் புதிய நம்பிக்கையை விதைத்திருந்தது. சிவத்தாரின் தகப்பன் காந்தியைப் பற்றி சொன்ன வார்த்தைகள், படித்த புத்தகங்கள் இந்திய அமைதிப்படையின் மீது பெரும் நம்பிக்கையை சிவத்தாரின் மனதில் விதைத்திருந்தது.

மூத்தவன் 15 வயதானாலும் பார்ப்பதற்கு 20 வயது மதிக்கத் தக்கவனாகவே இருப்பான். சாதாரணமாக மகிழ்வைத் தர வேண்டிய விடயம், ஆனால் நாட்டின் நிலைமை அடிவயிற்றில் புளியைக் கரைப்பதாகவே இருந்தது. தனது பிள்ளைகள் வளர வளர, நாட்டிலுள்ள போராட்ட நிலைமை தன்பிள்ளைகளையும் பலிகொண்டு விடுமோ என்று பயந்து கொண்டிருந்தவருக்கு இந்திய அமைதிப்படையினரின் வருகை, பிள்ளைகளின் எதிர் காலத்தின் மீது எதிர்பார்ப்பை தந்தது. ஆனால் 1987 செப்ரெம்பருடன் அந்த நம்பிக்கைகள் காணாமல் போயின.

## 1988

இம்முறை வாழைக்குலை கட்டுவதற்காக நீர்வேலிக்கு சென்றார் சிவத்தார். வழியில் அவரை இடைமறித்த, வியாபாரி ஒருவர் "கரந்தன் சந்தியால போகவேண்டாம்" என்றார்.

"ஏன்? ஆமி நிக்குதோ?"

"ஓம், பெடித் தரவழியளை தலையாட்டி வைத்து பிடிக்கிறாங்களாம். அந்தப்பக்கம் போகாதை அண்ணை"

'யார் பெற்ற பிள்ளைகளோ?' சிவத்தாரின் நெஞ்சை ஏதோ அடைப்பதுபோல் இருந்தது. மனதை ஏதோ குழப்ப, வீட்டுக்கு திரும்பினார்.

"என்னப்பா? வேளைக்கே வந்திட்டீங்கள்? நான் பயந்து கொண்டிருந்தனான், கரந்தன் பக்கம் ரவுண்டப் என்று கடையடியில் கதைச்ச்வை" மனைவி பதைபதைத்தாள்.

"தம்பி எங்கை?"

"பெடியளோட காலமையே வாசிகசாலைக்கெண்டு போனவன் இன்னும் வரேல்லை"

"என்னப்பா சொல்லுறாய்? காலம் கெட்டுக்கிடக்கு, அறுவாற்ற கண்ணில பட்டால் போச்சு " என்றவர், மற்றப் பிள்ளைகளைப் பார்த்து, "நீங்கள் ரண்டுபேரும் என்ன செய்யிறீங்கள்? போய்ப் படியுங்கோ பார்ப்பம்." என்று உத்தரவிட்டார்.

கேற்றடியில் யாரோ கூப்பிடும் சத்தம் .

"சிவமண்ணை உன்ர மூத்த வனை ஆமி பிடிச்சுக்கொண்டு போறாங்கள். கெதியா மாஸ்ரரை கூட்டிக்கொண்டு போய் அவங்களோட கதைச்சு பெடியனை கூட்டிற்று வா. ஏத்திக்கொண்டு போனாங்கள் எண்டால் பிறகு தேடிப்பிடிக்கிறது கஸ்ரம்" கோயிலடி மணியத்தின் குரல் பதற்றத்துடன் கேட்க, சிவத்தாருக்கு தலைசுற்றியது. சிவத்தாரின் மனைவியோ ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

"அண்ணை நீ வேட்டியோட வாசிகசாலையடிக்கு ஓடிப்போ, நான் மாஸ்ரரை கூட்டிக்கொண்டு வாறன் "என்றவாறு, கோயிலடி மணியம் நிலைமையை உணர்ந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு மாஸ்ரர் வீட்டுக்கு ஓடினார். இவர்கள் போவதற்குள்ளாகவே பிடித்தவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ஆமி போய்விட, சில நாட்கள் இராணுவ முகாம்களுக்கு அலைந்து, காலில் கையில் விழுந்து மகனை மீட்டெடுத்தார் சிவத்தார். மகனை மீட்டெடுத்தனரே ஒழிய, மகன் இயல்பிழந்து போனதை காலம் செல்லத்தான் உணர்ந்தனர் பெற்றோர். ஆனால் உணர்வதற்குள் எல்லாம் கைமீறிப் போயிருந்தது. நடைப்பிணமான சிவத்தார், மீதி இரு பிள்ளைகளுக்காக இயங்கத்தொடங்கினார்.

## 1995

யாரும் எதிர்பாராத இடம்பெயர்வு .

வலிகாமம் மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னி என சென்றனர். குடும்பத்தினரை பத்திரமாக தென்மராட்சியில் வீடொன்றில் கூட்டத்தோடு கூட்டமாக விட்டுவிட்டு சில சமான்களை எடுத்துவர மீண்டும் வாதரவத்தைக்குள்ளால் யாழ்.நகர் நோக்கி சென்றார் சிவத்தார்.

வயதின் இயலாமை மெதுவாக எட்டிப்பார்க்கத் தொடங்கியிருப்பதும், மனதளவில் துவண்டிருப்பதும் சைக்கிளை மிதிப்பதில் சோர்வை ஏற்படுத்தியிருந்தது.

தளர்வுடன் சென்றவரை

"எங்கே ஐயா சாகவோபோறீங்கள்? "என்ற வார்த்தை தடுத்து நிறுத்தியது.

"ஆமி நிக்குதோ?"

"வாதரவத்தைச் சந்தியடியில் நிக்கிறாங்களாம்….."

சைக்கிளை அப்படியே திருப்பினார்.

## 2001

சிவத்தார் பெருமாள் கோயிலை வலம்வந்து கும்பிட்ட பின்னர் சற்று ஆற அமர்ந்திருந்தார். நேரம் போகப் போக, யோசனை கூடிக்கொண்டே போனது.

'ரவுண்டப்புக்கள் அடிக்கடி நடந்துகொண்டிருக்கின்றன. காலங்கள் மாறுது, காட்சிகள் மாறுது ஆனால் ரவுண்டப்புக்கள் அப்படியேதான்….'

"தம்பி டேய் ,உங்க உங்கட கம்பசைச்சுத்தி ஆமி நிக்குதோ?"

"ஓம் ஐயா, பொங்குதமிழ் செய்யப் போகிறாங்களாம்! கம்பசைச் சுத்தி ஒரே ஆமி"

சிவத்தாருக்கு 'திக்' என்றது. இரண்டாவது மகன் கம்பசுக்குப் போனவன்.

உடனே வீட்டுக்கு கிளம்பினார். வீட்டில் மகன் இருப்பதை கண்டபின்தான் நிம்மதி.

"ஏன் படிப்புகள் இல்லையே?"

"இல்லை. ஒரே ஆமி, அதுதான் திரும்பி வந்திட்டம்"

## 2005

பிறந்ததில் இருந்து பல இடம்பெயர்வுகள், ஏற்றங்கள், இறக்கங்கள் .

இருந்தபோதும் இன்றுவரை ஒரு நப்பாசை. மூத்தவன் ஒருநாள் வருவான் என்று. மூத்தவனின் சிந்தனையுடன், ஓட்டோவில் மகளையும் ஏற்றிக்கொண்டு, உரும்பிராயில் உள்ள மகளின் மாமியார் வீட்டுக்கு போய்க்கொண்டிருந்தார்.

மகளின் அலைபேசி சிணுங்க, கவனம் கலைந்தார் சிவத்தார்.

"ஹலோ…. ஓம் மாமி, பலாலி ரோட்டாலதான் வாறம்"

"ஏன்?"

"ஆ…. அப்ப உள்ளால வாறம்"

தன்னையே பார்த்துக்கொண்டிருந்த அப்பாவிடம் "கொன்வே" வரப்போகுதாம். உள்ளால வரச்சொல்லுறா" என்றாள் அவள்.

" ஓ, ஆமி நிக்குதாமோ?"

"ஓம், கெதியா ரோட்டைக் கடந்து வரட்டாம்"

"ம்…ம்…ம்…. இப்படி கெதியா பிரன்ஸ்சுக்கும் நீ போய்விட்டால், எனக்கும் அம்மாவுக்கும் நிம்மதி."

"என்னப்பா செய்கிறது? வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டு செய்தாச்சு. அங்கே கார்ட் கிடைக்கும்வரை பொறுமையாகத்தான் இருக்கவேணும். அதுவரை மாமியைச் சமாளிக்கிறதுதான் பெரிய வேலை. ஒவ்வொண்டுக்கும் சும்மா சும்மா குறைசொல்லிக்கொண்டே இருப்பா. இனி அங்கே இருக்கின்ற நாளில் இவரும் என்னோட வடிவா கதைக்கமாட்டார்."

சலித்துக்கொண்டாள்.

## 2020

" இஞ்சேரப்பா என்ன செய்யிறீங்கள்? நெடுக உந்தப் போனை நோண்டிக்கொண்டு தான் இருப்பியள். பிள்ளையள் இருந்தாலும் பொழுது போகும். ஊரடங்கைப்போட்டு வெளிக்கிட முடியாம செய்துபோட்டாங்கள். எங்கட சந்தியிலும் ஆமி நிக்கிறாங்களே? இல்லாட்டி ஒருக்கா சந்தியைத் தாண்டிவிட்டால், பெடி வீட்டை ஒருக்காப் போய்வரலாம்."

" நிக்கிறாங்கள் நிக்கிறாங்கள் நாங்க கட்டையில போகும் வரைக்கும் நிற்கத்தான் போறாங்கள். பிரான்சில் இஞ்சத்தையைவிட கொரோனாவும் கூடவாம், சாவும் கூடவாம்! பெட்டை போனில கதைக்கும்போது சொன்னவள்"

"அங்கேயும் ஆமி நிக்குதாமே?"

மனைவியை முறைத்தவர், லாண்ட்மாஸ்ரரில் மரக்கறி வர, வேண்டுவதற்காக ஓடிப்போனார்.

"இஞ்சேரப்பா முகத்தில துணியைக் கட்டிக்கொண்டு போங்கோவன்"

## 2021

" தம்பி மருதனார் மட சந்தையடியில ஆமி நிக்குதோ?"

"இல்லை அப்பு, மரக்கறி வேண்டலாம் போங்கோ"

சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் மரக்கறி வேண்டிக் கொண்டுவந்தவர், அடுத்தநாள் மனைவியிடம்"சாதுவாக உடம்பு உளையுது" என்றார்.

உடம்புளைவுடன், காய்ச்சலும் கூடி மூச்சுவிட கொஞ்சம் கஷ்டப்பட, சிவத்தாரை ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு செல்ல அம்புலன்ஸ் வந்தது.

மனைவியைப் பார்த்தார் சிவம்,

"நான் தனிய எண்டு யோசிக்காதையுங்கோ, கொரோனா என்று ஸ்டிக்கரும் ஒட்டி வாசலில் ஆமியும் நிக்குது. கள்ளர் பயம் இல்லை. கவலைப்படாம வருத்தத்தை மாத்திக் கொண்டு வாங்கோப்பா"

சிவத்தார் தலையை அசைத்தார்,

"அதில்லையடி கவனமாக இரு, மூத்தவன் எப்பிடியும் திரும்பி வருவான். அவன் வரேக்க எங்களில் ரெண்டு பேரில ஒருத்தராவது உயிரோட இருக்க வேணும் " கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க தலையைத் திருப்பிக் கொண்டார்.

போனவர் போனவர்தான். சிவத்தார் சிவமாகிக் கொண்டார். இப்போது வாசலில் யாரும் இல்லை. யாரும் வரப் போவதும் இல்லை.



# நவீன மகாபாரதம்

○ ம.மயூரபாலன்

ஒருநாள் வசிட்ட மாமுனிவர் பாஞ்சாலம் நாட்டுக்குச் சென்றபொழுது அந்த நாட்டின் மன்னன் தனது மகளான திரௌபதியை அவரிடம் சென்று ஆசி பெற்றுவருமாறு அனுப்பினான். அவளும் சென்று வசிட்ட மாமுனிவரை வணங்கி தனது எதிர்காலம் பற்றி அவரிடம் கேட்டாள். அதற்கு வசிட்டரும் "எதிர்காலத்திலே இரத்த ஆறு ஓடுவதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்கும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாவதற்கும் நீயே காரணமாக இருப்பாய்" என்று கூறினார். அதனைக் கேட்டதும் திரௌபதிக்கு மிகவும் கவலை உண்டாகியது. "ஐயா இதனைத் தடுப்பதற்கு ஏதாவது வழிவகைகள் உள்ளனவா?" என அவள் கேட்டாள். அதற்கு வசிட்டரும் "உன்னாலே மூன்று விடயங்களைச் செய்யமுடிந்தால் இந்தப் பேரழிவு நிகழ்வதைத் தடுக்கலாம்" என கூறினார். "ஒன்று நீ யாரையும் அவமானம் செய்யக் கூடாது. இரண்டாவது யாராவது உன்னை அவமானப்படுத்தினால், நீ அதனையிட்டு கோபம் அடையக்கூடாது. மூன்றாவது அவ்வாறு நீ கோபமடைந்தாலும் பழிக்குப்பழி வாங்ககூடாது" எனக் கூறினார்.

திரௌபதியும் அது மிகவும் எளிமையானது எனக்கூறி அதனை ஏற்றுக் கொண்டு சென்றுவிட்டாள். காலங்கள் உருண்டோடின. ஒரு நாள் நண்பர்கள் படைசூழ வலம் வந்த துரியோதனன் அங்கே இருந்த பளிங்குத் தரைக்கும் நீர்த் தடாகத்துக்கும் வேறுபாடு காணமுடியாது தண்ணீரில் விழுந்துவிட்டான். அதனைக் கண்ட திரௌபதி பெரிதாக சிரித்துவிட்டாள். அந்தச்செயலால் கோபமும் அவமானமும் அடைந்த துரியோதனன் அவளை பகடையாட்டத்தில் வென்று தனக்கு அடிமையாக்கி, துகிலுரிந்து அவமானப்படுத்தினான். இதனால் கடும் கோபமும் பெருத்த அவமானமும் கொண்ட திரௌபதி இதற்கு நான் பழிக்குப் பழி வாங்குவேன் என சபதம் செய்தாள். அதன் காரணத்தால் மகாபாரதப் போர் வெடித்தது.

இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த பழைய கதை. ஆனால் இன்றும் வீட்டிலும் நாட்டிலும் உலகத்திலும் ஏதோ ஒரு வகையிலே மகாபாரதப் போர் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது. குடும்பத்தில் பிரச்சினை, வேலையில் பிரச்சினை மற்றும் உடல் உளம் சம்பந்தமான பிரச்சினைகள் என நாற்புறமும் இருந்து அம்புகள் நம்மை நோக்கிப் பாய்ந்த வண்ணம் உள்ளன. அவை போதாதென்று அதற்கு மேலே தொற்று நோய் ஒன்று உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றது. இவை எல்லாவற்றினதும் மத்தியில் நமது உள்ளம் அமைதி, ஆனந்தம் என ஏங்குகிறது. இந்தச் சொற்களைக் கேட்பதே அரிதாக இருக்கும் இந்தக் காலகட்டத்தில் அவற்றை உணர்வது என்பது நிச்சயமாக எட்டாக்கனியாகவே உள்ளது.

அர்ஜுனனுக்கு வழிகாட்டுவதற்கு அன்று கிருஷ்ணர் இருந்தார். இன்று கூகிள்தான் நம்மில் பலரதும் முதன்மை வழிகாட்டியாக உள்ளது. அதில் மக்களுக்கு வழிகாட்டுவதாக சொல்லும் பலரும் நம்மை இருளிலிருந்து ஒளிக்குக் கூட்டிச் செல்வதற்குப் பதிலாக, இருளிலில் இருந்து மேலும் இருளுக்குக் கூட்டிச் செல்பவர்களாகத்தான் உள்ளார்கள். ஒருபொழுதும் இல்லாதவாறு இன்று தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. கல்வி கற்றவர்களின் தொகை மிகவும் அதிகமாக உள்ளது. முன்னர் ஒரு பொழுதும் இல்லாதவாறு இன்று இந்த உலகில் அதிக அளவு தங்கம் ,வைரம், பணம் என செல்வங்கள் நிறைந்துள்ளன. இவைகளெல்லாம் ஒரு மனிதனுக்கு ஆனந்தத்தையும் அமைதியையும் தரும் என எண்ணினால், நாம் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இப்பொழுது ஆனந்தமாகவும் அமைதியாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நாம் உலகத்தைப் பார்த்தோம் என்றால் அதற்கு எதிர்மாறாகத்தான் நடைபெறுகிறது.

ஒரு காலத்தில் மக்கள் மிகவும் அன்புடனும் கருணையுடனும் இருந்தார்கள். தமது வீடுகளுக்கு முன்னாலே ஒரு திண்ணையை அமைத்து வருவோர் போவோர் அமர்ந்து இளைப்பாறிச் செல்வதற்கு வழி செய்தார்கள். ஆனால் இன்று கோபமும், விரக்தியும், வெறுப்பும் தலைதூக்கி நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. இதிலிருந்து ஏதோ ஒரு செய்தி நமக்கு மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. எவையெல்லாம் நமது வாழ்க்கையின் தரத்தை அதிகரிக்கும் என எண்ணினோமோ அவை அவ்வாறு செய்வது போலத் தெரியவில்லை.

நாட்டைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் நம்மால் பெரிதாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும், நாம் நமது தனிப்பட்ட வாழ்க்கையிலே அந்த மூன்று விஷயங்களையும் பின்பற்றுவதற்கு முயற்சி செய்தோம் என்றால் குறைந்த பட்சம் நமது வாழ்க்கையில் அந்தப் போர்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கமுடியும். அவ்வாறு வீட்டிலே ஏற்படுகின்ற மாற்றம் நமது கிராமத்திலும் நகரத்திலும் ஏற்படும்பொழுது, அது இந்த உலகத்திலேயே ஒரு நல்ல மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.



ஆனால் இந்த மாற்றங்கள் ஒருநாளிலே ஏற்படப் போவதில்லை. ஆனால் அது இலகுவான விஷயமாக இல்லாவிட்டாலும் மெதுவாக மெதுவாக முயற்சி செய்யும்பொழுது அதுவே நாளடைவில் நமது இயல்பாக மாறி, நாம் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கு வழிவகுக்கும்.

வாழ்நாள் முழுவதும் காடுகளில் சுற்றித் திரிந்த காட்டுக் குதிரைகளை விசிலடித்து ஒருநாளில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதென்பது நடக்க முடியாத சம்பவம். ஆனால் மெதுவாக மெதுவாக பயிற்சி கொடுக்கும் பொழுது காட்டுக்குதிரைகள் கூட கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுகின்றன. அது போலவே நாமும் சிறு வயதிலிருந்து செய்துவரும் பழக்க வழக்கங்களில் சில மாற்றங்களைச் செய்யும் பொழுது அவை நமது வாழ்வில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவருகின்றன. இப்பொழுது நாங்கள் நமது வாழ்வில் செய்யும் விஷயங்களில் எவை நமக்கு ஆனந்தத்தையும் அமைதியையும் கொண்டு வருகின்றன என்பதையும், எந்த விடயங்கள் எமது அமைதியைக் குலைத்து ஆனந்தத்தை திருடு கின்றன என்பதனையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இப்பொழுது எவையெல்லாம் நமது நிம்மதியைக் குலைக்கின்றனவோ அந்தப் பழக்கவழக்கங்களை மெதுவாக குறைக்க வேண்டியது நமது தலையாய கடமை ஆகிறது. நமக்கு தரப்பட்ட இந்த வாழ்விலே நன்மையையும் தீமையையும் நாமே அனுபவிக்க வேண்டியுள்ளது. நமக்கு பசி ஏற்படும் பொழுது அதனை வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ளமுடியாது. நமது உடலில் நோய் ஏற்படும் போது மற்றவர்கள் ஆறுதல் மட்டும் சொல்லலாமேயன்றி அந்த வேதனையை நாங்கள்தான் அனுபவிக்கவேண்டும். அது மட்டுமன்றி பெற்றோர், பிள்ளைகள், குடும்பம் என இப்பொழுது பலர் நம்மைச் சுற்றி இருந்தாலும், நமது இறுதி மூச்சுவரை நம்முடன் இருக்கப்போவது நாங்கள் மட்டுமே. நமது நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும் வாழ்க்கையில் இந்த உண்மைகள் ஒருபோதும் மாறுவதில்லை. ■



# ஊர்ப்புதினம் 10

○ இராகவன்

பொன்வண்டு பிடிக்கிறது ஒரு த்ரில்லிங்கான அனுபவம். முதல்ல ஒதிய மரத்தைத் தேடிப் போவம்.

ஊருக்க சில ஒதியமரங்கள் நிக்கும். அப்ப எல்லா இடமும் கதியால் போட்டுத்தான் வேலி அடைச்சிருப்பினம். மதில் கட்டின வீடோ,காணியோ வலுகுறைவு. முதல்ல எங்கெங்கை ஒதிய மரங்கள் நிக்குதெண்டு நோட்டம் விடுவம். பிறகு ரண்டு, மூண்டு யானை மார்க் நெருப்புப் பெட்டியள் எடுத்து அதுக்குள்ள கொஞ்சங் கொஞ்சம் கிளுவந் துளிருகளைப் போட்டு மூடிக் கொண்டு ஏற்கனவே பாத்து வைச்சிருந்த மரத்தடிக்கு போய் , ரண்டு மூண்டு பேராச் சேந்து நிண்டு, மரத்தை ஒருக்கா உலுப்புவம். அந்த நேரத்தில ஒதிய மரத்தில இருக்கிற பொன்வண்டுகள் வெளிக்கிட்டுப் பறக்கும். அதுகள் எங்கை பறந்து போகுதுகள் எண்டு வேவு பாக்கிறதுக்கு ஒராள் பக்கத்தில நிக்க வேணும். ஆனந்தன் எங்களை விடச் சின்னப்பொடியன் எண்டதால அவனைத்தான் வேவு பாக்கிறதுக்குப் பக்கத்தில நிப்பாட்டி வைச்சிட்டு , நானும் மோகனும் ஒதிய மரத்தை உலுப்புவம். எப்பிடியாவது குறைஞ்சது ஒரு பொன்வண்டாவது அதிலயிருந்து வெளிக்கிடும். அப்படி வெளிக்கிடுற பொன்வண்டு பக்கத்திலயிருக்கிற கிழுவை மரத்தில்தான் போயிறங்கும். ஆனந்தன் வேவு பாக்கிறதில வலு விண்ணன்.

ஒதிய மரத்திலிருந்து வெளிக்கிட்ட பொன்வண்டு எந்த கிளுவை மரத்தின்ர கொப்பில போய் இறங்கியிருக்கும் எண்டு அச்சொட்டாய்ச் சொல்லுவான். அவன் சொன்னபடியே நாங்களும் அந்த கிளுவை மரத்தின்ர கொப்பை மெல்ல மெல்ல வளைச்சுப் பொன்வண்டைப் பிடிப்போம். பொன்வண்டு கிடைக்காட்டி தும்பி பிடிப்பம்.





மாம்பழத்தும்பி, செந்தும்பி, கருந்தும்பி, ஊசித்தும்பி, பெருந்தும்பி எண்டு விதம் விதமான தும்பியளெல்லாம் பறந்து திரியும். அதுகளெல்லாம் வந்து அலம்பல் வேலிகளில்தான் இருக்கும். அடி மேல் அடி வைச்சு, மெல்லமெல்ல நகர்ந்து போய்த்தான் தும்பியளைப் பிடிக்கோணும். 'பக்'கெண்டு போனாப் பறந்திடும். சில பொடியள் தும்பியைப் பிடிச்சு அதின்ர வாலில நூலைக் கட்டிப் பறக்க விடுவாங்கள்.

**மெல்ல மெல்ல நகர்ந்து போய்த்தான் தும்பியளைப் பிடிக்கோணும். 'பக்'கெண்டு போனாப் பறந்திடும். சில பொடியள் தும்பியைப் பிடிச்சு அதின்ர வாலில நூலைக் கட்டிப் பறக்க விடுவாங்கள்.**

இல்லாட்டி தும்பியின்ர வாலிலை குண்டூசி ஏத்துவாங்கள். ஆனால் நாங்கள் அதெல்லாம் செய்யிறேல்ல. சும்மா ஆசைக்குப் பிடிச்சுக் கொஞ்ச நேரம் வைச்சிருந்திட்டு பிறகு விட்டுடுவம். அவ்வளவுதான்.

உலுவி இலச்சுமியக்கையின்ர வீட்டுக்க ஒரு பனங்காணியிருக்கு. அதுக்க ஐயாப்பா வீடு. அந்தக் காலத்தில கிணறு மலசலகூட வசதியளோடயிருந்த ஒரே கல் வீடு ஐயாப்பா வீடுதான். ஊர்ப்புதினத்தில அந்த வீட்டுக்கு ஒரு பெரிய வரலாற்று முக்கியத்துவமிருக்கு.

அதென்னெண்டால் அந்தக் காலத்தில பிரபலமாயிருந்த இயக்கமெல்லாம் அந்த வீட்டிலதான் மாறி மாறி முகாமிருக்கிறது ஒரு வழக்கமாயிருந்தது. நான் குமரப்பா, புலேந்திரன் ஆக்களை நேரில் பார்த்தது ஐயாப்பா வீட்டிலதான். வீட்டுக்கு முன்பக்கம் டபிள்கேற் .

அதோட ஒரு சிங்கிள் கேற்றுமிருக்கு. பின்னேரங்களில் இயக்கங்களின்ரை பெரிய தலைவர்மார் அந்தச் சிங்கிள் கேற் வாசல் படியிலதான் வந்திருப்பினம். அப்படித்தான் ஒருநாள் பின்னேரம் நான் இளையண்ணையோ அந்த வீட்டடியால போகேக்குள்ள ரண்டு பேர் வெளிப்படியில் இருந்திச்சினம். ஒருத்தர் தாடி வைச்சிருந்தார். மற்றவர் தடிச்ச மீசை வைச்ச சிவலை. அந்த இடத்தைக் கடந்தாப்போல இளையண்ணை மெதுவாச் சொன்னார் "உவங்கள்தான் குமரப்பாவும் புலேந்திரனும்"எண்டு.

(தொடரும்)

© 2000 Agfa-Gevaert N.V.

# பிணங்களின் ரயில்

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை

12

